கல்கி

KALKI

5.7.1970

40 காசு



ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன

தொடர் கதை ஆரம்பம்





விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள் சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று! சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!

இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள். ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.

® டினோபால் என்ற பெயர் ஜெ.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பாஸல் ஸ்விட்சர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR.

Shilpi HPMA 12A/79 Tam

சாதாரண, ஆனி. 21 :: 1970, ஜூலை 5

கல்கி


பொருளடக்கம்

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

'ரெகார்டைத் தகர்த்த குழந்தை

ஐந்தாவது மாதத்தில் அனு உட்கார ஆரம்பித்தான். ஒன்பது மாதங்களில் அவனது பிறப்பு எடை மும்மடங்காகியது...படு சுட்டியாக வளைய வரும் இக்குழந்தையைத் தாய்மார்கள் வியப்புடன் கண்டு மகிழ்ந்தனர். அவனுடைய வலிமையான ஆரோக்கியத்தின் இரகசியம்: விசேஷமான ஒரு குழந்தை உணவு.



'ரெகார்டைத் தகர்த்த குழந்தை உணவு.

அறிமுகப்படுத்திய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே குழந்தை உணவுகளுக்குள்ளேயே உச்ச விற்பனை எய்தியுள்ள அமுல்ஸ்ப்ரே ஒரு புதிய சாதனை புரிந்துள்ளது. அருமையான உங்கள் குழந்தைக்கு விசேஷமான ஊட்டச் சத்தை அளிப்பதற்காக ஒரு விசேஷமான செய்முறை (ஸ்ப்ரே-டிரையிங்) மூலம் விசேஷ ஆக்கம் பெற்றது அது. சீரணிக்க எளிதான அமுல்ஸ்ப்ரே சக்திமிகுமான ஊட்டச் சத்தை அளிக்கிறது: அவசியமான வைட்டமின்கள், தாதுப் பொருள்கள் உள்பட உடலூரம் மூளையும் வளர அதிக அளவில் தரமான புரதச்சத்து.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாக புகட்டச் சிறந்தது.

ASP/AS-16



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ❁ இதழ் 49

காமராஜரின் அறைகூவல்

ஸ்ரீ காமராஜ் ஒரு பெரிய வேண்டுகோள் விடுத்திருக்கிறார். பாரதத்தின் இன்றைய சீர்கேடான நிலைமையின் தேவைக்கு ஏற்பப் பேசியிருக்கிறார். நாட்டைக் காப்பாற்றுவதற்காக உடனடியான நடவடிக்கைகளைத் தேசத்தின் மதிப்புமிக்க தலைவர்கள் ஒன்றுகூடி உருவாக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஸ்ரீமதி இந்திரா காந்தி இந்தியாவைப் பேராபத்தில் விட்டுவிட இருக்கிறார் என்று ஸ்ரீ காமராஜ் உணர்ந்துள்ளார். இந்த அபாயத்தின் தன்மையைத் தம்மைப் போல் உணர்கின்ற தலைவர்கள், மேலும் காலம் கடத்தாமல், பிரதமரைப் பதவியிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார். தலைவர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து, குறைந்தபட்ச வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்கி வெளியிட வேண்டும் என்பது அவரது கோரிக்கை. இப்போதைக்கு மற்ற திட்டங்கள் எல்லாவற்றையும், தத்தம் தனிப்பட்ட கொள்கை மாறுபாடுகளையும் மறந்துவிட வேண்டும் என்ற சரியான யோசனையை வெளியிட்டிருக்கிறார் அவர்.

பிரதம மந்திரி பதவி ஸ்ரீமதி இந்திரா காந்திக்குக் கிடைப்பதற்காகத் தாம் உதவியது பெரும் தவறு என்பதை ஸ்ரீ காமராஜ் உணர்ந்துள்ளார். இதை அவரே தைரியமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். முன்பு வெளிப்படையாக எடுத்துக் கொண்ட நிலைகளை அவை தவறு என்று உணர்ந்தபின் அவற்றைக் கை விடுவது சுலபமல்ல. மிக உயர்ந்த மனோதைரியம் அதற்குத் தேவை. அந்த தைரியத்தை ஸ்ரீ காமராஜ் காட்டிவிட்டார். பிறருக்கு ஒரு வழிகாட்டியாகவும் அவர் இப்போது விளங்குகிறார். தம்மைப்போல் நினைக்கும் சகாக்களையும் அதே தைரியத்துடன் நடந்து கொள்ளச் செய்வது என்று அவர் உறுதி பூண்டிருக்கிறார். இரண்டு கம்யூனிஸ்டு வல்லரசுகளில் ஒன்றுக்கு அடங்கிய சார்பு நாடு ஆகிவிடாதபடி இந்தியாவைக் காப்பாற்ற வேண்டும். ஸ்ரீ காமராஜின் வேண்டுகோளுக்கிணங்கி உழைப்பதுதான் அதற்குச் சிறந்த வழி.

ஸ்ரீமதி இந்திரா காந்தியோடு போட்டி போட்டுக்கொண்டு கோஷங்களை எழுப்பி வந்துள்ள தலைவர்களுக்கு அவற்றை இப்பொழுது விட்டுவிடுவது சிரமமாக இருக்கும். அக்கோஷங்கள் மழை பெய்யாமல் வானில் சஞ்சரிக்கும் முகில்கள் என்பதை உணர வேண்டும். இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகக் கற்பனை உலகத்தை" விட்டுவிட்டு நடைமுறை காரியத்துக்கு உதவும்படியான முறையில் திட்டங்களைத் தலைவர்கள் வெளியிட வேண்டும். காந்திஜி காண்பித்தது போன்ற மகத்தான ஆன்மிக வலிமையும், தைரியமும் இந்தப் பணியில் காட்டுவது அவசியம். இதைச் செய்துதான் ஆக வேண்டும். ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து இருந்து வருவதற்காகக் கம்யூனிஸ்டுகளையும், அவர்களது சார்பினரையும் ஸ்ரீமதி இந்திரா காந்தி நம்பி நடந்து வருகிறார். அவர்களுடைய பின்பலத்துடன் இந்தியாவை ஆபத்தான பாதையில் அவர் இட்டுச் செல்கிறார். இந்தியாவை அதனின்றும் காப்பாற்றுவதற்குத் தைரியமான நடவடிக்கை ஒன்றே வழி. ராஷ்டிரபதித் தேர்தலில் தமது கட்சி யாரைத் தெரிந்தெடுத்ததோ, யாருடைய நியமனப் பத்திரத்தைத் தாமே தாக்கல் செய்தாரோ, அந்த அபேட்சகரையே ஸ்ரீமதி காந்தி காலை வாரி விட்டார். பிரதம மந்திரி என்ற வகையில் தமது செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்திப் போட்டி அபேட்சகரின் வெற்றிக்கு வேலை செய்தார். இந்த நெறிமுறையில்லாத நடத்தைக்கு அவர் எவ்விதமான விளக்கமும் தரவில்லை. வெளிப்படையாக அறிக்கை எதையும் விடவில்லை. அவரது இந்தத் தவறான நடத்தையை என்றுமே மக்கள் மறக்க முடியாது. சரித்திரத்திலிருந்து அதை அழித்து விடவும் முடியாது. காந்திஜி இன்று உயிர் வாழ்ந்திருந்தால் பிரதமரின் இந்த நடத்தைக்காக உண்ணாவிரதத்தை



மறைமுகவரிகளும் விலைவாசி உயர்வும்

மேற்கொண்டிருப்பார் என்று ஸ்ரீ சந்தானம் அவர்கள் எழுதி யிருக்கிறார். கம்யூனிஸ்டுகளும், அவர்களது சார்பினரும் தரும் ஆதரவைப் பிரதமர் நம்பியிருக்கிறார். ரஷ்யாவுக்குச் சாதகமாக இணைந்து கொள்கிறார். இவற்றின் காரணமாக அவரது ஆட்சியானது ஜனநாயகத்துக்கும் இந்தியாவின் சுதந்திரத்துக்கும் பேராபத்தாகி விட்டது. ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே விரோதம் இருந்து வருவதைச் சிலர் நம்பி மோசம் போகிறார்கள். இந்த விரோதம் நிலைத்து நிற்கக் கூடியது அல்ல. சீன — சோவியத் விரோதம் நிரந்தரமானது என்று சில மேலை நாடுகள் தப்பாசையுடன் நினைக்கின்றன. இது தவறான கருத்து.

சில இடங்களில் சமீபத்தில் நடைபெற்ற மத வகுப்புக் கலவரங்கள் காரணமாக அயல் நாடுகளில் இந்தியாவின் நற்பெயருக்கு மாசு விளைந்துள்ளது என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறுகிறார். நமது நற்பெயருக்கு மாசு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையே. ஆனால் ஸ்ரீமதி இந்திரா காந்தி சொல்லும் காரணங்களால் அது ஏற்படவில்லை. அதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவின் பல பகுதிகளில் சட்டமும், அமைதியும் நிலைகுலைந்து போய்விட்டன. வன்முறைகளைக் கையாளும் கம்யூனிஸ்டுகள் தேசமெங்கும் அமைதியின்மையைத் தாராளமாகத் தோற்றுவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணங்களால்தான் இந்தியாவின் நற்பெயருக்கு மாசு ஏற்பட்டுள்ளது. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நிலங்களையும், புறம்போக்கு நிலங்களையும் கைப்பற்றுவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் திட்டம் போட்டுப் பேசுகின்றன. இது அரசாங்கத்துக்கே வெளிப்படையான அறைகூவல். ஆனால் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் சர்க்கார் இந்த அறைகூவலுக்குச் சரியான பதில் இன்னும் கொடுக்கவில்லை. ஸ்ரீமதி நயனதாரா சேகல் எழுதியிருப்பதுபோல் உலக ராஜதந்திரிகளின் பார்வையில் இந்தியா அருவருக்கத்தக்க ஓர் அநாமதேய நிலைக்கு விழுந்து விட்டது. இந்தோசீனா விஷயத்தில் ஸ்ரீமதி இந்திரா காந்தியும், அவரது சர்க்காரும் கொண்டுள்ள மனப்பான்மையும் நடவடிக்கையும் இந்த மதிப்பு வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம்.

நாம் சோவியத் ரஷ்யாவின் பக்கம்தான் என்பதை ஸ்ரீமதி இந்திரா காந்தி தெளிவுபடுத்தி விட்டார். அவருக்கு நிர்வாகத் திறமை போதாது. எனினும், வர வரத் தனியார்த் துறையிலிருந்து அதிகமான பொறுப்புக்களை எடுத்து, நிர்வாகம் படுமோசமாக இருந்து வரும் சர்க்கார்த் துறையிடம் ஒப்படைத்து வருகிறார். பிரிட்டிஷ் பிரதம மந்திரி 'அப்ஸர்வர்' பத்திரிகையில் வெளியிட்ட அறிக்கையில் சத்தியத்துக்கு விசேஷ மதிப்புக் கொடுத்திருக்கிறார். ஆனால் இந்தியாவின் பிரதம மந்திரியோ அதற்கு முற்றிலும் மாறாக நடந்து வந்திருக்கிறார். ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆட்சியின் கீழ் இந்தியாவை எதிர்நோக்கியுள்ள அபாயங்களை ஜெனரல் கரியப்பாவும், ஜெனரல் குமாரமங்கலமும் சரிவர உணர்ந்துள்ளனர். ஆனால் சேனைத் தலைவர்கள் தெள்ளத் தெளியக் காண்கின்ற அபாயத்தைத் தவிர்க்க வேண்டியது, இந்தியாவின் பிரதான ராஜதந்திரிகளின் பொறுப்பு. ஆகையால்தான் 'இந்தியாவைக் காப்போம்' என்ற மகத்தான அறைகூவலை ஸ்ரீ காமராஜ் விடுத்துள்ளார்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

என்ன சேதி?

சென்று வருக!

தமிழக முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் ஜூலை 1ம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு, இத்தாலி, சுவிட்ஜர்லாந்து, பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து, இங்கிலாந்து ஆகிய ஆறு ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறார் என்பதை அறிந்து மகிழ்கிறோம். அவர் அந் நாடுகளில் பெறக்கூடிய புது அனுபவங்களைத் தமிழ் நாட்டுக்குப் பயன்படும் வகையில் சிந்தித்துச் செயல்படுத்தும் ஆற்றல் உடையவர். அவர் பயணம் இனிது முடிவதாக.

நிதிமந்திரி திரு மதியழகன் பிரான்சின் தலை நகரான பாரிஸில் நடைபெறும் உலகத் தமிழ் மகாநாட்டுக்குச் செல்லும் அறிஞர் குழுவுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்கிறார். தமிழோசை உலகமெலாம் கேட்க வகை செய்யும் ஒரு பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறார் மதியழகன். அவர் பணி வெல்வதாக!

திரு ம. பொ. சி. அவர்கள் ருஷ்ய நாட்டில் சுற்றுப் பயணம் செய்யச் செல்கிறார். ஸாரை வீழ்த்திய ருஷ்யப் புரட்சியில் ஈடுபாடு கொண்ட திரு ம. பொ. சி. அவர்கள் தமது கூர்ந்த மதியினால் பழைய புரட்சி ஏற்படுத்திய சாதக பாதகங்களையும் கம்யூனிஸத்துக்கு எதிரான புதிய புரட்சியின் காரண காரியங்களையும் உய்த்து உணர்ந்து நமக்கு விளக்குவாரென நம்பலாம். அப்படியே அங்கு அவரது வயிற்று நோய்க்கும் சிகிச்சை பெற விருக்கிறார். உடல் நலமும் மனவளமும் பெற்றுத் திரும்பி வருவாராக!

சென்னையில் செஞ்சொற் செம்மல்

ஸ்ரீ ராமகிருஷ்ண மட ஸ்தாபனத்தைப் பற்றி அறிந்தவர்கள் ஸ்வாமி ரங்கநாதானந்தா அவர்களை நன்கறிவர். ஞானப் பக்குவமும், அதைப் பொதுமக்களுக்கு ரசமாக எடுத்துச் சொல்லும் அற்புத வாக்குத் திறனும் பெற்ற ஸ்வாமி ரங்கநாதானந்தா அவர்கள் அமெரிக்காவில் நடத்திய அமோகச் சுற்றுப் பயணம் பற்றிக் கல்கியில் அவ்வப்போது நேயர்கள் படித்திருப்பார்கள். இன்று தமது எழுத்தாலும் பேச்சாலும் நமது ஆன்மிகச் செல்வங்களை வெளிநாடுகளுக்கு வாரி வழங்கி வருபவர்களில் முக்கியமான ஸ்தானம் பெற்றவர் ஸ்வாமி ரங்கநாதானந்தா.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நேர் சீடரான ஸ்வாமி சிவானந்தரிடமிருந்து முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், தமது இருபத்தைந்தாவது பிராயத்தில் சந்நியாசம் பெற்ற ஸ்வாமி ரங்கநாதானந்தா அன்றிலிருந்து ராமகிருஷ்ண மிஷனில் பல பொறுப்புள்ள பதவிகளைத் திறம்பட வகித்து, இன்று மிஷனின் நிர்வாகக் குழு அங்கத்தினருள் ஒருவராக விளங்குகிறார். அவரது அபாரமான சொல்லாற்றலின் காரணமாக, அரசாங்கமும் அவரை நமது ஆன்மிகத் தூதராகப் பல நாடுகளுக்கு அனுப்பியுள்ளது.

இந்தப் பெருந்தகையார் ஜூலை நாலாந் தேதியிலிருந்து பன்னிரண்டாம் தேதி வரை சென்னையில் தங்கியிருப்பது நகர மக்களின் நல்லதிருஷ்டமாகும். நகரத்தில் பல இடங்களில் அவரது சொற்பொழிவுகள் நடக்கும். மயிலை ராமகிருஷ்ண மடத்திலிருந்து இவை



குறித்து விவரங்கள் பெறலாம். குறிப்பாக அடியில் காணும் இடங்களில் நடக்கும் உரைகளை நேயர்களுக்கு நினைவூட்டுகிறோம்:

ஜூலை 5 மாலை 5–30
மயிலை ராமகிருஷ்ண மடம்
6 காலை 10–00
விவேகானந்தா கல்லூரி
6 மாலை 5–30 அடையாறு கேட்
(மாணவருக்கு மட்டும்)
7 மாலை 7–30 ரோட்டரி கிளப்
8 மாலை 7–30 லயன்ஸ் கிளப்
9, 10, 11 மாலை 6–30
தி. நகர் சாரதா வித்தியாலயம்
(கீதையின் உபதேசம்)

ஜெய்ப்பூர் மன்னரின் மறைவு

ஜெய்ப்பூர் மன்னர் மான்சிங் இங்கிலாந்தில் திடீர் மரணமுற்றதற்கு வருந்துகிறோம். திரு மான்சிங் முற்போக்கான எண்ணங் கொண்ட மன்னர்களில் முதன்மையானவர். பாரதம் சுதந்திரம் அடைந்ததும் சமஸ்தானங்களை இந்திய யூனியனில் இணைக்கத் திட்டம் வந்தபோது மனமுவந்து முதலில் கையெழுத்திட்டவர். தில்லி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். ஸ்பெயினில் நம் தூதராகப் பணியாற்றினார். சிறந்த போலோ விளையாட்டு வீரர். அவரது மனைவி ராணி காயத்ரி தேவி, சுதந்திரக் கட்சியில் சேர்ந்து ராஜஸ்தானில் பெரும் புரட்சியே உண்டாக்கியிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு இப்படியொரு துயரம் நேர்ந்தது குறித்து மிக வருந்துகிறோம். அவருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ராஜாஜியின் கருத்துக்கள்

பரிசுச் சீட்டுக்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் 'நியாயம்' கூறியுள்ளார். ''லாட்டரியின் மூலம் கிடைக்கும் பணம் பள்ளிக்கூடங்கள், ஆசுபத்திரிகள் முதலியவற்றுக்கு உதவுவதற்கென ஒதுக்கப்படுகின்றன'' என்கிறார். இது நியாயமான காரணமாகிவிட முடியாது. சர்க்காரின் வருவாய் அனைத்துமே நல்ல பணிகளுக்காகப் பயன்படுகின்றன என்று நாம் கருதலாம். குடியின் மூலம் கிடைக்கும் வருமானமும், இன்னும் கீழ்த்தரமாகப் போனால் விபசாரத்தின் மூலம் கிடைக்கும் வருமானமும் நல்ல காரியங்களுக்காகவே செலவிடப்படுகின்றன என்று சர்க்காரால் கூற முடியும். நல்ல காரியத்துக்காகப் பணம் பயன்படுகிறது என்ற வாதம் ஒழுக்கச் சிதைவை மாற்றி விடாது.

★

கலெக்டர்களும் மற்றப் பெரிய அதிகாரிகளும் ஜூன் 21, 22 தேதிகளில் சென்னையில் கூடி ஆலோசித்தனர். அக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் போற்றுதற்குரிய முறையில் பேசினார். மொழிபெயர்த்து எல்லா முதல் அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கக் கூடிய உரை. கட்சித் தலையீடுகளுக்கு இடம் தராமல் நிர்வாகம் நடத்த வேண்டுமெனத் தீர்மானமாகப் பேசினார். அவர் உண்மை உணர்வுடன், மனத்தில் பதியும்படி சொன்ன விஷயங்களை விசுவாசத்துடன், அச்சமின்றி நடத்தி வைத்தால் நல்லாட்சி நிலவும்; பழைய உயர்நிலையைத் தமிழக அரசின் நிர்வாகம் மீண்டும் அடையக்கூடும்.

மாவட்டத் தலைமை அதிகாரிக்கு முழு அதிகாரம் இருக்க வேண்டும். அவர் தைரியசாலியாக இருக்க வேண்டும். மந்திரிகளிடமோ, எந்தக் கட்சியின் தலைவர்களிடமோ அஞ்சுபவராக இருக்கலாகாது. தமது கவர்ச்சியான உரையில் இதை முதலமைச்சர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இதெல்லாம் வெறும் பேச்சு; செயலாக உருப்பெறாது என்று ஸ்ரீ கருணாநிதிக்கும், அவரது கட்சிக்கும் எதிரிடையான சிலர் கூறுகிறார்கள். இது தவறான விளக்கம், தவறான போக்குங்கூட. இவ்வளவு விரிவாகவும், உறுதியுடனும் ஏராளமான அதிகாரிகள் முன்னிலையில் பேசிவிட்டுத் தாம் சொன்னதற்கு விரோதமாக ஒரு முதலமைச்சரால் நடந்து கொள்ள முடியாது. ஸ்ரீ கருணாநிதியின் சகாக்கள் சிலருக்கு அவர் கூறியது முற்றிலும் உவப்பாயிராது. அதிகாரிகள் அவர் சொன்னபடி நடந்து கொள்வதாயின் நிர்வாக அதிகாரத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்களை அந்தச் சகாக்கள் இழந்து விடுவர். ஆனால் முதல் அமைச்சர் தமது கொள்கை விஷயத்தில் உறுதியாக இருப்பதென்று முடிவு செய்து விட்டார் எனத் தோன்றுகிறது. அவரது உரை அதிகாரிகளுக்கு நிச்சயமாகத் தெம்பு ஊட்டியிருக்கும்.

★

பிரிட்டிஷ் தேர்தல் பற்றிய ஜோஸ்யங்கள் யாவும் அடியோடு பொய்த்து விட்டன. ஏன் பொய்த்தது என்பதற்கு இப்போது விளக்கங்கள் கண்டுபிடிக்க முயன்று வருகிறார்கள்.

பிரிட்டன் ஜனநாயகப் பண்பில் முதிர்ச்சி பெற்ற தேசம். எனவே பிரிட்டிஷ் மக்கள் தொழிற் கட்சிக்கே இன்னோர் ஆட்சிக் காலத்துக்குப் பதவி தராமல் அரசாங்கத்தை மாற்றும்படியாக வாக்குத் தந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ வில்ஸன் நல்ல முறையில் பதவி வகித்தார். தம் கட்சியிலிருந்த புரட்சியாளர்களை வெகு தீரத்துடன் அவர் எதிர்த்து முகம் கொடுத்தார். ஸ்ரீ வில்ஸனைப் போலவே இப்போது புதிதாகப் பதவி ஏற்கும் கன்ஸர்வேடிவ் பிரதமர் ஸ்ரீ ஹீத் அவர்களும் நல்ல முறையில் பணியாற்றுவார் என்பது உறுதி.

பிரிட்டனில் இனக் கொள்கை இப்போது மிகவும் முக்கியம் அடைந்திருக்கிறது. இந்த அம்சத்தில் பிரிட்டன் எப்போதுமே பின்பற்றியுள்ள அறிவு சார்ந்த கொள்கையையே புது சர்க்காரும் கடைப்பிடிக்கும் என நம்புகிறேன்.



பிரிட்டிஷ் பிரதமர் ஹீத்

''பிரதமர் நம்மிடம் உண்மையே சொன்னார்; ஆட்சியதிகாரத்தை விடக் கொள்கைகளையே பெரிதாக மதித்தார்; மற்றவர்களைப் போலவே தாமும் கடுமையாக உழைத்தார்'' — இவ்விதமாகத் தம்மைப் பற்றி மக்கள் எதிர்காலத்தில் நினைவுகூர்ந்து பேசும் விதத்தில் தலைமையை உருவாக்கப் போவதாக ஸ்ரீ ஹீத் கூறியுள்ளார். இவை பொன்மொழிகளாகும். உலகம் முழுதுமுள்ள எல்லா அரசியல்வாதிகளும், பிரதமர்களும் இவற்றை இதயத்தில் ஏற்க வேண்டும். மக்களிடம் உண்மையைச் சொல்லாமல் எந்த அரசியல்வாதியும் நீண்ட காலம் ஆதரவு பெற முடியாது.

சுதந்திரக் கட்சி இவ்விதம் உண்மை மட்டுமே கூறி வரும் கட்சி; அது ஆகாசக் கோட்டை கட்டி மக்களை மயக்குவதில்லை என்று நான் தாழ்மையுடன் உரிமை கோர முடியும். **ஸத்யமேவ ஜயதே** என்ற தேசிய வாசகத்தில் வற்புறுத்தப்படும் தத்துவமே சுதந்திரக் கட்சிக்கு நம்பிக்கை ஊட்டுவது.

● வாழ்க்கைப் போராட்டம் ● அரசியல் போராட்டம் ● காதல் போராட்டம் ● மாணவர் போராட்டம் ● காதல் போராட்டம் ● தொழிலாளர் போராட்டம் ● மாணவர் போராட்டம் ● வாழ்க்கைப் போராட்டம் ● அரசியல் போராட்டம் ● ஜீவமரணப் போராட்டம் ● மாணவர் போராட்டம் ● தொழிலாளர் போராட்டம் ● போராட்டம் ● ஜீவமரணப் போராட்டம்

கல்லும் கரையும்படி
கல்லுக்குள் ஈரம்
எழுதிய

ர.சு. நல்லபெருமாள்

அளிக்கும்

போராட்டங்கள்

இன்றைய சமூகத்தை
உள்ளது உள்ளபடி
சித்திரிக்கும் மகத்தான
தொடர் கதை

கல்கி ஆகஸ்ட் 2 இதழில்
ஆரம்பம்


முற்றிலும் நம்பக்கூடியது பாடா ஸாண்டக்
சாந்தா
ப்ளூ, பீஜ்
மற்றும்
பிங்க்
அளவு 2-6
ரூ. 8.95
லீலா
க்ரே, பீஜ்
மற்றும்
பிங்க்
அளவு 2-6
ரூ. 8.95
செயிலானின் காலணிகள் அழகாகவும் மென்மை யாகவும் இருப்பதோடு பாதங்களை நாள் முழுதும் புத்தம் புதியதாக வைத் திருக்கின்றன. நீண்ட காலம் புதுக்கருக்கு அழி யாமல் உழைக்கக் கூடியவை. கவனிப்பது சுலபம்; சற்றே துடைத்து விட்டு அணிந்துகொள்ள வேண்டியது தான்!
Bata
சாண்டக்*
கெமிலான்*
* பதிவு பெற்ற வியாபார சின்னம்
பாடாவின் குறிப்பின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட
தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவது

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

ஐந்தாம் அத்தியாயம்

பயங்கர நிலவறை

பிலத் துவாரத்துக்குள் நுழைந்த வந்தியத் தேவன் சில படிகள் இறங்கிச் சென்றான். பிறகு சம தரையாக இருந்தது. மிக மிக இலேசாக வெளிச்சம் தெரிந்தது. பத்துப் பதினைந்து அடி சென்றான். ஏதோ வண்டிச் சக்கரம் சுற்றுவது போல் ஒரு சத்தம் கேட்டது. திடீரென்று இருள் வந்து கவிந்து அவனை விழுங்கிவிட்டது போலிருந்தது. சட்டென்று அவனை ஐயம் பற்றிக் கொண்டது. சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிடக் கூடாது என்று பல முறை தீர்மானித்துக் கொண்டதை எண்ணினான். நாம் புறப்பட்ட காரியம் என்ன? எவ்வளவு முக்கியமானது? அதை விடுத்து இப்போது இந்தப் பாதாளச் சுரங்க வழியில் பிரவேசித்தோமே? இது எங்கே கொண்டு போய்ச் சேர்க்குமோ, என்னமோ! அங்கே என்னென்ன வகை அபாயங்கள் காத்திருக்குமோ? என்ன அறிவீனமான காரியத்தில் இறங்கினோம்? நம்முடைய அவசர புத்தி நம்மை விட்டு எப்போது போகப் போகிறது? இந்த எண்ணங்கள் அவன் கால்களின் வேகத்தைக் குறைத்தன. திரும்பிப் போய்விடலாம் என்று எண்ணி வந்த வழியே திரும்பினான். படிகள் தட்டுப்பட்டன. ஆனால் மேலே துவாரத்தைக் காணவில்லை. தடவித் தடவிப் பார்த்தான்; பயனில்லை. யாரோ மேலிருந்து துவாரத்தை மூடிவிட்





டிருக்க வேண்டும். வந்தியத் தேவனுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. மேலும் பரபரப்புடன், மூடப்பட்ட துவாரத்தைத் திறப்பதற்கு முயன்றான். இதற்குள், எங்கேயோ வெகு வெகு தூரத்தில், யாரோ பேசும் குரல் கேட்பது போலிருந்தது. வேறு வேறு குரல்கள் கேட்டன. ஒருவேளை அவன் எங்கிருந்து பிலத் துவாரத்தில் பிரவேசித்தானோ, அந்த ஐயனார் கோவில் வாசலில் மனிதர்கள் பேசும் குரலாகவும் இருக்கலாம். இடும்பன்காரி யாரையோ எதிர்பார்த்துத்தானே விளக்குப் போட்டான்? அவர்கள் வந்திருக்கலாம். இது உண்மையாகுமானால் அவன் அச்சமயம் பிலத் துவாரத்தைத் திறக்க வழி கண்டுபிடித்து வெளியேறுதல் பொருந்தவாக முடியலாம். அவர்கள் எத்தனை நேரம் அங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்களோ, தெரியாது. இடும்பன்காரியின் கூட்டாளிகளான ரவிதாஸன் முதலிய சதிகாரர்களானால், நெடுநேரம் பேசிக் கொண்டிருக்கக்கூடும். அவர்கள் எதற்காக இங்கே கூடியிருக்கிறார்கள்? என்ன பேசுகிறார்கள்? என்ன சதி செய்கிறார்கள்? இதையெல்லாம் அந்த வீர வைஷ்ணவன் கவனித்துக் கொண்டிருப்பான். நாம் இங்கே மூச்சு முட்டும்படி உடம்பில் வியர்த்துக் கொட்டும்படி, நின்று காத்திருப்பதைக் காட்டிலும், மேலே கொஞ்ச தூரம் போய்ப் பார்ப்பது நல்லது. துணிந்து இறங்கியது இறங்கியாகி விட்டது. இந்தச் சுரங்க வழி எங்கேதான் போகிறது என்பதைக் கண்டுபிடிப்பது மேல் அல்லவா?...

இவ்வாறு முடிவு கட்டிக் கொண்டு வந்தியத்தேவன் பின்வைத்த காலை மறுபடி முன் வைத்து நடந்து செல்லத் தொடங்கினான். கீழே சமதரையென்றாலும் முண்டும் முரடுமாக இருந்தது. பாறையைக் குடைந்து எடுத்து அந்தப் பாதாள வழியை அமைத்திருக்க வேண்டும். அந்த வழி எங்கே போய்ச் சேரும் என்பது பற்றி அவன் மனத்தில் ஓர் உத்தேசம் தோன்றியிருந்தது. அநேகமாக அது கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குள் போய் முடிய வேண்டும். அந்த மாளிகையில் எங்கே போய் முடிகிறதோ என்னமோ! ஒரு வேளை பொக்கிஷ அறையில் முடியலாம்; அல்லது அரண்மனைப் பெண்டிர் வாசம் செய்யும் அந்தப்புரத்தில் முடியலாம். அரசர்களும் சிற்றரசர்களும் வசிக்கும் அரண்மனைகளிலிருந்து அத்தகைய சுரங்கப் பாதைகள் இருக்கும் என்பது அவன் அறிந்த விஷயந்தான். ஏதாவது பேரபாயம் நேரும் காலங்களில் அரண்மனையிலிருந்து ஓடித் தப்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தால், அத்தகைய பாதைகளை உபயோகிப்பார்கள். அரண்மனைப் பெண்டிரை அப்புறப்படுத்துவது அவசியமாதலால் அத்தகைய பாதைகள் அந்தப்புரத்தில் சாதாரணமாக முடிவதுண்டு. முக்கியமான பொக்கிஷங்களை எடுத்துக் கொண்டு போவதும் அவசியமாதலால், பொக்கிஷ நிலவறை மூலமாகவும் அந்த வழிகள் போவது வழக்கம். இந்த வழி எங்கே போய் முடிகிறதோ, என்னமோ? இடும்பன்காரி இவ்வழியாக வந்து வெளியேறியிருப்பதால், அநேகமாகப் பொக்கிஷ அறையில்தான் போய் முடியும். பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷங்களை அவர் அறியாமல் இளையராணி மூலம் இச்சதிகாரர்கள் சூறையிடுவது போல், சம்புவரையரின் பொக்கிஷத்தையும் கொள்ளையிடத் திட்டம் போட்டிருக்கிறார்கள் போலும்! ஆதித்த கரிகாலரும் மற்றவர்களும் விருந்தாளிகளாக வரவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் இம்மாதிரி காரியத்தில் பிரவேசிப்பதன் காரணம் என்ன? ஒருவேளை வேறு நோக்கம் ஏதேனும் இருக்க முடியுமா? திருப்புறம்பயம் பள்ளிப் படைக் காட்டில் பார்த்ததும் கேட்டதும் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன. பழுவூர் ராணியிடம் இருந்த மீன் அடையாளம் பொறித்த நீண்ட வாள் அவன் மனக் கண்



முன்னே வந்து ஒரு கணம் ஜொலித்தது. வந்தியத்தேவனுக்கு உடம்பு சிலிர்த்தது. பொக்கிஷத்தைக் கொள்ளையிடுவதைக் காட்டிலும் இன்னும் பயங்கரமான நோக்கம் இவர்கள் வைத்திருந்தாலும் வைத்திருக்கலாம். இந்த வழி எங்கே போகிறதென்பதை நிச்சயமாகத் தெரிந்துகொண்டால் அவர்களுடைய கொடிய நோக்கம் நிறைவேறாமல் தடுப்பதற்குப் பயன்பட்டாலும் படலாம்.

சுரங்க வழியில் நடக்க ஆரம்பித்துச் சில நிமிஷ நேரந்தான் உண்மையில் ஆயிற்று; ஆனாலும் இருண்ட வழியா யிருந்தபடியால் நெடுநேரமாகத் தோன்றியது. காற்றுப் போக்கு இல்லாதபடியால் மூச்சுத் திணறியது. மேலும் வியர்த்துக் கொட்டியது. ஐயனார் கோவிலிலிருந்து கடம்பூர் மாளிகை எவ்வளவு தூரம் என்று எண்ணியபோது அவனுக்கு முதலில் மலைப்பா யிருந்தது. ஆனால் மறுபடியும் யோசித்தான். மாளிகையின் முன்வாசலிலிருந்து வளைந்தும் சுற்றியும் சென்ற தெருக்களின் வழியாகவும், பின்னர் காட்டுப் பாதைகளின் வழியாகவும் வந்தபடியால் அவ்வளவு தூரமாகத் தெரிந்தது. அரண்மனையின் பின்பகுதியிலிருந்து நேர் வழியாக வந்தால் ஐயனார் கோவில் அவ்வளவு

தூரத்தில் இராது. வில்லிலிருந்து அம்பு விட்டால் போய் விழக்கூடிய தூரந்தான் இருக்கும். அது உண்மையானால், இதற்குள் அரண்மனை வெளிமதிலை அவன் நெருங்கி வந்திருக்க வேண்டுமே?....

ஆம்; அப்படித்தான். மேலே எங்கிருந்தோ திடீரென்று வந்தியத்தேவன் மேல் குளிர்ந்த காற்று குப்பென்று அடித்தது. வியர்த்து விருவிருத்து மூர்ச்சை அடையும் நிலைக்கு வந்திருந்த வந்தியத் தேவனுக்கு அந்தக் காற்று புத்துயிர் தந்தது. அண்ணாந்து பார்த்தான். உயரத்தில் வெகுதூரத்தில் சிறிது வெளிச்சம் தெரிந்தது. பேச்சுக் குரல்களும் கேட்டன. மதிள் சுவரின் மேல் ஆங்காங்கு வீரர்கள் இருந்து காவல் புரிவதற்காக அமைத்த கொத்தளங்களில் அது ஒன்றாக இருக்க வேண்டும். அதன் வழியாகச் சுரங்கப் பாதையில் காற்றுப் புகுவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் காற்றுத்தான் புகலாமே தவிர, மனிதர்கள் கீழே இறங்குவதற்கோ மேலே ஏறுவதற்கோ அங்கே வசதி ஒன்றுமில்லை என்பதையும் வந்தியத்தேவன் கண்டான்.

கடம்பூர் அரண்மனைக்குள் புகுந்தாகி விட்டதென்ற எண்ணமும், மேலிருந்து வந்து அவன் மீது அடித்த குளிர்ந்த காற்றும் அவனுக்குப் புத்துயிரை அளித்துப் புதிய உற்சாகத்தை உண்டுபண்ணின. சுரங்கப் பாதை போய்ச் சேரும் இடம் இனி சமீபத்திலேதான் இருக்கும். அது பொக்கிஷ நிலவறையாயிருக்குமா? பெரிய பழுவேட்டரையரைப் போல் சம்புவரையரும் ஏராளமான முத்தும் பவளமும் ரத்தினமும் வைரமும் தங்க நாணயங்களும் சேர்த்து வைத்திருப்பாரா? அங்கே பார்த்தது போல் இங்கேயும் அந்த ஐசுவரியக் குவியல்களுக்கிடையில் செத்த மனிதனின் எலும்புக்கூடு கிடக்குமா? தங்க நாணயங்களின் பேரில் சிலந்தி வலை கட்டியிருக்குமா?

இம்மாதிரி எண்ணிக் கொண்டே போன வந்தியத்தேவன் காலில் ஏதோ தட்டுப்பட்டுத் திடுக்கிட்டான். அப்புறம் அது படிக்கட்டு என்று தெளிந்து தைரியம் அடைந்தான். ஆம்; அந்தப் படிக்கட்டில் ஏறியானதும் பொக்கிஷ நிலவறையைக் காணப்போவது நிச்சயம். இல்லாவிட்டால், பெண்கள் வசிக்கும் அந்தப்புரமாயிருக்கலாம். அப்படியானால், தன்பாடு ஆபத்துத்தான்! ஆ! கந்தமாறன் தங்கை மணிமேகலை! அந்தக் கருநிறத்து அழகி அங்கே இருப்பாள்! ஒரு சமயம் அவளை மணந்து கொள்ளும் யோசனை தனக்கு இருந்ததை நினைத்தபோது வந்தியத்தேவன் புன்னகை பூத்தான். அந்தப் புன்னகையைப் பார்த்து மகிழ அங்கு யாரும் இல்லைதான்! — ஒருவேளை அந்தப்புரத்து மாதர் அலங்கோலமாக இருக்கும் சமயத்தில், திடீரென்று அவர்களிடையே தான் தோன்றினால்! — இதை நினைக்க அவனுக்குச் சிரிப்பே வந்துவிட்டது.

சிரித்த மறுகணமே, அவனுடைய உடம்பின் இரத்தம் உறைந்து, இதயத் துடிப்பு நின்று, கண் விழிகள் பிதுங்கும் படியான பயங்கரத் தோற்றத்தை அவன் கண்டான். படிக்கட்டில் ஏறினான் அல்லவா? மேல் படியில் கால் வைத்ததும், இனி ஏறுவதற்குப் படியில்லை என்று உணர்ந்து நாம் எங்கே வந்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளச் சுற்றுமுற்றும் பார்த்தான். நூறு நூறு கொள்ளிக் கண்கள் அவனை உற்றுப் பார்த்தன. அந்தக் கண்கள் எல்லாம் பயங்கரமான காட்டு மிருகங்களின் கண்கள்! முதலில் ஏற்பட்ட பீதியில் வந்தவழியே திரும்பிவிட யத்தனித்தான். ஆனால் பின்னால் வழியைக் காணோம். மேற்படியில் அவன் கால் வைத்ததும் பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. சுரங்க வழி தானாக மூடிக் கொண்டு விட்டது போலும்! ஆனால் இது என்ன கோர பயங்கரம்? இவ்வளவு காட்டு மிருகங்களும் தனக்காக இங்கே காத்திருக்கின்றனவே! வேங்கைப் புலிகள், சிறுத்தைகள், சிங்கங்கள், கரடிகள், காட்டெருமைகள், ஓநாய்கள், நரிகள், காண்டாமிருகங்கள்! அதோ, இரண்டு யானைகள்! எல்லாம் தன் மீது பாய்வதற்கல்லவா ஆயத்தமாக இருக்கின்றன? ஏன் இன்னும் பாயவில்லை? அதோ, எவ்வளவு பிரும்மாண்டமான பருந்து! ஐயோ! அந்த ராட்சத ஆந்தை! ஆள் விழுங்கி வௌவால்! — தான் காண்பது கனவா? அல்லது... இது என்ன? இங்கே ஒரு முதலை கிடக்கிறதே; வாயைப் பிளந்துகொண்டு கோரமான பற்களைக் காட்டிக் கொண்டு, கிடக்கிறதே? முதலை தண்ணீரில் அல்லவா இருக்கும்? இது வெறுந் தரையல்லவா? காட்டு மிருகங்களுக்கு மத்தியில் இந்த முதலை எப்படி வந்தது?...

''அம்மா பிழைத்தேன்!'' என்று வாய்விட்டுக் கூறினான் வந்தியத்தேவன். தன்னைச் சூழ்ந்திருந்த அந்த மிருகங்கள் எல்லாம் உயிர் உள்ள மிருகங்கள் அல்ல என்பதை உணர்ந்தான். சம்புவரையர் குலத்தார் வேட்டைப் பிரியர்கள் என்று கந்தமாறன் கூறியிருந்தது நினைவு வந்தது. அந்த வம்சத்தினர்

வேட்டையாடிக் கொன்ற மிருகங்களில் சிலவற்றின் தோலைப் பதன் படுத்தி, உள்ளே பஞ்சும் வைக்கோலும் அடைத்து உயிர் விலங்குகளைப் போல் வைத்திருக்கும் வேட்டை மண்டபம் ஒன்று அந்த மாளிகையில் உண்டு என்று கந்தமாறன் கூறியதும் நினைவு வந்தது. அந்த வேட்டை மண்டபத்துக்குள் இப்போது தான் வந்திருப்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். ஆயினும் முதலில் ஏற்பட்ட பீதியினால் உண்டான உடல் நடுக்கம் நிற்பதற்குச் சிறிது நேரம் ஆயிற்று.

பின்னர் ஒவ்வொரு மிருகமாக அருகில் சென்று பார்த்தான். தொட்டுப் பார்த்தான். அசைத்துப் பார்த்தான். மிதித்தும் பார்த்தான். அந்த மிருகங்களுக்கு உயிர் இல்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டான். பின்னர், என்ன செய்வதென்று யோசித்தான். வந்த வழி தானாகவே மூடிக் கொண்டு விட்டது. அதை மறுபடியும் கண்டுபிடித்துக் கொண்டு வந்த வழியே செல்வதா? அல்லது இந்தப் பயங்கர மண்டபம் கடம்பூர் மாளிகையில் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று கண்டு பிடிப்பதா ? வேறு எந்த அறைக்குள்ளேனும் இங்கிருந்து வழி போகிறதா என்று கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குவதா? சுவர்களில் எங்கேயாவது கதவு இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தான். வெளிப்படையாகத் தெரியும் கதவு ஒன்றும் இல்லை. சுவர்களையெல்லாம் தொட்டுப் பார்த்துக் கொண்டும் தட்டிப் பார்த்துக் கொண்டும் வந்தான். ஒன்றும் பயன்படவில்லை. நேரமாக ஆக வந்தியத் தேவனுக்குக் கோபம் அதிகமாகி வந்தது. இந்த அநாவசியமான காரியத்தில் பிரவேசித்து இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சுவர்களின் ஓரமாகச் சுற்றி வந்து கொண்டிருந்த போது ஓரிடத்தில் ஒரு யானையின் முகம் துதிக்கையுடனும் தந்தங்களுடனும் சுவரோடு சேர்த்துப் பொருத்தப்பட்டிருப்பதைப் பார்த்தான்.

''நாசமாய்ப் போன யானையே! நீ நகர்ந்துகொடுத்தல்லவா என்னை இந்தச் சிறைச்சாலைக்குள் கொண்டு சேர்த்தாய்?'' என்று அந்த யானையை நோக்கித் திட்டினான். யானை பேசாதிருந்தது. உயிர் உள்ள யானையே பேசாது. உயிரில்லாத நாரும் உமியும் அடைத்த யானை என்ன செய்யும்? துதிக்கையைக் கூட ஆட்டாமல் சும்மா இருந்தது.

''என்ன நான் கேட்கிறேன், பேசாமல் இருக்கிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் யானையின் தந்தங்களைப் பிடித்துக் கொண்டு ஒரு திருகு திருகினான்.

அடுத்த விநாடியில் அந்த மாயா ஜாலம் நடந்தது.

தந்தத்தைத் திருகியதும் சுவரோடு ஒட்டியிருந்த யானையின் காது அசைந்தது. அசைந்தது மட்டுமல்ல; மடங்கி நகர்ந்து கொடுத்தது. அங்கே சுவரில் ஒரு பெரிய துவாரம் தெரிந்தது.

அடங்கா வியப்புடன் வந்தியத்தேவன் அந்தத் துவாரத்துக்கு அருகில் முகத்தை நீட்டி எட்டிப் பார்த்தான்.

பார்த்த இடத்தில் ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது. அது ஓர் இளம் பெண்ணின் முகம். கரிய நிறத்து அழகிய பெண்ணின் முகம். அந்த முகத்திலிருந்த பெரிய கண்கள் இரண்டும் விரிந்து விழித்துக் கொண்டிருந்தன. ஆச்சரியம்! ஆச்சரியம்! அந்தப் பெண்ணின் முகத்துக்கு அருகில் வந்தியத்தேவன் தன்னுடைய முகத்தையும் கண்டான். ஒரு பெண்ணுக்கு அவள் காதலன் முத்தம் கொடுக்க யத்தனித்தால் எப்படி முகத்தை அருகில் கொண்டு போவானோ, அந்த நிலையில் வந்தியத்தேவன் தன் முகத்தையும் அந்தப் பெண்ணின் முகத்தையும் பார்த்தான். ஏற்கனவே அகன்று விழித்துக் கொண்டிருந்த அப்பெண்ணின் கண்கள் இப்போது இன்னும் அகலமாக விரிந்து சொல்ல முடியாத வியப்பைக் காட்டின. வியப்புடன் சிறிது பயமும் அப்பார்வையில் பிரதிபலித்தது. ஒரு கணம் அந்தப் பெண் முகம் அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தது. அடுத்த கணம் அவள் தன் செக்கச் சிவந்த இதழ்களைக் குவித்து, ''கூ!'' என்று சத்தமிட்டாள்.

வந்தியத்தேவனைத் திடீரென்று திகில் பற்றிக் கொண்டது. அந்தத் திகிலில் யானைத் தந்தத்திலிருந்து தன்னுடைய கைகளை எடுத்தான்.

அடுத்தகணத்தில் யானை யானையாகவும், சுவர் சுவராகவும் நின்றது.

துவாரத்தையும் காணோம்; பெண்ணையும் காணோம்.

சில் வண்டின் ரீங்காரம் போல் காதைத் துளைத்த 'கூ' என்ற அந்தப் பெண்ணின் குரலும் கேட்கவில்லை.

வந்தியத்தேவனுடைய நெஞ்சுப் படபடப்பு அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று.

தான் கண்ட தோற்றத்தைப் பற்றி அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

ஆறாம் அத்தியாயம்

மணிமேகலை

சம்புவரையரின் செல்வப் புதல்வியான மணிமேகலை குதூகலம் நிறைந்த பெண். தந்தையும் தாயும் தமையன் கந்தமாறனும் அவளைக் குழந்தைப் பிராயம்முதல் அன்பும் ஆதரவுமாய்ப் பேணி வளர்த்து வந்தார்கள். சம்புவரையரின் அரண்மனையில் அவள் கொடுங்கோல் அரசியாக விளங்கி வந்தாள். அவள் இட்டதே மாளிகைக்குள் சட்டமாக நடந்து வந்தது. சில காலத்துக்கு முன்பு வரையில் மணிமேகலையின் வாழ்க்கை ஆட்டமும் பாட்டமும் களியாட்டமுமாகக் கழிந்துவந்தது. நாலைந்து மாதங்களுக்கு முன்னால் அவளுடைய வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு தடங்கல் ஏற்பட்டது. அவளது விருப்பத்துக்கு விரோதமான காரியத்தை அவள் செய்ய வேண்டும் என்று வீட்டுப் பெரியவர்கள் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தார்கள்! ''பிடிவாதம் உதவாது!'' என்ற பாடத்தை வீட்டுப் பெரியவர்களுக்கு மணிமேகலை எவ்வளவுதான் உபதேசித்தும் பயன் தராது போலிருந்தது.

.இரண்டு மூன்று வருஷமாகக் கந்தமாறன் போர்க்களங்களிலிருந்து திரும்பி வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவனுடைய சிநேகிதன் வல்லவரையனைப் பற்றி அவளிடம் கூறுவான். அவனுடைய வீர தீர சாமர்த்தியங்களைப் பற்றியும், புத்தி சாதுர்யத்தைப் பற்றியும் வானளாவப் புகழ்வான். அழகில் மன்மதன் என்றும், வீரத்தில் அர்ச்சுனன் என்றும், யுக்தியில் கிருஷ்ண பகவான் என்றும் வியந்து வர்ணிப்பான். ''அவன்தான் உனக்குச் சரியான கணவன்; உன் துஷ்டத்தனத்தை அடக்கி உன்னைக் கட்டுக்குள் வைத்திருக்கக் கூடியவன்'' என்பான். இதையெல்லாம் அடிக்கடி கேட்க வேண்டும் என்று மணிமேகலைக்கு ஆசையாயிருக்கும். அதே சமயத்தில் வெளிப்படையாகக் கந்தமாறன் மீது அவள் எரிந்து விழுவாள்; அவனுடன் சண்டை பிடிப்பாள்.

'' இப்படி வெறுமனே சொல்லிக்கொண்டேயிருக்கிறாயே? ஒரு நாள் அழைத்துக் கொண்டுதான் வாயேன்! அவன் சாமர்த்தியத்தைப் பார்த்துவிடுகிறேன்'' என்பாள்.

''ஆகட்டும்; ஆகட்டும்!'' என்று கந்தமாறன் கறுவிக் கொண்டிருப்பான்.

மணிமேகலையும் ஒருவாறு வல்லவரையன் வந்தியத்தேவனைக் கற்பனைக் கண்ணால் கண்டு, மானஸ உலகில் அவனோடு பேசிப் பழகிச் சிரித்து விளையாடிச் சண்டை போட்டுச் சமாதானம் செய்து,—இப்படியெல்லாம் பகற் கனவு காண்பதில் காலம் போக்கி வந்தாள். அவளுடைய அந்தரங்கத் தோழிகளிடம் சில சமயம் தன் தமையனுடைய சிநேகிதனை வாணர்குல வீரனைப் பற்றிப் பேசி மகிழ்ந்தும் வந்தாள்.

இத்தகைய இனிய பகற் கனவுகளுக்கு நாலு மாதங்களுக்கு முன்னால் எதிர்பாராத ஓர் இடையூறு நேர்ந்தது.

கந்தமாறன் வேறு ஸ்வரத்தில் பேச ஆரம்பித்தான். ''வீடு வாசலும் பதவியும் அந்தஸ்தும் அற்ற அந்த அநாதைப் பையனை மறந்துவிடு'' என்று கூறலானான். தஞ்சாவூர் சிம்மாசனத்தில் அவளை ஏற்றி வைக்கத் தீர்மானித்திருப்பதாக ஆசை காட்டினான். பின்னர் ஒரு நாள், தெளிவாகவே விஷயத்தைச் சொல்லிவிட்டான். ஏற்கனவே சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்தவனை மதுராந்தகனுக்கு இவளையும் மணம் புரிந்து கொடுக்கப் போவதாகக் கூறினான். மதுராந்தகன்தான் அடுத்த சக்கரவர்த்தியாகப் போகிறான் என்று ஜாடை மாடையாகச் சொன்னான். மதுராந்தகனை மணந்தால் மூன்று உலகங்களுக்கும் மணிமேகலை சக்கரவர்த்தினியாக விளங்குவாள் என்றும் அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளையும் ஒருவேளை சாம்ராஜ்யம் ஆளும் பேறு பெறுவான் என்றும் கூறினான். இதற்கெல்லாம் அவளுடைய பெற்றோர்களும் ஒத்துப் பாடினார்கள்.

ஆனால் மணிமேகலைக்கு இந்தப் பேச்சு ஒன்றும் பிடிக்கவில்லை. வந்தியத் தேவனைப் பற்றிக் கேட்டுக் கேட்டு அவள் மனம் அவனிடம் ஈடுபட்டிருந்தது. அது மட்டுமல்ல. மதுராந்தகன் வீரமற்றவன் என்றும் போர்க்களத்தையே பார்த்து அறியாதவன் என்றும் நேற்று வரை உடம்பெல்லாம் விபூதி பூசி ருத்திராட்சம் அணிந்து சாமியார் ஆகப் போவதாகச் சொல்லி வந்தவன் என்றும் அறிந்திருந்தாள். போதாததற்கு ஏற்கனவே அவனுக்கு ஒரு கலியாணம் ஆகியிருந்தது. தஞ்சாவூர் அரண்மனைப் பெண்களோ மிகவும் கர்வக்காரிகள். தங்களுக்குத்தான் நாகரிகம் தெரியும் என்று எண்ணி மற்ற ஊர்க்காரர்களை அலட்சியம் செய்கிறவர்கள். இதை

யெல்லாம் எண்ணி மணிமேகலை மிக்க எரிச்சல் கொண்டாள். தஞ்சாவூர்ச் சிம்மாதனம் கிடைப்பதாக இருந்தாலும் சரி, தேவலோகத்துத் தேவேந்திரனுடைய சிம்மாதனமே கிடைப்பதாக இருந்தாலும் சரி, மதுராந்தகனை மணம் செய்துகொள்ளமுடியாது என்று அடம் பிடித்தாள்.

அப்புறம் இன்னொரு செய்தி தெரிய வந்தபோது அவளுடைய மன உறுதி வலுவு அடைந்தது. பெரிய பழுவேட்டரையர் கடம்பூருக்கு வந்திருந்தபோது பின்னோடு இளையராணி நந்தினியும் வந்திருந்ததாகச் சொன்னார்கள். ஆனால் அவள் அந்தப்புரத்துக்குள்ளேயே வரவில்லை. கடம்பூர் அரண்மனைப் பெண்களைப் பார்க்கவும் இல்லை. அது முதலில் வியப்பை அளித்தது. அரண்மனைப் பெண்டிர் அதைப் பற்றிப் பரிகாசமாகவும் நிந்தனையாகவும் பேசிக் கொண்டார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உண்மை தெரிந்தது. மூடு பல்லக்கில் இளையராணி வரவில்லையென்றும் மதுராந்தகன்தான் வந்திருந்தான் என்றும் அறிந்தபோது மணிமேகலையின் அருவருப்பு அதிகமாயிற்று. ''சீச்சீ! இப்படிப் பயந்து கொண்டு மூடு பல்லக்கில் பெண் வேஷம் தரித்துக் கொண்டு வருகிறவனையா நான் மணவாளனாக வரிப்பேன்? ஒரு நாளும் இல்லை!'' என்று மணிமேகலை உறுதி யடைந்தாள்.

மதுராந்தகன் மூடு பல்லக்கில் அரண்மனைக்கு வந்திருந்த அதே சமயம் கந்தமாறனின் சிநேகிதன் வந்தியத்தேவனும் வந்திருந்தான். அவன் அந்தப்புரத்துக்கு வந்து சற்று நேரம்தான் இருந்தான். எங்கிருந்தோ அப்போது மணிமேகலைக்கு அளவிலாத நாணம் வந்து பற்றிக் கொண்டது. மற்றப் பெண்களின் பின்னாலேயே நின்றாள். வந்தியத் தேவனை நேருக்கு நேர், முகத்துக்கு முகம், நன்றாகப் பார்க்கக்கூடவில்லை. ஆயினும் மற்றவர்களுக்குப் பின்னால் அரை குறையாகப் பார்த்த அளவிலேயே அவனுடைய களை பொருந்திய புன்னகை ததும்பிய முகம் அவள் உள்ளத்தில் பதிந்து விட்டது. அவனுடைய குரலும் அவன் பேசிய சில வார்த்தைகளும் அவளுடைய ஞாபகத்தில் நிலைத்து விட்டன.

ஆகையால் மறுபடியும் தமையன் கந்தமாறனுடன் மணிமேகலை முடிவில்லா விவாதம் தொடங்கினாள். முக்கண் படைத்த சிவபெருமானே வந்து சொன்னாலும் தான் மதுராந்தகனை ஒருகாலும் மணக்க முடியாது என்றாள்.

வந்தியத் தேவனைச் சிறிது நேரமே பார்த்திருந்த போதிலும் அவனிடம் தன் அந்தரங்கம் சென்று விட்டதையும் அவள் குறிப்பாக உணர்த்தினாள்.

கந்தமாறனுக்கு இது அளவில்லாத கோபத்தை உண்டாக்கியது. முதலில் நல்ல வார்த்தையாகச் சொல்லிப் பார்த்தான். பயன்படவில்லை. பின்னர், ''வந்தியத் தேவன் என் சிநேகிதன் அல்ல; என் பரம விரோதி; என்னைப் பின்னாலிருந்து முதுகில் குத்திக் கொல்லப் பார்த்தவன்; அவனை நீ மணந்து கொள்வதா யிருந்தால் உன்னையும் அவனையும் சேர்த்துக் கொன்று விடுவேன்!'' என்றான். முதுகில் ஏற்பட்டிருந்த கத்திக் காயத்தைக் காட்டினான். பழுவூர் இளைய ராணியின் பரிவான சிகிச்சையினால் தான் உயிர் பிழைத்து எழுந்ததையும் கூறினான்.

''என் பேரில் உனக்கு எள்ளத்தனை விசுவாசமாவது இருந்தால், வந்தியத் தேவனை மறந்துவிடு!'' என்றான்.

இதைக் கேட்ட பிறகு மணிமேகலையின் மனம் உண்மையில் மாறிவிட்டது. கந்தமாறனிடம் அவள் மிக்கப் பிரியம் வைத்திருந்தாள். அவனைக் கொல்ல முயன்ற பகைவனைத் தான் மணந்து கொள்வது இயலாத காரியம்தான். ஆகையால் வந்தியத் தேவனை மறக்க முயன்றாள். ஆயினும் இலேசில் முடிகிற காரியமாயில்லை. அடிக்கடி எதிர்பாராத சமயங்களில், அவனுடைய புன்னகை ததும்பிய முகம் அவள் மனக் கண்ணின் முன்பு வந்து கொண்டிருந்தது. பகற் கனவுகளிலும் வந்தது. இராத்திரியில் கண்ட கனவுகளிலும் வந்தது.

இதனாலெல்லாம் சில மாத காலமாக மணிமேகலை அவளுக்கு இயற்கையான குதூகலத்தை இழந்திருந்தாள். சோகமும் சோர்வும் அவளைப் பீடித்தன. கலியாணப் பருவம் வந்துவிட்டதுதான் இதற்குக் காரணம் என்று முதியோர்கள் நினைத்தார்கள். பிராயமொத்த தோழிகள் அவளை அது குறித்துப் பரிகாசம் செய்தார்கள். வேடிக்கை விளையாட்டுக்கள் மூலம் அவளை உற்சாகப் படுத்தத் தோழிமார்கள் முயன்றார்கள். அது ஒன்றும் பலிக்கவில்லை.

மறுபடியும் சென்ற சில நாட்களாக மணிமேகலை சிறிது உற்சாகம் கொள்ளத் தொடங்கி யிருந்தாள். மதுராந்தகனுக்கு அவளை மணம் செய்து கொடுக்கும் எண்ணத்தை அவள் பெற்றோர்களும் தமையன் கந்தமாறனும் கை விட்டதை அறிந்ததில் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. சக்கரவர்த்தியின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலருக்கு மணிமேகலையைக் கொடுப்பது பற்றி அவர்கள் ஜாடை

மாடையாகப் பேசியது அவள் காதில் விழுந்தது.

ஆதித்த கரிகாலரின் வீரதீர பராக்கிரமங்களைப் பற்றி அறியாதவர்கள் ஆண்களிலோ, பெண்களிலோ, தமிழகத்தில் யாரும் இல்லை. அவர் ஏதோ காரணத்தால் மணம் புரிந்து கொள்ள மறுத்து வருகிறார் என்பதையும் அறிந்து வந்திருந்தார்கள். அப்படிப்பட்டவரை மணந்து கொள்வது என்றால், அது கனவிலும் கருத முடியாத பாக்கியம் அல்லவா? இந்தப் பரந்த பரத கண்டம் முழுவதிலும் எத்தனை ராஜ குலப் பெண்கள் அந்தப்பேறு பெறுவதற்காகத் தவம் கிடக்கிறார்கள்? இதையெல்லாம் எண்ணி மணிமேகலை ஒருவாறு உற்சாகம் கொண்டாள்.

காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலரும் தஞ்சாவூரிலிருந்து பெரிய பழுவேட்டரையரும் கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளியாக வரப் போகும் செய்தி அவளுக்கு மீண்டும் பழைய மாதிரி குதூகலத்தை அளித்தது. இந்தத் தடவை பழுவேட்டரையர் தம் இளைய ராணியையும் அழைத்து வருகிறார். நந்தினி தேவி தன் தமையன் உயிரைக் காப்பாற்றியவள். அவளுடைய அழகையும் குணத்தையும் அறிவாற்றலையும் பற்றி மணிமேகலை கந்தமாறனிடமிருந்து ரொம்பவும் கேள்விப்பட்டிருந்தாள். இந்தப் புதிய கலியாணப் பேச்சுக்குக் காரணமானவளே பழுவூர் இளையராணிதான் என்றும் கந்தமாறன் சொல்லி யிருந்தான். அவள் கடம்பூர் அரண்மனையில் இருக்கும்போது அவளைத் தக்கபடி உபசரிப்பதில் மணிமேகலை முன்னால் நிற்க வேண்டும் என்றும் சொல்லி யிருந்தான். மணிமேகலையின் உள்ளமும் அதற்குத் தக்க பரிபக்குவம் அடைந்திருந்தது. பழுவூர் ராணியிடம் நல்லபடியாகச் சிநேகம் செய்து கொண்டு, அவளுடைய பழக்கத்தினால் தஞ்சாவூர் அரண்மனைப் பெண்களை நாகரிகத்தில் தோற்கடிக்கக்கூடியவளாகத் தான் ஆகிவிட வேண்டும் என ஆசைப்பட்டாள்.

ஆதலின் ஒரு வார காலமாக மணிமேகலை ஒரே உற்சாகத்தில் மூழ்கியிருந்ததுடன், பரபரப்புடன் அரண்மனையில் அங்குமிங்கும் ஓடி, விருந்தாளிகளுக்கு வேண்டிய வசதிகளை மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டிருந்தாள். முக்கியமாக, பழுவூர் இளைய ராணிக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அரண்மனைப் பகுதியில் சகல வசதிகளும் ஏற்படுத்தி வைப்பதில் அவள் கவனம் செலுத்தினாள். தமையன் வேறு சொல்லி யிருந்தான் அல்லவா? ஆகையால் அரண்மனைப் பணியாளர்களை வறுத்து எடுத்துவிட்டாள். அவளுடைய தோழிகளையும் வதைத்து விட்டாள். பழுவூர் ராணி தங்கப் போகும் அறையில் ஒவ்வொரு பொருளையும் முப்பது தடவை பெயர்த்து எடுத்து வெவ்வேறு இடத்தில் வைக்கும்படி வற்புறுத்தினாள்.

இளவரசர் ஆதித்த கரிகாலன் தம்முடைய சிநேகிதர்களுடன் தங்கப் போகும் அறைகளையும் அடிக்கடி போய்ப் பார்த்து வந்தாள். யாரோ பார்த்திபேந்திரன் என்பவன் அவருடன் வரப் போகிறானாம். அவன் எப்படிப் பட்டவனோ, என்னமோ?—இந்தக்காலத்தில் யார் எவ்விதம் மாறுவார்கள் என்று யார் கண்டது? தன் தமையனுடைய சிநேகிதனாக இருந்த வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலரின் பரிவாரத்தைச் சேர்ந்தவன்தான்! அவன் மட்டும் இத்தகைய சிநேகத் துரோகியாக மாறாதிருந்தால், இப்போது அவனும் வந்து கலந்து கொள்வான் அல்லவா?

ஆம்; எவ்வளவுதான் மணிமேகலை வேறு பரபரப்பான காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும், அந்தச் சிநேகிதத் துரோகியை அடியோடு மறக்க முடியவில்லை.


பழுவூர் ராணி அன்று இரவே அநேகமாக வந்து விடுவாள் என்று சொன்னார்கள். ஆகையால் கடைசி கடைசியாக நந்தினியின் அறை அலங்காரத்தை மணிமேகலை மேற்பார்வை செய்து கொண்டிருந்தாள். அப்போது பழுவூர் ராணிக்காகச் சுவர் ஓரமாகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியின் எதிரில் வந்தாள். தன்னுடைய முகத்தை அதில் பார்த்துக் கொண்டாள். சிறிது நேரம் நின்று நிதானமாகவே பார்த்தாள். அப்படியொன்றும் தன் முகம் அழகில் குறைந்ததல்ல என்று தனக்குத் தானே முடிவு செய்து திருப்தி யடைந்தாள். கண்ணாடியை விட்டுப் போக எண்ணிய போது, அதில் இன்னொரு முகம் தெரிந்தது. அது தன் முகத்தின் வெகு அருகில் வந்து கன்னத்தோடு கன்னம் ஒட்டும் நிலைக்கு வந்து விட்டது. அவள் கனவில் அடிக்கடி தோன்றித் தொல்லை செய்து கொண்டிருந்த வாணர் குல வீரனின் முகம்தான் அது. அவளை அறியாமல், அவளுடைய வாய் குவிந்து 'கூகூ!' என்று சத்தமிட்டது.

அடுத்த கணம் கண்ணாடியில் அவள் முகம் மட்டும்தான் தெரிந்தது. மற்றொரு முகம் மறைந்துவிட்டது.

(தொடரும்)

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட

ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!





ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா.

Bensons 10391 ITAM

ராமாயணம்

ராஜாஜி



"நான் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிவதைப் பார்த்ததும் அடங்காச் சினம் மேலிட்டு என்னைப் பலவாறாகத் திட்டினான். நான் நடந்ததை நடந்தது போலச் சொன்னேன். 'அரக்கன் உன்னைக் கொன்றுவிட்டான் என்று எண்ணி இவ் விதம் செய்தேன். பிரஜைகளுடைய நிர்ப்பந்தத்துக்காக அபிஷேகம் பெற்றேன். இந்த ராஜ்யம் உன்னுடையது. திரும்பப் பெற்றுக்கொள். உன் அடிமையாக நான் முன்போல் இருப்பேன்' என்று சொல்லி அவன் காலில் விழுந்தேன். அவனோ நான் சொன்னதை லட்சியமே செய்யவில்லை. நான் துராசைப்பட்டுக் குகை வாயிலை அடைத்துவிட்டு அக்கிரமமாகப் பட்டாபிஷேகம் செய்து கொண்டேன் என்று அவன் நினைத்து, என்னை நகரத்திலிருந்து வெளியே துரத்திவிட்டான். 'திரும்பி இந்தப் பக்கம் வந்தால் உன்னைக் கொல்வேன்' என்று சொல்லி என்னைத் துரத்திவிட்டான். அப்போது நான் உடுத்திருந்த வஸ்திரத்துடன் வெளியே ஓடினேன். அதுமுதல் காடும் மலையுமாக மறைந்து திரிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன். எல்லாம் இழந்து இந்த நிலையில் இருக்கிறேன். இந்த நான்கு வானரர்களே எனக்குத் துணையாக இருந்து வருகிறார்கள். கோபத்தால் உண்மையை அறிய மாட்டாமல் என் அண்ணன் இம்மாதிரி அக்கிரமம் செய்து வருகிறான். மகா பராக்கிரமசாலியான அந்த வாலியை ஹதம் செய்து என்னைக் காப்பாற்றுவாய்'' என்றான் சுக்ரீவன்.

சுக்ரீவனுடைய பரிதாப நிலையைக் கண்டு ராமன் கருணை மேலிட்டு, ''உனக்கு நான் தந்த சபதம் உறுதி. பயப்படாதே. என் அம்பு வாலியின் உடலைத் துளைக்கும். உனக்குப் பகையாகிவிட்ட சகோதரனைக் கொன்று உன் கவலையை நீக்குவேன்'' என்று மறுபடியும் பிரதிக்ஞை செய்தான்.

இந்த வாலி சுக்ரீவ நிகழ்ச்சியானது புராணங்களில் செய்யப்படும் உபதேசத்துக்கு நல்ல உதாரணம்.

வாலியின் நடவடிக்கையிலும் பெருங் குற்றமில்லை. சுக்ரீவனுடைய காரியங்களிலும் பெருங் குற்றம் சொல்வதற்கில்லை. கோபத்தால் புத்தி மழுங்கிப் போகும். கோபத்துக்கு வசப்பட்டுவிட்டால் உண்மையைக் காணும் சக்தியை இழந்து விடுகிறோம். அதனின்று பிறகு நாசமடைவோம் என்பது சாஸ்



திரம். இதற்கு வாலியின் கோபாவேசமும் முடிவும் உதாரணம் தருகின்றன. சுக்ரீவன் தான் செய்த காரியங்களை வணக்கமாகவும் உண்மையாகவும் சொல்லிப் பார்த்தான். ஆனாலும் அது வாலியின் புத்தியில் ஏறவில்லை. காரணம், வாலியின் அடங்காக் கோபம்.

சுக்ரீவனும் அவசரப்பட்டுத் தன் தமையன் மாண்டான் என்று தீர்மானித்து விட்டான். அசுரர்கள் வந்து தன்னையும் கொன்று விடுவார்கள் என்று பயந்து குகை வாயிலை அடைத்துப் போட்டு ஊர் திரும்பிவிட்டான். ராஜ்யாதிகாரம் பெறவேண்டும் என்று முதலில் ஆசைப்படவில்லை. ஆயினும் பிரஜைகள் நிர்ப்பந்தித்ததால் பிறகு உடன்பட்டு விட்டான். ஆசை வலையில் சிக்கினான். தீர ஆலோசியாமல் நடந்துகொண்டான். அதனால் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டான். தீர ஆலோசிக்காமல் செய்யும் காரியங்கள் அனர்த்தத்தில் முடியும் என்பது சுக்ரீவனுடைய கதையினின்று அடைய வேண்டிய உபதேசம்.

பிறர் சொத்துக்கு ஆசைப்படலாகாது. ஆசையை அடக்கியாள்வது மிகவும் கடினம். இதில் முழு வெற்றி யடைவதற்கு வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பரதனையும் பட்டம் கட்டிக் கொள் என்று மந்திரிகளும் பிரஜைகளும்

அயோத்தியில் வற்புறுத்தினர்கள். ஆயினும் அவன் ஒப்புக் கொள்ளவில்லை. இது பரதனுடைய சிறப்பு. சுக்ரீவனே ஒப்புக்கொண்டு விட்டான். அதனால் துன்பம் அடைந்தான். பரதன் வேண்டாம் என்று மறுத்துப் பெருங் கீர்த்தியடைந்தான்.

இராமாயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் சாதாரண வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய தருமம் விளக்கப்பட்டிருக்கிறது. விளக்கம் சில இடங்களில் நேர்முகமான விளக்கமாக இருக்கும். சில இடங்களில் நேராக எடுத்துக் காட்டாமல் குறிப்பாகக் கிடக்கும். பக்தியோடு சிந்தனை செய்தால் விளங்கும்.

57. சுக்ரீவன் சந்தேகம்

மனைவியையும் ராஜ்ய பதவியையும் மறுபடியும் அடைய வேண்டும் என்கிற ஆசை சுக்ரீவனை விட்டுப் போகவில்லை. ஆனால் அதற்கு அவன் ஒரு வழியும் காணவில்லை. வாலியின் பராக்கிரமம் தாண்டக்கூடாத ஒரு மலையாக நின்றது.

ராமனுடைய சகாயத்தைக் கொண்டு காரியம் சாதிக்கலாம் என்று மந்திரி ஹனுமான் தைரியம் சொல்லி வந்த போதிலும் சுக்ரீவன் மனத்தில் சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது. இந்த ராமனுடைய பராக்கிரமத்தைக் கொண்டு வாலியை வெல்ல முடியுமா? இது ஆகாத காரியமாகத் தோன்றுகிறது என்று ஐயப்பட்டுக் கொண்டேயிருந்தான். வாலியினுடைய தேகம் இரும்பைப் போன்றது. அவனை எப்படி ராமன் கொல்லப் போகிறான் என்பது சுக்ரீவனுடைய சந்தேகம்.

ஆயினும் இதை விட்டால் வேறு வழி ஒன்றுமே இல்லை. நிராசையாகப் போவதற்கும் மனம் இணங்கவில்லை. ராமனுடைய பலத்தைப் பரீட்சை செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான்.

நண்பனுடைய பலத்தை எவ்வாறு சந்தேகித்துப் பரீட்சை செய்வது? நான் செய்து முடிக்கிறேன் என்று ராமன் பிரதிக்ஞை செய்து விட்ட பிறகும் எப்படி அவனுடைய பராக்கிரமத்தைச் சோதித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்வது என்றெல்லாம் சுக்ரீவன் யோசித்தான். சுக்ரீவன் மிக்க சமத்காரம் பெற்றவன். மெள்ளப் பேசலானான்:

''ராமச்சந்திர பிரபுவே! நீ சொன்ன சொல் இதுவரையில் என் உள்ளத்தில் இருந்து வந்த துக்கத்தைப் போக்கிவிட்டது. உன்னுடைய பராக்கிரமத்தை அறிவேன். உன்னால் விடப்படும் சரம் மூன்று லோகங்களையும் அழிக்கும். அப்படியிருக்க வாலியின் தேகக் கட்டு அதைத் தாங்குமா? ஆயினும் இந்த வாலியின் பராக்கிரமத்தைப் பற்றி உனக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமை. வாலியானவன் அதிகாலையில் எழுந்து ஒரே முகூர்த்தத்தில் நான்கு சமுத்திரங்களுக்கும் போய் சந்தியாவந்தனம் செய்து முடிப்பான். மலைப் பாறைகளைப் பந்து போல் மேலே எறிந்து விளையாடுவான். காட்டிலுள்ள பெரிய பெரிய மரங்களைப் புல்லைப் பிடுங்குவது போல் வேரோடு விளையாட்டாகப் பிடுங்கித் தள்ளுவான்.

''ஒரு காலத்தில் எருமை வடிவம் பெற்ற துந்துபி என்கிற அசுரன், தான் பெற்ற வரத்தினால் ஆயிரம் யானையின் பலம் அடைந்து, அந்தப் பலத்தை இன்ன விதத்தில் உபயோகிப்பது என்று தெரியாமல் சமுத்திர ராஜனைச் சண்டைக்கு இழுத்தான். சமுத்திர ராஜன், 'உனக்குச் சமமான எதிரியோடு அல்லவா நீ யுத்தம் செய்ய வேண்டும்? வடக்கே ஹிமவான் இருக்கிறான். அவனிடை போய் யுத்தம் கேள். நான் உனக்குச் சமமான எதிரி அல்ல' என்றான். இது நியாயமே என்று துந்துபி ஒப்புக்கொண்டு மிக வேகமாக வடக்கே சென்றான். போய், ஹிமவானை, 'வா! என்னோடு யுத்தம் செய். நீ மகா பலவான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயாம். உன் பலத்தைப் பரீட்சை செய்ய வந்திருக்கிறேன்!' என்று இமய மலையில் உள்ள பாறைகளைக் கொம்பால் இடித்துத் தள்ளி அட்டகாசம் செய்து கர்ஜித்தான். ஹிமவான் தனக்குண்டான கோபத்தை அடக்கிக்கொண்டு 'அப்பா, நீ என்மேல் ஏன் பாய்கிறாய்? எனக்கு யுத்தப் பயிற்சியே கிடையாது. நான் சாதுக்களாகிய முனிவர்களுக்கு இருக்க இடம் தந்து, அவர்களோடு காலம் கழித்து வருகிறேன்' என்றான். 'அப்படியானால் எனக்குச் சமமான ஒரு பலவானைச் சொல்லு. அவனோடு இன்றே நான் யுத்தம் செய்யவேண்டும்' என்று மகிஷாசுரன் மூர்க்கமாகச் சொன்னான்.

''இதைக் கேட்ட ஹிமவான், 'தெற்கே உனக்குச் சமமான ஒரு பலவான் இருக்கிறான். வாலி என்ற வானர ராஜன். இந்திரனைப் போன்ற பராக்கிரமசாலி. அவன்தான் நீ யுத்தத்துக்கு அழைக்கத் தக்க சமமான வீரன். உனக்கு இஷ்டம் இருப்பின் உடனே அவனிடம் போய் யுத்தம் கேள்' என்றான்.

(தொடரும்)

ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கிவிட்டன









இந்திரா பார்த்தசாரதி



1.

திலகம் பரபரத்தாள். "என்ன இப்படி மசமசன்னு உட்கார்ந்திட்டு இருந்தீங்கன்னா?.... கிளம்பலியா?"

புத்தகத்தில் ஆழ்ந்திருந்த அமிர்தம் நிமிர்ந்து பார்த்தான்.

திலகம் நல்ல கறுப்பு. எதற்காக இப்படி முகத்தை வந்து தாக்கும் ஆவேசமான நிறங்களைத் தேர்ந்தெடுக்கிறாளோ, தெரியவில்லை. ஒரு சிவப்புப் பட்டுப் புடவையை அவசரம் அவசரமாகச் சுற்றிக்கொண்டிருந்தாள். முகத்தில் பவுடர் இட்டுத் திட்டாகத் தெரிந்தது. நெற்றியில் இட்டுக் கொண்டிருந்த பெரிய குங்குமப் பொட்டு, வியர்வையினால் மூக்கிலும் வழிந்து நின்றது.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க? புறப்படுங்க, நாடகத்துக்கு நேரமாச்சு."

கிளம்பித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. தனக்கு இஷ்டமில்லை என்று சொன்னாலும் அவள் விடமாட்டாள். நாடகம் எப்படி இருக்கும் என்பது அவன் அறிந்ததுதான். ஒரு ரஸனையற்ற மனைவிக்குக் கணவனாக இருப்பது என்பது எவ்வளவு பெரிய தியாகம்!

திருமணம் என்றாலே பரஸ்பரத் தியாகங்கள் என்றுதான் அர்த்தம். திலகத்தைக் கேட்டால், ஒரு மூச்சில் அனைத்தையும் கொட்டித் தீர்த்துவிடுவாள். "ஒவ்வொருத்தர் மாதிரி நீங்க இருக்கீங்களா? எனக்குப் பிடிச்சது ஒண்ணும் உங்களுக்குப் பிடிக்காது. எப்போ பார்த்தாலும் மௌனச் சாமியார் மாதிரி ஒரு புஸ்தகத்தை வைச்சுக்கிட்டு உட்கார்ந்துவிடறீங்க. எங்கேயாவது கூட்டிக்கிட்டுப் போங்கன்னா, பலிபீடத்துக்குப் போற ஆடு மாதிரி வர்றீங்க... ஒரு உற்சாகம், பொண்டாட்டியோட போறோமேன்னு சந்தோஷம், ஊஹூம் ஊஹூம்...."

அமிர்தம் மேஜையின் மீது விட்டெறிந்திருந்த கார்ச் சாவியை எடுத்துக்கொண்டான். திலகம் ஜன்னல் கதவுகளையும், அறைக் கதவுகளையும் சாத்தத் தொடங்கினாள்.

அமிர்தம் கீழே இறங்கிச் சென்று, 'ஷெட்'டிலிருந்த காரை வெளியே எடுத்தான்.

"குட்—மார்னிங், அங்கிள்ஜீ...."

எதிர்த்த வீட்டு சர்தார்ஜியின் பேரக் குழந்தை. நான்கு வயது. கொழுகொழுவென்று, புகைப்படப் போட்டிக்காகவே வளர்த்து வருகிற குழந்தை மாதிரி இருந்தது.

"குட்-மார்னிங் ஷம்மா..." என்று சொல்லிக் கொண்டே அந்தக் குழந்தையைத் தட்டிக் கொடுத்தான் அமிர்தம். தன் பிஞ்சுக் கையை அவனிடம் நீட்டிய அந்தக்குழந்தை, அவன் கார்க் கதவைத் திறந்து தட்டிக் கொடுத்தவுடன், அவன் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டது.

"குட் ஈவினிங், ஆன்ட்டி...."

அமிர்தம் திரும்பிப் பார்த்தான். திலகம் வந்து விட்டாள்.

திலகம் அமிர்தத்தினிடமிருந்து அக்குழந்தையை வாங்கிக் கொண்டு, கன்னத்தோடு கன்னமாகச் சேர்த்து வைத்துக் கொண்டாள். திலகத்துக்கு எவ்வளவு குறை, பாவம், தனக்குக் குழந்தை இல்லை என்று. திருமணமாகிப் பன்னிரண்டு வருஷங்களாகின்றன. குழந்தை பிறக்க வேண்டும் என்றால் ஓர் ஆபரேஷன் செய்தாக வேண்டும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். ஆபரேஷனுக்கு அஞ்சிய திலகம் குழந்தையே வேண்டாம் என்று சொல்லி விட்டாள்.

திலகத்தின் அணைப்பில் குழந்தைக்கு மூச்சு முட்டியது. "கீழே இறக்கிவிடு. பாவம் திணறிக்கிட்டு இருக்கு...." என்றான் அமிர்தம்.

திலகம் குழந்தையை இறக்கிவிட்டாள். விடுதலை பெற்ற சந்தோஷத்துடன் அது வீட்டை நோக்கி ஓடியது.

"நான்தான் மலடு. அதைச் சொல்லி வேறே காட்டணுமோ?"

"உன்னை யார் மலடுன்னாங்க?.... கல்லுளிமங்கன் மாதிரி உன்னையே நீ வருத்திக்காட்டா உனக்குப் பொழுது போகாது....."

திலகம் பின்பக்கம் கதவைத் திறந்து கொண்டு காரில் உட்கார்ந்தாள்.

"ஏன், இங்கே வந்து உட்காரேன்."

"நான் மலடு, கல்லுளிமங்கன், இன்னும் என்னென்ன சொல்லுவீங்களோ, எல்லாம் சொல்லுங்க. நான் இங்கேதான் உட்காருவேன்."

அமிர்தம் வழக்காட விரும்பவில்லை. ஒன்றும் பேசாமல் காரை 'ஸ்டார்ட்' செய்தான்.

கித்வாய் நகரிலிருந்து, நாடகம் நடக்கும் இடமாகிய 'ஐஃபாக்ஸ் ஹால்' காரில் போகும்போது அதிக தாரமில்லைதான்; ஆனால் ஞாயிற்றுக்கிழமை என்ற காரணத்தால் 'ஐ. என். ஏ. சூப்பர் பஜாரில்' ஏகப்பட்ட கூட்டம். போக்குவரத்துத் தீவுகளில் 'பச்சை விளக்குக்காகத் தவம் கிடந்து போவதற்குள் மணி ஆறரையாகி விட்டது.

திலகம் முணுமுணுத்துக் கொண்டே வந்தாள். "அப்பொவே புறப்பட்டிருக்கணும், அழைச்சுக்கிட்டுப் போக

இஷ்டமில்லாட்டா இப்படித்தான்... நாடகம் ஆரம்பிச்சு ஒரு ஸீன் கூட ஆகியிருக்கும்....''

''ஒரு ஸீன் ஆனா என்ன? நம்ம நாடகங்களை எப்போ வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம், நஷ்டமொண்ணுமில்லே....''

திலகம் பதில் கூறவில்லை. வாதாடும் மன நிலையில் அவள் இல்லை; நாடகம் பார்க்கும் ஆர்வத்தில் அவள் வேறு எதைப் பற்றியும் சிந்திக்கத் தயாராக இல்லை என்பதை அவள் முக பாவனை காட்டியது.

பிரபலமான நாடகந்தான் போலிருக்கிறது. பட்டுப் புடவைகளின் நெரிசல். டிக்கெட் கிடைக்காமல் போகலாம் என்ற அல்ப ஆசைக்கும் இடமில்லை. திலகம் ஒரு வாரத்துக்கு முன்னமே வாங்கி விட்டாள்.

'நாடகம் தொடங்கி ஐந்து நிமிஷந்தான் ஆகிறது' என்று, திலகம் கேட்ட கேள்விக்கு 'கேட்'டில் நின்ற 'பாட்ஜ்' குத்திய இளைஞன் பதில் சொன்னான்.

ஹாலில் போய் உட்கார்ந்தபோது, நாடக அரங்கில் இருபது வயசுப் பெண்ணொருத்தியும் ஐம்பது வயதுக் கிழவர் ஒருவரும் காதல் செய்து கொண்டிருந்தார்கள்.

''ஏன் இந்தக் கிழவருக்கு இந்த வயசில் இப்படி...'' என்று கேட்டுக் கொண்டே உட்கார்ந்தான் அமிர்தம்.

''கிழவரா?... கதைப்படி இவருக்கு முப்பது வயசு. அவர்தான் 'ஹீரோ', 'டைரக்டர்' எல்லாம்... டைரக்ட் பண்ணினா இந்தச் சலுகைகூடக் கிடையாதா...?'' என்றான் பின் 'ஸீட்'டிலிருந்த ஓர் இளைஞன். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் சிரித்தார்கள்.

''நாடகம் பார்க்க வர இடத்திலேயும் உங்க குதர்க்கமா? பேசாமெ உட்கார்ந்திட்டுப் பாருங்க....'' என்று அமிர்தத்தைக் கண்டித்தாள் திலகம்.

அப்பொழுதுதான் அந்தப் பெண்ணை, கிழவருடன் காதல் செய்த பெண்ணைச் சரியாகக் கவனித்தான் அமிர்தம். பன்னிரண்டு வருஷங்கள், அந்தக் கணத்தில் பாய்ந்த நினைவு வெள்ளத்தில் கரைந்து, சரித்திரம் நிகழ்காலமாகியது.

அந்தப் பெண் நித்யாவைப் போலவே இருந்தாள்.

இவளுக்கும் நித்யாவுக்கும் எந்தவித சம்பந்தமும் இருக்க முடியாது. நித்யா ஒரு வங்காளியை மணந்து கொண்டு அமெரிக்காவுக்குப் போய் விட்டாள். யார் இந்தப் பெண்?

மாலை நேரத்து மஞ்சள் வெயிலின் இதமான ஒளி அப்பெண்ணின் முகத்தில் பாய்ந்தது. அப்பொழுது அவள் புன்னகை செய்து கொண்டிருந்தாள்.

அதே புன்னகை...! அமிர்தம் கண்களை மூடிக் கொண்டான். அவன் உடம்பு சிலிர்த்தது....

....நித்யாவைக் கடைசியாக அவன் சந்தித்தது, பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால். திலகம் அவனுக்கு முறைப்பெண். அவன் எழுதிய கடிதத்தை மதிக்காமல், அவன் அப்பா திருமணத்தை நிச்சயித்து, தேதியும் குறிப்பிட்டுத் தந்தி அனுப்பி விட்டார். அவன் நித்யாவைக் கனாட்பிளேஸில், ஒரு ஹோட்டலில் சந்தித்து, இந்த விஷயத்தைச் சொன்னான்.

''அப்பாவுக்குப் பதில் தந்தி கொடுக்கப் போறேன். நம்ம 'ரிஜிஸ்தர் மேரேஜு'க்கு ஏற்பாடு செய்துட்டேன், என்ன சொல்றே நீ —?''

நித்யா 'கட்லெட்'டை நிதானமாக வெட்டிப் பக்குவமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். முகத்தில் இலேசான புன்னகையின் சாயை.

''என்ன சொல்லறே, நீ?''

''ஹும்?'' 'கட்லெட்'டில் இன்னும் கொஞ்சம் 'ஸாஸ்' தடவிக் கொண்டாள்.

''ரோம் பற்றி எரிகிறது நீயானால்?'' அவனுக்கு அவளுடைய நிதானமான போக்கு எரிச்சல் ஊட்டியது.

'' நீங்க பேசறது, வேடிக்கையா இருக்கு....''

''என்ன வேடிக்கையா இருக்கு?''

''நம்ம கல்யாணம் உடனே நடக்கக் கூடிய விஷயமல்ல.'' அவள் 'கட்லெட்' சாப்பிட்டு விட்டு 'நாப்கின்'னினால் வாயைத் துடைத்துக் கொண்டாள்.

''ஏன்?''

''அது உங்களுக்கே தெரியும்....எங்க அம்மா நிச்சயம் சம்மதிக்க மாட்டா. ஜாதிப் பிரச்னை ஒருபுறம் இருந்தாலும், எங்கப்பா போனதிலிருந்து எங்களைக் காப்பாத்திண்டு வர்ற மாமாவுக்குப் பதில் சொல்லியாகணும். அவருக்கோ இருக்கிறது ஒரே பிள்ளை....''

''அப்படியானா நாம சந்தித்தே இருக்கக் கூடாது. இதெல்லாம் உனக்கு முன்னாலேயே தெரிஞ்ச விஷயங்கள் தானே ?''

''நான் சொல்றதைக் கேளுங்கோ... உங்கப்பாவுக்குக் கல்யாணம் பண்ணிக்க வர முடியாதுன்னு தந்தி அடியுங்கோ. கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்.... என்னோட மாமா பிள்ளைக்கும் என் மேலே இஷ்டம் இருக்குன்னு சொல்ல முடியாது. அவருக்கு வேறே யோசனைகள் இருக்கலாம்....''

''உன் மாமா பிள்ளைக்கு இன்னொரு பெண்ணோட சிநேகிதம் ஏற்படற வரைக்கும் நான் காத்துக்கிட்டு இருக்கணுமா?... நான்ஸென்ஸ்....''

நித்யா புன்னகை செய்தாள். அவனுக்குக் கோபம் அதிகமாயிற்று.

''நௌ ஆர் நெவர்... இதுதான் என் வாழ்க்கைத் தத்துவம்....'' என்றான் அவன்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்களை மூடிக் கொண்டு சோபாவில் பின்புறம் சாய்ந்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது.

''என்ன சந்தோஷம் உனக்கு, சென்ஸ் ஆஃப் ரிலீஃப்?'' அவன் குரல் சற்று ஓங்கி ஒலித்தது.

அவள் கண்களைத் திறக்காமலே 'ஃப்ளோர் மியூஸிக்' பக்கம் ஆள் காட்டி விரலினால் சுட்டிக் காட்டினாள். ஊதுவத்தியின் மணம் போல், மெல்லிய இசை தவழ்ந்து கொண்டிருந்தது.

அவன் அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சொன்னான்.... ''ஐ திங்க்....'' இதற்கு மேல் அவனால் ஒன்றும் கூற முடியவில்லை; தயங்கினான்.





அவள் கண்களைத் திறக்கவில்லை. ஆனால் இதழ்கள் முணுமுணுத்தன : ''யூ திங்க்....?''

''மாமா பிள்ளை, மச்சான் பிள்ளைங்கிற சால் ஜாப்பெல்லாம் சுத்த ஹம்பக்... இது, 'ப்யோர் அண்ட் ஸிம்பிள்' ஜாதிப் பிரச்னைதான்.....''

அவள் கண்களைத் திறந்தாள். முகத்தில் இரத்தம் பாய்ந்தது.

''டோன்ட் பி ஸில்லி.'' அவள் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

''ஏன் உனக்கு இவ்வளவு கோபம் வரது? நான் சொல்றது உண்மைங்கிறதினாலே தானே ?''

நித்யா உடனே சிரித்தாள். ''நான் கோபப்படப் போறதில்லே. கோபப்படறதுக்குக் கூட, கொஞ்சம் தரமான குற்றச்சாட்டா இருக்கணும்... நீங்க சொல்றது அதுக்குக்கூட யோக்கியதை இல்லே. எனக்கு வியப்பா யிருக்கு! உங்களுக்கு இவ்வளவு தாழ்வு மனப்பான்மை இருக்கும்னு நான் எதிர்பார்க்கலே....''

''சரி...இதைப்பத்தி விவாதிக்க வேண்டாம். எங்க அப்பாவுக்கு என்ன தந்தி அடிக்கணும்னு இப்போ எனக்குப் புரிஞ்சுட்டது. 'ஃபர் திஸ் ரிலீஃப் மச் தாங்க்ஸ்..''

'' கோபத்திலே கூட ஷேக்ஸ்பியரை 'கோட்' பண்ணறது வேடிக்கையாக இருக்கு...''என்று சொல்லி விட்டு அவன் சிரித்தான்.

''உன்னை என்னாலே புரிஞ்சுக்கவே முடியலே...'' என்றான் அவன் மிகுந்த அலுப்புடன்.

'' அதுதான் என் பலம்....''

''டாமிட்... காவிய காலத்துக் கதா நாயகன் மாதிரி உன் கால்லே விழுந்து கெஞ்சணும்னு நினைச்சிட்டிருக்கியா ?''

'' நோ, யு ஆர் ராங்.... அது 'வெஸ்டர்ன் ட்ரெடிஷன்', நம்ம பண்பாட்டுப்படி, கதாநாயகன், அவன் அம்மா, பாட்டி, இவாளோட காலிலே தான் கதாநாயகி விழுந்து கெஞ்சணும்.''

''ஹாங்க் யுவர் ட்ரெடிஷன்ஸ், ஆல் ஸ்மால் டாக்....'' நித்யா அவனை உற்று நோக்கினாள். ஒரு குறுநகையுடன் அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள்.

அப்பொழுது 'வெயிட்டர்' பில்லைக் கொண்டு வைத்தான். நித்யா உடனே பில்லைக் கையில் எடுத்துக் கொண்டு தன் கைப் பையைத் திறந்தாள்.

''இது என்ன புது வழக்கம்?'' என்றான் அமிர்தம் கோபத்துடன்.

''கணக்குத் தீர்க்கிறேன்....அவ்வளவு தான்...'' அவள் கைப்பை 'சரக்' கென்று மூடிக் கொண்டது.

அதற்குப் பிறகு அவளை அவன் சந்திக்கவே இல்லை.......

கொட்டகை சிரிப்பில் அதிர்ந்தது.

''சிரியுங்களேன்....அந்தப் பொண்ணு என்ன போடு போடுது?'' என்றாள் திலகம்.

''எந்தப் பொண்ணு?'' அமிர்தம் சுற்றுமுற்றும் பார்த்தான்.

''நாசமாப் போச்சு, நாடகம் பார்க்கிறீங்களா, தூங்குகிறீர்களா?''

''நாடகத்திலே வர பெண்ணைச் சொல்றியா? நாடகக் கதையே எனக்குப் புரியலே, 'சர் ரியலிஸ்டிக் ப்ளே' போலிருக்குது....''

''என்ன 'ஸ்டிக்கா' வேணு இருக்கட்டும். நாலு பேரோட அநுசரித்துப் போவதைத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் ஜனநாயக உலகத்துக்கு ஏற்ற விவேகம்.''

தனக்கு அந்த விவேகம் இயல்பாகவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நித்யாவும் இதை அடிக்கடி சொல்லிக் காட்டுவதுண்டு. சந்திரனுக்குத் தனியாகப் போய் வரக்கூடிய துணிச்சல் தனக்கு உண்டு. ஆனால் ஐந்தாறு பேர் கூடிய இடத்தில் அவனுக்கு அசாத்திய கூச்சம்....

அமெரிக்கத் தூதுவராலயத்தின் சார்பில் நடந்த ஒரு 'சாரிட்டி பாலு'க்கு அவனும் நித்யாவும் போனார்கள். அப்போது நித்யா பத்து நிமிஷத்துக்கு ஒரு மார்வாரி நடனம் ஆடி அனைவரையும் மகிழ்வித்தாள். அப்புறம் எல்லாருடனும் கலகலப்பாகப் பேசிச் சிரித்தாள். அவனோ அங்கிருந்த இரண்டு மணி நேரமும் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு, அவளைச் சுற்றிலும் பொங்கி வழிந்த உற்சாகத்தை, ஒதுங்கிய நிலையில் கவனித்தான். நித்யா ஒரு புதிர். அவளால் ஐன்ஸ்டீன் கொள்கையைப் பற்றியும் ஹாய்ல்ஸ் — நர்லீகர் திருத்தங்களைப் பற்றியும் விவாதிக்க முடியும்; 'ப்ளே பாய்' உபாசகர்களுடைய முகம் சிவக்கும்படியாகப் பேசவும் முடியும்.

விருந்து முடிந்து வரும் போது நித்யா அவனிடம் சொன்னாள்: ''அங்கே இருந்தவா எல்லாரும் என்னைக் கேட்டா.''

''என்ன கேட்டாங்க?''

''அவரென்ன உங்களுக்குக் காவலான்னு....நீங்க அப்படித்தான் நடந்துண்டீங்க, வேவு பார்க்கிற மாதிரி மூலையிலே உட்கார்ந்துண்டு...''

''ஜனநாயக உலகத்துக்கும் எனக்கும் பொருந்தாதுன்னுதான் நீ அடிக்கடி சொல்லிக்கிட்டிருப்பியே...''

''இன் ஃபாக்ட் உங்களுடைய இந்த ஒதுங்கிய தன்மைதான் எனக்குப் பிடிக்கிறது. 'ஸ்ட்ராங் ஸைலன்ட் மான்' இல்லையா?'' என்றாள். இப்படி எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறாள்.

நித்யாவைக் கவர்ந்த அந்த 'ஒதுங்கிய தன்மை' பிறகு அவளுக்கு அலுப்பைத் தர ஆரம்பித்து விட்டதோ? ஹோட்டலில் அவளைக் கடைசியாகச் சந்தித்தபோது, அவனுக்கும் அவளுக்கும் ஏற்பட்ட மனவேறுபாட்டுக்குக் காரணம் என்ன? ஒரு முக்கிய முடிவு எடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் போது அவள் ஏன் பின் வாங்கி விட்டாள்? பார்க்கப் போனால் அவளுடைய மாமாவின் பிள்ளையும் அவளை மணக்கவில்லை. அவன் வேறு யாரையோ காதலித்து மணந்து கொண்டான். நித்யாவும் இதைத் தானே அப்பொழுது தன்னிடம் சொன்னாள். ஒருவேளை தான் அவசரப்பட்டது தான் முட்டாள்தனமா?—

முட்டாள்தனந்தான் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் ரஸனையற்ற இந்தக் கூட்டத்தோடு சேர்ந்து விழுந்து விழுந்து சிரிக்கும் திலகத்தின் பக்கத்தில் தான் இப்பொழுது உட்கார்ந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.....

''அட, பாவமே!'' என்று கத்தினாள் திலகம்.

''ஏன், என்ன ஆயிடுச்சு?'' என்று கேட்டான் அமிர்தம்.

''குழந்தையைக் கொல்ல வீட்டையே கொளுத்தறான், அந்தப் படு பாவி.... எவ்வளவு தத்ரூபமா காட்டறாங்க......!''

கதாசிரியரையும் அந்த நெருப்பில் தூக்கிப் போடலாமென்று தோன்றிற்று அமிர்தத்துக்கு. கதையிலே வரும் 'வில்லன்' படுபாவியல்ல; கதாசிரியர் தான்....

அப்பொழுது அந்தப் பெண் மேடையில் தோன்றினாள். நீண்ட கூந்தல் விரிந்து கிடந்தது. முகத்தில் ஓர் அலட்சிய பாவம், மின்னொளிப் பார்வை... அப்படியே நித்யாவைப் போலவே இருந்தாள்.

''நல்லா 'ஆக்ட்' பண்ணறா...'' என்றாள் திலகம்.

"இந்தப் பெண்ணோடை பேரென்ன?" என்று கேட்டான் அமிர்தம்.

"யாருக்குத் தெரியும்?" என்றாள் திலகம்.

"பானுமதி..." என்ற குரல் பின்னாலிருந்து கேட்டது.

அமிர்தம் திரும்பிப் பார்த்தான். பதில் சொன்ன பெண்ணுக்கு இருபது வயதிருக்கும்.

"பானு என்னோடை சிநேகிதி...." என்றாள் அந்தப் பெண்.

"ஐ ஸீ...."

"இது வரையிலும் இவங்க நாடகத்திலே நடிச்சதில்லேபோல் இருக்கே..." என்றாள் திலகம்.

"இல்லே... டில்லிக்கு வந்து ஆறு மாசந்தான் ஆறது. இதுதான் தில்லியிலே முதல் நாடகம் இவ 'ஆக்ட்' பண்ணறது."

"ஷீ ஈஸ் வெரி ஸ்மார்ட்" என்றான் அமிர்தம். திலகம் அவனைக் கட்டெரிப்பவள் போல் பார்த்தாள். அவள் அப்படிப் பார்ப்பதைத் தெரிந்து கொண்டதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை.

"வேலையாயிருக்காளா, படிக்கிறாளா?" என்று தொடர்ந்து கேட்டான் அமிர்தம்.

"ரேடியோவிலே வேலையாயிருக்கா."

"விசாரிச்சது போதும், நாடகத்தைப் பாருங்க...." என்றாள் திலகம் கீழ்க்குரலில்.

சரி, நீ நாடகத்தை இருந்து பார்த்துட்டு வா, நான் வாசல்லே நிக்கறேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் அமிர்தம்.

"உட்காருங்க....இதோ முடிஞ்சுடும்...." என்று அவள் கூறிக்கொண்டிருக்கும் போதே, அவன் அவள் கையை உதறிவிட்டு வெளியில் போனான்.

(தொடரும்)


ஆலமரம்

ஆலமரக் கொம்பொன்றைக் கொண்டுவந்து
ஆழத்தில் குழிதோண்டி நட்டுக் கந்தன்
அன்றாடம் நீர்கொட்டிக் கவனத்தோடு
ஆடுகளும் மாடுகளும் கடிக்காவண்ணம்
அப்புறத்துச் செல்பவர்கள் அழிக்காவண்ணம்
அதைச்சுற்றி முள்வேலி அடைத்துக்காத்தான்

அக்கொம்பும் நாளடைவில் துளிர்த்ததாலே
ஆயிரமாம் கிளைவிட்டு அடர்ந்துமேவி
அண்டையய லார்தங்கிக் களைப்புமாறி
ஆட்டிடையர் கால்நடைகள் இளைப்புமாறி
அகிலத்துப் புள்ளினங்கள் அண்டிவாழ்ந்து
அநுதினமும் கந்தனது பாதுகாப்பில்
ஆத்தூரின் ஆற்றருகே வளர்ந்ததம்மா!

சோசலிசம் என்றொருவன் அங்கேவந்து
ஜோராகத் தன்மனத்தே எண்ணமிட்டான்:
"ஆலமரத் திலைகளெல்லாம் ஆட்டுக்காகும்
அடிமரத்தைப் பிளந்தாலோ வீட்டுக்காகும்
மாகிளைகள் விழுதனைத்தும் விறகுக்காகும்
விணிலிங்கு இம்மரமும் இடத்தைக்காத்து
விணனிந்தக் கந்தனிதைத் தானதாமென்று
விருப்புப் பேசுவதை ஒழிப்போ"மென்று
அரிவாளும் செங்கொடியும் பிடித்தவீரர்
ஆயிரம்பேர் உடன்வந்து தறித்தானம்மா!





தகைமை
சான்ற
தனிப்பெருமை
தவழவே
தாவண்கெரே
ஸூப்பர்ஃபைன்
வேட்டிகள்

ரகுபதி ராகவ மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

36

ஹிந்துதர்மத்தில் ஏசுவுக்கும் இடமுண்டு. மகம்மது நபிக்கும் இடமுண்டு. பார்ஸி ஆசாரியர் ஸொரோஆஸ்தருக்கும் யூதர்களுடைய ஆசாரியர் மோஸஸுக்கும் — எல்லாருக்குமே ஸ்தானம் உண்டு. யாரையும் ஹிந்து தர்மம் அப்புறப்படுத்தாது. இவர்கள் எல்லோருமே பகவானை அடைய வழி காட்டுகிறவர்கள் என்பது ஹிந்து சாஸ்திரம். ஒரே தோட்டத்தில் பல்வேறு புஷ்பங்கள் மலர்ந்திருப்பதைப் போல் பல்வேறு சமயங்களும் மலர்ந்திருக்கின்றன. ஒரு மரத்தில் பல கிளைகள் கிளைத்திருப்பது போல் பல மதங்களும் உண்மை என்கிற மரத்திலிருந்து உண்டாயிருக்கின்றன. எல்லா சமயங்களுமே உண்மையை விளக்குகின்றன. ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாறும் தற்கால வழக்கத்தை நான் கொஞ்சம் கூட ஒப்புக் கொள்ள முடியாது. தற்போது இந்தியாவிலும் மற்ற தேசங்களிலும் நடந்து வரும் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்துக்கு மாற்றும் முயற்சிகள் பெரும் தவறாகும். உலகத்தில் பூசல்கள் அடங்கி, சமாதானம் நிலைப்பதற்கு இந்த முயற்சிகள் பெருந் தடையாகும்.

சமயப் பூசல்கள் என்பதே ஆண்டவன் சந்நிதானத்தை அவமதிப்பதாகும். ஆண்டவன் சந்நிதிக்கு அழைத்துப் போகும் உபதேசங்களுக்குள் வெறுப்புக்கும் பூசலுக்கும் இடம் எது? அந்தப் பேச்சே பாபமாகும். எப்படியாயினும் அந்தப் பூசல்கள் இந்தியாவில் நடந்து கொண்டு வருகின்றன. மதம் என்பதே பிறந்த புனித பூமியாகிய இந்தியாவில் இந்தப் பூசல் நடைபெற்று வருகிறது. இது ஒரு பெருஞ் சோதனை.

ஒரு ஹிந்து கிறிஸ்தவனாக வேண்டும் என்று ஏன் கிறிஸ்தவர்கள் விரும்புகிறார்கள்? கிறிஸ்தவன் ஒருவன் ஹிந்துவாக மாற வேண்டும் என்று ஏன் ஹிந்துக்கள் விரும்ப வேண்டும்? நல்லவனாகவும் தெய்வ பக்தியுள்ளவனாகவும் இருக்கும் ஒருவனை நாம் சும்மா விட்டு விடாமல் ஏன் மத மாற்றத்தைக் கோருகிறோம்? ஒருவனுடைய குணமும் சீலமும் சரியாக இருந்தால் அவன் எந்தக் கோயிலுக்கு அல்லது மசூதிக்குப் போனால் என்ன? இதைப் பற்றி நாம் சண்டை போட்டுக் கொள்வது நாஸ்திகத்தில்தான் முடியும். சச்சரவிலும் ரத்தப் பிரவாகத்திலும்தான் கொண்டு போய்ச் சேர்க்கும். (ஹரிஜன் 30—1—37)

பிற மதங்களைப் பற்றியாவது சமய நூல்களைப் பற்றியாவது குற்றங் குறைகளை எடுத்துச் சொல்வது என்னுடைய வேலையல்ல. அவற்றில் நான் காணும் பெருண்மைகளை எடுத்துக் காட்டிப் பிரசாரம் செய்வதே எனக்குக் கௌரவம் தரும் பணியாகும். பிறருடைய மதாசாரங்களிலும் பிரபந்தங்களிலுமுள்ள குற்றங்களை எடுத்து விமர்சனம் செய்வது என் தொழில் அல்ல. அவற்றில் நான் காணும் நல்ல விஷயங்களை எடுத்துக் காட்டுவதே எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இஸ்லாமியத்தில் எனக்கு ஏதேனும் சரியாக விளங்காமல் போனால் எனக்கு நண்பர்களாகிய நல்ல முஸல்மான் பக்தர்களைக் கொண்டு விளக்கம் பெற முயற்சி செய்வேன். எந்த மதமாயினும் சரி, அந்த மதத்தைச் சேர்ந்த நல்ல பக்தர்களைக் கொண்டுதான் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

பிற மதங்களையும் ஆசாரங்களையும் இப்படித்தான் மரியாதையுடன் அணுக வேண்டும். அப்போதுதான் சர்வ சமய சமத்துவத்தை உணர முடியும். பிற சமயங்கள் எதுவாயினும் என்னுடைய சமயமாகிய ஹிந்து சம்பிரதாயத்தில் என்ன குறைகளை நான் காண்கிறேனோ அவற்றை எடுத்துக் காட்டி அந்தக் குறைகளைத் தீர்க்கவும் குற்றங்களைக் களையவும் முயல்வது என்னுடைய கடமையாகும்; உரிமையுமாகும். ஒரு மதத்தைச் சேர்ந்தவர் பிற மதங்களின் குற்றம் குறைகளை எடுத்துப் போட்டுப் பட்டியல் போடுவது மடைமையாகும். ஹிந்து மதாசாரத்தில் உள்ள குறைகளைப் பிற மதத்தினர் விமரிசிப்பதற்கு அதிகாரமில்லை. ஹிந்து சாஸ்திர சம்பிரதாயங்களை அவர்கள் உண்மைப் பொருள் அறிந்து சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய பார்வை தெளிவான பார்வையாகாது. ஹிந்துக்களல்லாதவர்கள் ஹிந்து தர்மத்தையும் சம்பிரதாயங்களையும் குற்றம் சொல்லும்போது அவர்கள் சொல்வது பிசகு என்று நான் எண்ணுகிறேன். அதைப்போலவே இஸ்லாமியத்தையாவது கிறிஸ்தவ மதத்தையாவது நம்மவர்கள் விமர்சனம் செய்து குற்றங்கள் எடுத்துக் காட்டுவது தவறு என்று நான் காண்கிறேன். (ஹரிஜன் 13—3—37)


இஸ்லாமியர்களுடைய 'அல்லா'வும் கிறிஸ்தவர்களுடைய 'தேவனும்' ஹிந்துக்களுடைய ஈசுவரனும் ஒருவனேயாகும். ஈசுவரனுக்கு ஹிந்து சம்பிரதாயத்தில் எண்ணற்ற நாமங்களுண்டு. இஸ்லாமியரும் ஆண்டவனுக்குப் பல பெயர்கள் கொடுத்திருக்கிறார்கள். பெயர்கள் எல்லாம் லட்சணங்களைக் குறிக்கும். கல்யாண குணங்களை வைத்துப் பல பெயர்கள் கொடுக்கிறோம். சொல்லுக்கும், கருத்துக்கும் அடங்காத பரம்பொருளின் லட்சணங்களைக் காண முயல்கிறோம். முற்றிலும் காண்பது முடியாத காரியம். ஆண்டவனை நாம் வணங்குவது உண்மையானால் உலகத்தில் உள்ள பல மக்களும் நம்முடைய சகோதரர்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். எல்லாச் சமயங்களும் சமம் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

(ஹரிஜன் 13—3—38)

ஆறு கைகள் இருந்தாலும் போறுது போலிருக்கே!



ஒரு Prestige பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் வாங்கிவிடுங்கள்!



பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் உங்கள் பொன்னான சமையல் நேரத்தில் ஒருமணி மிச்சமாக்குகிறது

சமையல் பிரச்சனையை எளிதாக்கவே தயாராகிறது பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர். பிரஸ்டிஜ் சமையல் வழக்கமான சமையலுக்காகும் நேரத்தில் கால்பங்கு நேரத்திலே தயார். அது எளிதானது. அத்துடன் பத்திரமானதும்கூட. 12 வயது சிறுமிகூட கையாளலாம். எரிபொருள் செலவில் எத்தனையோ மிச்சம். பிரஸ்டிஜ் இருந்துவிட்டால் சமைக்கும்போது குழப்பமோ, தடுமாற்றமோ இருக்காது. ஏனெனில் அதில் ஒரே சமயத்தில் மூன்றுவகை சமைக்கலாம். பிரஸ்டிஜில் தயாரான உணவில் சத்து, ருசி, மணம் முதலியவை குறைவதில்லை. பிரஸ்டிஜ் ஆயுட்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்பும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர்குக்கர் பிரஸ்டிஜ் ஒன்றே.

பிரஸ்டிஜ் ஐந்து அளவுகளில் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு தேவையான அளவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.


பெயர்கள் வேறானாலும் ப்ரீத்.' பிரஸ்டிஜ் இரண்டும் ஒன்றே. இந்தியாவில் பிரஸ்டிஜ், ஏற்றுமதிக்கு ப்ரீத்.

> புகழ்பெற்ற ப்ரீத் ஸ்டிம் இட், ஸ்கில்லெட், ஸாஸ்பான் - சமையல் விரைவாகவும் எளிதாகவும் முடிய இவைகள் உதவுகின்றன.

டிடி (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.

TTP-1799

மில்டனின் 'இழந்த சொர்க்கம்' எல்லாப் பிரதிகளும் தொலைந்து விட்டாலும் பாதகமில்லை; மெக்காலே இருக்கிறார், எழுதிக் கொடுப்பார் — என்று மெக்காலேயின் ஞாபக சக்தி பற்றிச் சிறப்பாகக் கூறுவதுண்டு. மெக்காலே தமது பன்னிரண்டாவது வயதிலேயே 'இழந்த சொர்க்கம்' முழுவதும் மனப்பாடம் செய்திருந்தார்! கோவில்பட்டியைச் சேர்ந்த பதினொரு வயதுச் சிறுவன் செல்வன் ராஜேந்திரனும் ஞாபக சக்தியில் மெக்காலேயுடன் போட்டி போடுகிறான். 1330 திருக்குறளும் ராஜேந்திரனுக்கு மனப்பாடம். பொருள் உணர்ந்து மனப்பாடம் செய்து வைத்திருக்கிறான். இங்கொன்றும் அங்கொன்றுமாக 5, 6 குறள்களுக்கு நான் அடியெடுத்துக் கொடுத்தவுடன் அவற்றை முழுமையாக ஒப்பித்துத் தெளிவுரையும் கூறினான் சிறுவன் ராஜேந்திரன். 'ஒப்புரவறிதல்', 'செங்கோன்மை', 'நட்பு', 'ஒற்றாடல்' இவை பற்றியெல்லாம் வள்ளுவர்



குறளைக் கரைத்துக் குடித்து....

132 மாதங்கள் 1330 குறள்கள்!

என்ன கூறுகிறார் என்று கேட்டதும் சரமாரியாக அந்த அதிகாரங்களில் உள்ள குறள்களைப் பொழிந்து தள்ளுகிறான்.

கோவில்பட்டி வ. உ. சி. உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் படிக்கும் ராஜேந்திரன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். "அப்பா எலெக்டிரிக் சாதனங்கள் விற்கும் ஒரு கடையில் வேலை பார்க்கிறார். எனக்கு மூன்று அக்காள், ஒரு தம்பி. தமக்கைகள் யாருமே அதிகம் படிக்கவில்லை. சின்ன வயதிலிருந்தே என் மாமாவின் ஆதரவில் தான் நான் படித்து வருகிறேன். நான் மூன்றாவது வகுப்பில் படிக்கும்போதே எனக்குத் திருக்குறளில் ஆர்வம் பிறந்தது. மாமா திருக்குறள் படிப்பார். அவர் பள்ளி ஆசிரியர். "என்ன படிக்கிறீங்க?" என்று கேட்பேன் மாமாவிடம். அவர் திருக்குறளின் சிறப்பை எனக்கு விளக்கவும், எனக்கும் குறள் படிக்கும் ஆசை ஏற்பட்டது.

"ஒரு தடவை மதுரை ஆதீனம் திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளிடம் நான் குறள் ஒப்பித்த போது, 'மழலை மொழியில் குறள் சொல்லுகிறாய். திருமந்திரம், திருப்புகழ் இவையும் படி' என்று அவர் சொன்னார். திருமந்திரம் இப்போது படித்து வருகிறேன்" என்கிறான் ராஜேந்திரன்.

"ராஜாஜி 'கல்கி'யில் எழுதிவந்த குறள் விளக்கம் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைத் தவறாமல் படித்துவந்தேன். பரிமேலழகர் குறளுக்கு எழுதியுள்ள உரையையும் இப்போது படித்து வருகிறேன். திரு வன்மீகநாதன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளதையும் படித்துக் கொண்டிருக்கிறேன்."


"இவ்வளவு அக்கறையுடன் குறள் படித்து வருகிறாயே — இதன் மூலம் உன் உள்ளம் பண்படுவது தவிர வேறு என்ன பயன் எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டதற்கு, "பெரியவங்களைச் சந்தித்து அவங்க ஆசியைப் பெறலாமே அது போதாதா?" என்கிறான் ராஜேந்திரன்.

"உன் வகுப்பில் உள்ள மற்ற சிறுவர்களிடம் குறளின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லி, அவர்களையும் குறள் படிக்க நீ தூண்டுவாயா?"

"என் சிநேகிதர்கள் சிலபேரிடம் சொல்லுவேன். 'பள்ளிக்கூடப் பாடமே படிக்க முடியல்லையேடா!' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு மேல் வற்புறுத்த மாட்டேன்" என்றான் பளிச்சென்று.

"கோவில்பட்டியிலே எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேதான் பொதுக்கூட்டங்கள் நடக்கும். அரசியல் கூட்டங்களுக்கும் நான் போவேன். தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்க எனக்கு ஆசை. கிருபானந்த வாரியார் அவர்கள் பிரசங்கம் என்றால் தவறாமல் போய் விடுவேன்" என்கிறான் செல்வன் ராஜேந்திரன். சிறுவனின் வயது 132 மாதங்கள்; 1330 குறளும் மனப்பாடம் என்றால் பாராட்ட வேண்டியது தானே?

— 'பாணன்'



பிறருக்கும் எடுத்துச் சொல்லி....

பார்! பார்! பென்ஷன் பார்!



சில வெளிநாடுகளில் ஓய்வுபெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கு வழங்கும் பென்ஷன் விகிதங்கள் - ஓய்வு பெறுமுன் வாங்கும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டது.

மேற்கு ஜெர்மனி	70 சதம்	பிரிட்டன்	50 சதம்
ஃபிரான்ஸ்	75 சதம்	இத்தாலி	80 சதம்
ரஷ்யா	50 — 55 சதம்	அமெரிக்கா	80 சதம்

யுகோஸ்லேவியா நாட்டில் எவ்வளவு தெரியுமா? **நூற்றுக்கு நூறு!**

ஆதாரம்: ஓய்வுபெற்றவர்கள் சங்க சஞ்சிகை

ஜலதோஷக்காரர் சொல்லும் தும்மல் கதைகள்

நீக்ரோக்களில் ஒரு பிரிவினர் உடல் நலம் குன்றியிருக்கும்போது தும்மல் வந்தால், அவர்கள் உடலுக்குள் பிரவேசித்திருக்கும் துர்தேவதையோ, பிசாசோ தங்களை விட்டு வெளியேற முயலுவதாக நினைக்கிறார்கள். உடல் நலம் சரியான பிறகு தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக் கொள்கிறார்கள். அந்தத் துர்தேவதை மீண்டும் அவர்களை, அடையாளம் கண்டு பிடித்துவிடுமோ என்ற பயமாம்!

ஃஃஃ

கலிபோர்னியா பிரதேசத்தில் ஒரு மனைவி தன் கணவனிடமிருந்து விவாகரத்துக் கோரி வழக்குத் தொடுத்தாள். அந்தக் கணவன் நள்ளிரவில் திடீர் திடீரென்று ராட்சதத் தும்மல்கள் போட்டு அவள் தூக்கத்தைக் கெடுத்துவிடுவதுதான் காரணம்! வழக்கில் வெற்றியும் பெற்றாள்.



ஆனால் லண்டன் விமான நிலையத்தில், கூட்டத்தின் நடுவே கணவனை விட்டுப் பிரிந்த மனைவி தன் கணவனின் பிரத்தியேகமான தும்மல் ஒலியைக் கேட்டு அவனைக் கண்டு பிடித்து விட்டாள்.

ஃஃஃ

மேற்குப் பிராந்திய ஜரிஷ்காரார்கள் தும்மலைச் செல்வந்தர்களின் குறைநிசயங்களில் ஒன்றாகக் கருதுகிறார்கள். யுகோஸ்லேவியர்களோ, தும்மல் போடுவதை மதிப்புக் குறைந்த செயலாகக் கருதுகிறார்கள்.

சமீபத்தில் ஒரு தும்மலின் மதிப்பு ரூபாய் ஆறு லட்சத்தை எட்டியது! வியப்படைகிறீர்களா?


ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள சிட்னி நகருக்கு



ஆர்தர் விண்டோ என்பவர் தம் லாரியை ஓட்டிக் கொண்டு போனார். ஒருகணம் தம்மைமறந்து ஒரு தும்மல் போட்டார். அந்த வேகத்தில் கை ஸ்டியரிங்கிலிருந்து விலகியது. லாரி, பாதை ஓரமாக இருந்த இரு கார்கள் மீது மோதியது. அந்த வேகத்தில் லாரி பெட்ரோல் டாங்கி வெடித்துத் தீப்பிடித்தது. பாதை ஓரத்தில் இருந்த ஒரு வீடும் தீக்கிரையாகியது! சேதத்தின் மொத்த மதிப்பு ஆறு லட்சம் ரூபாய்! ஆர்தர் விண்டோ, எந்த விதக் காயமும் இன்றித் தப்பினார்!

சங்கீத ஞானமும்... பக்தி விஷயம்...

நம் நாட்டில் ஆரம்பக் கல்விக்கு எலிமெண்டரி பள்ளிகள் நடத்துவது போல ஹங்கேரி தேசத்தில் இசை போதிப்பதற்காகவே, ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரிய ஆசிரியைகள் ஒரு வாத்திய கோஷ்டியை உருவாக்கிக் குழந்தைகளுக்கும் பாடிக் காண்பித்து அவர்கள் மனத்தை இசையின்பால் இழுக்கிறார்கள்.



ஜோரான செய்திகள்

பிரெஞ்சு மொழியில் 'ஜோர்' என்ற சொல்லுக்கு 'அன்றாடம்', 'தினசரி' என்ற பொருள்கள் உண்டு. இதிலிருந்துதான் 'ஜர்னலிசம்' என்ற வார்த்தை தோன்றியது.

சிரிக்கவும் கொரிக்கவும்

• கோமதி சுவாமிநாதன் •

பட்டு மாமா சிட்டு மாமி



சிட்டு மாமி: புதிய சட்டப்படி மூன்று வருஷங்களாக அயல் நாடு செல்லாதவர்கள் உடனே புறப்படலாமாம். தடை ஏதும் இல்லையாம்!

பட்டு மாமா: நான் மூணு மாசமா ஊரைப் பக்கம் தலைகாட்டலையேடி! உடனே கிளம்பறேன். சீட்டாட்டத்துக்கு (எக்ஸ்) சேன்ஜ் பில் பண்ணு!

□ □ □ □ □ □ □ □

சூடான புகழ்

பிரிட்டனில் சமீபத்தில் நடந்த தேர்தலில் வெற்றிபெற்ற டோரி கட்சித் தலைவர் எட்வர்ட் ஹீத்தின் கழுத்தில் யாரோ ஒருவன் சிகரெட்டு நுனியால் சுட்டுவிட்டான். — செய்தி

ஹீத் வெற்றி பெற்றதே ஒரு சூடான செய்தி அல்லவா?

ஆகாச வெடி

1935ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி க்வெட்டாவில் நேர்ந்த பூகம்பத்தால் ஐம்பதினாயிரத்துக்கும் மேலான மக்கள் உயிரிழந்தார்கள்.

1970ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி பெருவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் அறுபதினாயிரத்துக்கும் மேலான மக்கள் உயிரிழந்தனர்.


— செய்தி



இந்தப் பூகம்பத்துக்கும் அரசியல் வாடை வீசுகிறதோ? தன் முப்பத்து ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதில் அதற்கு எத்தனை ஆர்வம்!

✱

பீகார் மாநில மந்திரிகளுக்கு ஒரு தனிக் கல்லூரி திறக்கப்பட வேண்டுமென்று ஒரு சட்டசபை உறுப்பினர் யோசனை கூறினார். — செய்தி



விஷயத்தை அரைகுறையாகக் கேட்ட ஒரு தந்தை தன் மகனை அந்தக் கல்லூரிக்கும் ஒரு விண்ணப்பம் போடத் தூண்டலாம்.


வாய் திறந்து வாழ்க!

ஒரு பெரிய தொழிலதிபர் தம் மேஜைமீது சிறிய கண்ணாடி மீன் தொட்டி ஒன்று வைத்திருக்கிறார். அதிலிருக்கும் ஒரே 'தங்க மீனை' அவர் அடிக்கடி பார்த்துக்கொண்டே, தம் மற்ற அலுவல்களைக் கவனிக்கிறார். இதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் இதுதான்.

"இந்தத் தொழிற்சாலையில் இருக்கும் ஊழியர்களில், யார் வாயைத் திறந்தாலும் 'ஊதியத்தை உயர்த்து! ஊதியத்தை உயர்த்து!' என்றுதான் கோஷமிடுகிறார்கள். இந்த மீன் அடிக்கடி வாயைத் திறக்கிறது. ஆனால் ஊதிய உயர்வு கேட்பதில்லை!"



வாழ்வில் முன்னேற விரும்பும் இளைஞர்களில் நீங்களும் ஒருவரா?



முன்னேற விரும்புவோர்க்கு வாழ்வே ஒரு எதிர்நீச்சல்.
அதைச் சமாளிக்க இணையற்ற ஆர்வம், ஈடில்லாமுயற்சி,
உத்வேகம் முதலியன உறுதுணை நிற்கும்.

இவை ஒருங்கிணைந்த இளைஞரா நீங்கள்?

அப்படியானால் உங்களுக்கேற்ற சைக்கிள் பிலிப்ஸ்
உங்கள் துடிப்புமிகு தன்னம்பிக்கை, உறுதிமிகு ஆர்வம்,
இவற்றை அப்படியே பிரதிபலிக்கிறது பிலிப்ஸ் சைக்கிள்.

உயரிய எஃகினால் நுண்ணிய வேலைப்பாட்டுடன்
உருவாக்கப்படும் பிலிப்ஸ் உறுதியில் தன்னிகரற்றது.
சவாரிக்கு சுகமானது. தோற்றத்தில் எடுப்பானது.

வெற்றிப்பாதையில்
வேகமாக முன்னேற

பிலிப்ஸ்

சைக்கிள்

இந்தியாவில் தயாரிப்போர்: டி ஐ சைக்கிள்ஸ்
ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப்
இந்தியா லிமிடெட், சென்னை-1
பதிவு பெற்று உபயோகிப்போர்.
● J.A. பிலிப்ஸ் கம்பெனி லிமிடெட்,
யு.கேயின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள்

TIC-PH-5383

கம்யூனிஸம் கண் விழிக்கிறது



நாட்டின் வளமான துரித முன்னேற்றத்துக்குச் சுதந்திரப் போட்டிப் பொருளாதார முறையே சிறந்தது என்பதை ருஷ்ய கம்யூனிஸ்டுகள் உணரத் தொடங்கி யிருக்கின்றனர்.

ரஷ்யாவிலே தொழில்களைப் பிடித்து வரும் நோய்க்கு இப்போது முதலாளித்துவ மருந்து தரப்படுகிறது. இம் மருந்தின் வாசனை ரஷ்யாவின் தீவிரவாதிகளான திட்ட வல்லுநர்களுக்குப் பிடிக்காதுதான், ஐயமில்லை. இந்தத் தீவிரவாதிகளுக்கு உற்பத்திச் செலவு பற்றி அக்கறை கிடையாது. தொழிலாளர் உற்பத்தித் திறன் என்று ஒன்று இருப்பதாக அவர்கள் எண்ணிப் பார்த்ததில்லை; இதனைப் புறக்கணித்தே வந்திருக்கின்றனர். அவர்கள் குறிக்கோள் எல்லாம் உற்பத்தியின் அளவிலேதான். மாறாக உண்மை நிலையை உணர்ந்துள்ள கம்யூனிஸ்டு பொருளியல் வல்லுநர்கள் நீண்ட காலம் இடையறாமல் சொல்லி வருவதென்ன? ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசு அரை நூற்றாண்டுக் காலமாக இடையூறு செய்து வந்திருக்கிறது என்பது இவர்கள் துணிபு. பொருளாதாரத் துறையிலே ரஷ்யா முன்னேற வேண்டுமானால், இந்த இடையூறுகளை எதிர்த்து நின்று அவற்றைக் களைய வேண்டும்; தீவிரப் பிடிவாதக் கொள்கைகளைக் கை கழுவிவிட வேண்டும். தவிர்க்க முடியாதவை இவை என்று வாதிடுகின்றனர், உண்மை நிலையை உணர்ந்துள்ள கம்யூனிஸ்டு பொருள் இயல் வல்லுநர்கள்.

பொருளியல் வல்லுநர் எவ்ஸெய் லிபெர்மன் தெரிவித்த யோசனைகளின் விளைவுதான் ஆறு ஆண்டுகளுக்குமுன் தோன்றிய இந்தச் சீர்திருத்தக் கருத்துக்கள். ரஷ்ய நாட்டில் லிபெர்மன் கொள்கைகளை எல்லோரும் ஒப்புக் கொள்வதில்லை என்றாலும் அவர் கூறியதென்ன? தொழிற்சாலை மேலாளர்கள், தத்தம் ஆலைகளை, லாபம் தரும் வகையில் நடத்த வேண்டும்.

ஆலையின் உற்பத்தித் திறனை உயர்த்தியும், பொருள்களின் தரத்தை விருத்தி செய்தும் லாபம் காட்டினால் மேலாளர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டும். லிபெர்மன் வாதம் இதுதான். இரண்டு ஆண்டுகள் லிபெர்மன் யோசனைமீது விவாதம் நடந்தது. அதனை அப்படியே ஏற்காமல் மிகவும் குறைத்து 40,000 தொழிற்சாலைகளில் அமுலுக்குக் கொணர்ந்தனர். முதலில் ஏமாற்றம்தான் கிடைத்த பலன். காரணம் அரசு முன்போலவேதான் செயல்பட்டு வந்தது. மத்திய அரசு அதிகாரிகள்தான் இன்னும் விலைகளையும் சம்பளங்களையும் கட்டுப்பாடு செய்து வந்தனர். ஓர் ஆலையில் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டிய தொழிலாளர் தொகையை முடிவு செய்து வந்ததும் அவர்களே. உற்




(மேலே) உருக்காலை ஒன்றில் உருகிய எஃகு, பாளம் செய்யப் பயன்படும் அச்சுகளில் கொட்டப்படுகிறது.

(கீழே) உற்பத்தித் திறனே அமெரிக்கத் தொழில்களின் குறிக்கோள். எஃகுத் தொழிற்சாலை யொன்றில் எஃகுத் தகடுகளுக்கு ஈயம் பூசும் பகுதியை இரண்டு வல்லுநர்கள் இயக்குவதைப் பார்க்கலாம்.

காற்றாடிக்குத் தடை!

விண்ணிலே காற்றாடி விட்டு மகிழ்வதிலே சிறுவர், பெரியவர்களுக்குப் பேரானந்தம்தான். ஆனால் அமெரிக்காவில் கொலம்பியா ஜில்லாவில் காற்றாடி பறக்க விடுவதற்குத் தடைச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. டெலிபோன், மின் கம்பிகளிலெல்லாம் காற்றாடிகள் அறுந்து தொங்கியதே காரணம். ஒரு பத்திரிகை காற்றாடிப் பந்தயம் நடத்த அனுமதி கேட்டு எழுதியது. வாஷிங்டன் நினைவுச் சின்னத்துக்கும் காப்பிட்டலுக்கும் நடுவிலுள்ள மால் பகுதியில் காற்றாடிகள் பறக்கவிடும் கொண்டாட்டம் நடத்த விரும்பிய ஸ்மித்ஸோனியன் கழகத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதைக் கண்டு பிரடெரிக் ஜோ-வார்ட்ஸ் என்ற வக்கீல் காற்றாடி பறக்கவிடும் உரிமைகள் குறித்து வழக்குத் தொடர்ந்தார். ஆனால் பார்க் போலீஸார் காற்றாடி பறக்கவிடும் பதினைந்து பேர்களைக் குதிரைகளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் துரத்திச் சென்று கைது செய்தார்கள். காற்றாடி பறக்கவிட்டதற்கு அபராதம் 10 டாலர்கள்! இந்த நகரத்திலுள்ள இந்தவித விநோதத் தடையை நீக்க வேண்டும் என்று காங்கிரஸில் உள்நாட்டுக் காரியதரிசி வால்டர் ஹிக்கல் எடுத்துரைத்தார்.



இந்தச் சமயத்தில் ஜில்லா நீதிபதி பழைய சட்டத்தை நுணுகி ஆராய்ந்து, பழைய வாஷிங்டனிலும், ஜார்ஜ் டவுனிலும்தான் காற்றாடி பறக்கவிடக் கூடாது, ஆனால் மற்ற இடங்களில் தாராளமாகக் காற்றாடிகள் பறக்கவிடலாம் என்று தீர்ப்பு வழங்கினார். பட்டம் பறக்கவிட இத்தனை சிக்கலா? நம்மூரில் வீட்டுக்கு வீடு சுதந்திரத்துடன் காற்றாடி பறக்கவிட முடிகிறதே! என்று நாம் பெருமைப்படலாம்!

— குண்டுமணி (ஆதாரம்: டைம்)

பத்தியான பொருள்களின் தரத்திலே அவர்களுக்கு அக்கறையில்லை; அளவில்தான் கண். ஆயினும் சீர்திருத்தவாதிகள் விடாப்பிடியாக இருந்தனர். விட்டுக் கொடுக்க மறுத்து விட்டனர்.

அரசு அதிகாரிகளின் அதிகாரம் குறைய வேண்டும். ஆலை நெறியாளர்களுக்கு அதிகச் செயல் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று இடையறாமல் வலியுறுத்தி வந்தனர்.

இவர்களுடைய விடாமுயற்சி வெற்றி கண்டது. அரசு அதிகாரிகள் வழிக்கு வந்தனர். திறமையற்ற தொழிலாளர்களை நீக்கவும், எஞ்சியுள்ள திறமைசாலிகளுக்குச் சம்பள உயர்வு கொடுக்கவும் ஷெக்கினோ நிறுவன அதிகாரிகளுக்கு அதிகாரம் தந்தனர். ரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்யும் ஷெக்கினோ நிறுவனம் மாஸ்கோவுக்கு 124 மைல் தெற்கே இருக்கிறது. ஷெக்கினோ நிறுவனத்தில் 870 தொழிலாளர்கள் குறைக்கப்பட்டனர். உற்பத்தித் திறன் எண்பத்தேழு சதவீதம் உயர்ந்தது. மொத்த உற்பத்தியும் எண்பது சதவீதம் உயர்ந்தது. பெரும் சாதனைகள் இவை. எனவே, மேலும் இருபது ரஷ்ய நிறுவனங்களில் மேற்சொன்ன முறையைப் பின்பற்றக் கட்டளை பிறந்தது. அது மட்டுமல்ல; ரஷ்யா நெடுகிலுமே ஊக்க ஊதிய முறையை அமுலுக்குக் கொணரவும் ஆலைகளுக்குக் கட்டளை கிடைத்தது. தொழில் துறைகளில் தேவைக்கு அதிகம் ஊழியர்களை நியமனம் செய்வது ரஷ்யாவில் இருந்துவரும் வழக்கம். இதன் விளைவுதான் அதிகச் செலவும் திறமையின்மையும். இந்த நிலை மாற வேண்டும் என்பது பொருள் இயல் வல்லுநர்களின் முடிவு.

ரஷ்ய அரசின் ரசாயனத் தொழில் அமைச்சகத்தில் மட்டுமே 40,000 கட்டுப்பாடு அதிகாரிகள் வேலை பார்க்கின்றனர்; பெரும்பாலும் ஒருவர் செய்த வேலையைத்தான் இன்னொருவர் செய்கிறார். இவர்களில் குறைந்தது கால்பங்குப் பேர்களையாவது நீக்க வேண்டும் என்று ஷெக்கினோ நிறுவனத்தின் நெறியாளர் பி. ஷரோவ் பரிந்துரைத்துள்ளதாகச் சோவியத் கட்சிப் பத்திரிகை ப்ரவ்டா கூறுகிறது. மிதவாதப் பொருள் இயல் பேராசிரியர் அலெக்ஸாண்டர் பிர்மன் கணக்கிட்டுள்ளதென்ன? நிர்வாகத் துறையில் இப்பொழுது வேலை பார்க்கும் இரண்டு லட்சம் பேர்களில் ஒரு லட்சத்து எண்பதினாயிரம் பேர்களை அனுப்பிவிடலாம் என்று கூறுகிறார் அவர்.

பலப்பல பேர்களை வேலையிலிருந்து நீக்கி விடுவது ஒரு பொதுக் கொள்கையாகப் பின்பற்றப்படுமேயானால் வேலை இல்லாப் பிரச்னை தலைதூக்குமே!

இது ஒரு கடுமையான பிரச்னைதான். இது குறித்தும் இப்பொழுது ஆலோசனை செய்யப்பெற்று வருகிறது. ஆனால் பிரச்னைக்குத் தகுந்த தீர்வு இல்லை என்றே தோன்றுகிறது. வேலை தேடிக் கொடுக்கும் நிலையங்கள் உள்ளன. அளவுக்கு மிஞ்சியுள்ள ஊழியர்களை வேலை நீக்கம் செய்யும்பொழுது அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கவோ, புது வேலைக்குத் தேவையான மறு பயிற்சி அளிக்கவோ நிறுவனங்கள் இல்லை. இதனால் சங்கடம் உண்டு என்று தெரிகிறது.


இவையனைத்தையும் ஒப்புக் கொண்டார், கே. ஏ. நோவிக்கோவ். ரஷ்யத் தொழிலாளர் துறை தேசியக் குழுவின் தலைவர் இவர். வேலை இல்லாப் பிரச்னை ஏற்கனவே தலைதூக்கி விட்டது என்றும், வேலையில்லா ஊழியர்கள் துன்பப்படுகின்றனர் என்றும், ஏதாவது ஒரு வகை வேலை இல்லாக் காலத்து இன்ஷூரன்ஸ், மானியம் போன்றவற்றுக்கு ரஷ்யா ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமாகலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவிலும் சரி, நவீன பொருளியல் முறைகள் பின்பற்றப்படும் பிற நாடுகளிலும் சரி, வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு இழப்பு ஈடு தரும் வழக்கங்கள் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. சோவியத் அமைப்பில் இந்த ஏற்பாடுகள் இல்லை.

— அலெக்ஸாண்டர் பி. சகாயக் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

காணக் கிடைக்காத தங்கம்

ஜெகசிற்பியன்



அத்தியாயம் பதின்மூன்று

அன்றும் அப்படித்தான் மாலே ஆறு மணிக்கு வேலையை முடித்துக் கொண்டு சைக்கிள் கடையிலிருந்து கிளம்பிய அருணகிரி வீட்டுக்குப் போகாமல் நேரே கிங்ஸ் பார்க்கில் போய் உட்கார்ந்தான்.

அந்தப் பார்க்கின் நடுவே அமைந்த ஒரு வசந்த மண்டபத்தில் பாண்டு வாத்தியக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. ஏழரை மணி வரை அந்நிகழ்ச்சியை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுத் தன் வீட்டுக்குப் புறப்பட்டான். வீடு வந்து சேர மணி எட்டு ஆகியது.

அடுப்படியில் வேலேயா யிருந்த முத்தம்மா தணிந்த குரலில் யாரையோ வசை பாடிக் கொண்டிருந்தாள்.

மெல்லப் போய் எட்டிப் பார்த்த அருணகிரி, ''என்னக்கா, யார்கிட்ட சண்டை போடறே? அடுப்புக்கிட்டயா? இல்லே, சோற்றுப் பானேக் கிட்டயா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

''பார்த்தியாடா, தம்பி? இப்ப மணி என்ன ஆச்சு? எட்டரையாகப் போகுது: அந்த மனுஷனேக் காணோம்'' என்ருள் முத்தம்மா கோபக் குமுறலுடன்.

அருணகிரி சட்டென்று திரும்பிச் சுற்று முற்றும் பார்த்தான். வேலேயி லிருந்து ரத்தினவேலு இன்னும் வரவில்லே என்பது அப்போதுதான் அவனுக்குப் புலனுகியது.

''இங்கே வந்து ஒரு வாரத்துக்கு எப்படியோ ஒழுங்கா இருந்தாரு. இன்றைக்குப் பழைய குருடி, கதவைத் திறடிங்கிற கதையாப் போயிட்டாரு போலிருக்குது. அதான் இவ்வளவு நேரமாகியும் வரலே!'' என்று குரலே அடக்கிச் சொன்ன முத்தம்மா மீண்டும் ஏக வசனத்தில் தொடர்ந்து. ''அவனுவது, உருப்படறதாவது! குடிகாரனும் கூத்திக் கள்ளனும் கொம்பேறி மூக்கன் பாம்பு போல் ஆச்சே! அது எதை மறந்தாலும் மறக்குமாம், சுடுகாட்டு வழியை மாத்திரம் மறக்கவே மறக்காதாம்! இத்தினி நாளுக்கும் சேர்த்து வைச்சு இன்னேக்கு நல்லாக்

குடிச்சிருப்பான். குடிச்ச நாத்த வாயோடு இந்த வீட்டுக்கு வரப் பயம். அதான் சாராயக் கடையண்டையே பிளாட்பாரத்தில் விழுந்து படுத்துட்டான் போலிருக்குது. நாளைக் காலம்பற எழுந்திருச்சு அப்படியே வேலைக்கு ஓடிப் போயிடுவான். ஒழியட்டும் சனி! குடிச்சுட்டு இங்கே வராமல் இருக்கிறானே, அதுவே போதும்'' என்றாள் ஆத்திரப் பொருமலுடன்.

அருணகிரி மௌனமாகத் திரும்பிச் சன்னல் கட்டைச் சுவர் மேல் உட்கார்ந்து கொண்டான்.

நேரம் நகர்ந்தது. முத்தம்மா சொன்னது போல் மணி ஒன்பதாகியும் ரத்தினவேலு வீட்டுக்கு வரவில்லை. அவளின் ஊகப்படி இன்று அவர் வரமாட்டார் என்றே தோன்றியது.

''நீ வாடா தம்பீ, சாப்பிடுவே !'' என்றாள் முத்தம்மா சலிப்பும் விரக்தியுமான குரலில்.

பிள்ளைகள் ஏற்கனவே சாப்பிட்டு விட்டுக் கூடத்து அறையில் வரிசையாய்ப் படுத்துத் தூங்கிப் போயினர். அருணகிரியும் எழுந்து போய்ச் சீக்கிரமே உண்டுவிட்டுத் தன் படுக்கையுடனும், பாடப் புத்தகங்களுடனும் வராந்தாவுக்கு வந்தான்.

கணவர் வீட்டுக்கு வராதது பற்றி இவ்வளவு நேரம் திட்டிக் கொண்டிருந்த முத்தம்மா, இப்போது கவலையும் திகிலுமாக ஏதேதோ முனகலானாள். வெகுநேரம் சாப்பிடாமல் காத்திருந்து பார்த்து விட்டுத் தன் பிள்ளைகளின் அருகில் படுத்துத் தூங்கியும் போனாள்.

வராந்தாவில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஜமுக்காளத்தை விரித்துப் போட்டு உட்கார்ந்து, தலையணையைச் சுவரில் சாத்திச் சாய்ந்தவாறு தன் எண்ணத்தை எங்கெங்கோ ஓட விட்டுக் கொண்டிருந்த அருணகிரி, திடுமென்று நிமிர்ந்து பாடப் புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

இத்தனை காலமும் இல்லாத சௌகரியமான மின்விளக்கு வெளிச்சத்தில் இன்று படிப்பது அவனுக்கு ஒரு புதுமையான அநுபவமாய் இருந்தது. அத்துடன் வசதியான தனி இடம், அமைதியான சூழ்நிலை — இவையும் சேர்ந்து அவனுள் ஒரு புத்துணர்ச்சியையும் புதுத் தெம்பையும் ஊட்டின. எனவே, பாட நூலில் தன்னை மறந்து லயித்தான் அவன்.

அட்டாரக் கச்சேரியிலிருந்து இரவு மணி பன்னிரண்டு என்று அறிவிக்க அடித்த தண்டவாள ஓசை தொலை தூரத்தில் இலேசாகக் கேட்டது.

''மிஸ்டர் !''

பாடப் புத்தகத்தில் ஆழ்ந்திருந்த அருணகிரி, இனிமையும் மென்மையுமான — ஆனால் அலட்சியமும் மிடுக்கும் செறிந்த—இந்தக் குரல் கேட்டு அதிர்ச்சியுற்றவனாய் நிமிர்ந்தான்.

வராந்தாவுக்கு வெளியே வலைக் கம்பி அடித்த சன்னலோரம், விளக்கு வெளிச்சம் தன் மேல் படாதவாறு சற்று ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள் நிர்மலா !

அவளைப் பார்த்ததும்—அவள் நிர்மலா தான் என்று தீர்மானிப்பதற்குள்—வான மண்டல உச்சி மூலைக்கும், அதல பாதாள ஆழ்மூலைக்கும் ஏறி இறங்கி மீண்டவன் போல் ஆகிவிட்டான் அருணகிரி. அவன் உடல் நிலைகொள்ளாமல் நடுநடுங்கியது ; வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்தது.

''உங்களைத்தான் மிஸ்டர்! இப்படிக் கொஞ்சம் வெளியே வருகிறீர்களா ?''

இக்பிரமை பிடித்த நிலையில் உட்கார்ந்திருந்த அவன் தூக்கத்தில் எழுந்து நடப்பவன் போன்று தன்னுணர்வு இன்றி வெளியே வந்தான். கையிலிருந்த புத்தகம் நழுவிக் கீழே விழுந்ததைக்கூட அவனால் அறிய முடியவில்லை. பீதியால் வெடவெடக்க நிர்மலாவின் எதிரே போய் நின்றான்.

அவனை ஒருகணம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு முகத்தை வெடுக்கென்று வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் நிர்மலா. தன் இடது கையில் வைத்திருந்த ஒரு கடித உறையைச் சன்னல் வழியாக வெளிப்பட்ட விளக்கு வெளிச்சத்தில் மெல்லத் தூக்கிக் காட்டி, ''இங்கே பாருங்க மிஸ்டர் ! அன்னைக்கு ஒரு நாள் சாயந்திரம் இந்தக் கடிதாசுக் கவரை என்கிட்ட கொண்டு வந்து கொடுத்தது நீங்கதானே?'' என்று தணிந்த குரலில் கேட்டாள். எனினும் அந்தக் குரலில்தான் என்ன செருக்கு! எத்தனை நையாண்டி !

அருணகிரி மயக்கம் போட்டு விழும் நிலைக்கே ஆளாகி விட்டான். சற்றுமுன் ஏற்பட்ட பயப்பிராந்தியைக் காட்டிலும் இப்போது பன்மடங்கு அதிக அதிர்ச்சிக்கும் மிரட்சிக்கும் உள்ளாகிப் போனான். அவனால் நிற்கவே முடியவில்லை. வலது கையால் வராந்தாச் சுவரையும், இடது கையால் தன் சட்டைப் பித்தானையும் பிடித்துக் கொண்டு திருதிருவென விழித்தான். நிலைகொள்ளாமல் சுழன்ற அவனது பார்வை எங்கெங்கோ ஓடி மீண்டது. முதலில் பங்களாப் பக்கம் பார்த்தான். எந்த அறையிலும் விளக்கு எரியவில்லை.

பிறகு தன் வீட்டுக்குள்ளே நோக்கினான். கூடத்து அறையில் படுத்துக் கிடந்த முத்தம்மாவும், பிள்ளைகளும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். கார் ஷெட் பக்கம் திரும்பினான். அங்கே இருள் மண்டியிருந்தது.

''என்ன மிஸ்டர்! நான் கேட்டது காதில் விழலையா? இது நீங்க கொண்டு வந்து கொடுத்ததுதானே?'' என்று சற்றே அதட்டலான குரலில் கேட்டாள் நிர்மலா.

'' ஆமாங்க !'' என்று மென்று விழுங்கி இழுத்தான் அருணகிரி.

மேலும் கீழுமாகத் தலையாட்டியபடி அவனை உறுத்துப் பார்த்த நிர்மலா, ''இந்தக் கடிதாசை எதற்காக எழுதினீங்க? யாருக்கு எழுதினீங்க?'' என்றாள் மிடுக்குடன்.

இதைக் கேட்டு ஒரேயடியாகப் பதறி நடுங்கிவிட்ட அருணகிரி, ''ஐயையோ! இதை நான் எழுதலீங்க'' என்றான் குழறலாக.

''என்னது? நீங்க எழுதலியா? .... இந்தாங்க, மிஸ்டர்! இதை நல்லாப் பார்த்து விட்டுச் சொல்லுங்க; இது உங்க கையெழுத்துத்தானே ?''


நிர்மலா வெகு அலட்சியமாகத் தன் கையிலிருந்த கடித உறையை நீட்டினாள். அச்சத் துடிப்புடன் அதை வாங்கிக் கொண்டே, ''இது.... இது.... ஒரு காலேஜ் லெக்சரர் எழுதின கடிதமுங்க!'' என்றான் அருணகிரி.

''காலேஜ் லெக்சரரா? அது யார்?''

''என் சைக்கிள் கடை முதலாளியோட மகன் செல்லத்துரை என்கிறவன் படிக்கிற காலேஜ் லெக்சரர்! அவர் இந்தக் கடிதாசை உங்க அப்பாகிட்ட



பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்

நம்பிக்கையானது. அதனுல் தான் பாங்குகளும் தொழிற் சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப் பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற் கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை, எஃகினுலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்கு கிறது. தயாரிப்பவர்கள் : கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்ப தில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடைய வர்கள்.

4 சைஸ்கள் :
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் எப்போதும் நங்கூரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்

கொடுக்கச் சொல்லி அவன்கிட்ட கொடுத்தாராம். அவன் என்கிட்ட கொடுத்து உங்க வீட்டிலே கொடுக்கச் சொன்னுன்.''

''என்ன மிஸ்டர், என்ன உளறுகி றீங்க! காலேஜ் லெக்சரராவது, என் அப்பாவுக்குக் கடிதம் எழுதி அனுப்பற தாவது! அப்படி எங்களுக்குத் தெரிஞ்ச லெக்சரர் யாரும் இல்லேயே!'' என்று குழப்பத்துடன் தன் விழிகளைச் சுழற்றி அவனை வெறித்துப் பார்த்துக் கூறிய நிர்மலா, ''அது சரி; அந்த லெக்சரர் என்ன சொல்லி இந்த லெட்டரை என் அப்பாவிடம் கொடுக்கச் சொன்னு ராம்?'' என்றுள் அமர்த்தலான குரலில்.

''அண்ணைக்கு உங்க அப்பா மெட்ராசுக்குப் பிளேன்லே போனுர் இல்லேயா?... மெட்ராசிலே உங்க வீட் டுக்குப் பக்கத்திலேதான் அந்த லெக்சர ருடைய வீடும் இருக்குதாம். அதனுல் அவர் ஏதோ அவசர சமாசாரத்தை இந்தக் கடிதத்திலே எழுதி, தம் வீட்டிலே கொடுத்து விடும்படியா உங்க அப்பாகிட்ட சொல்லச் சொல் லிக் கொடுத்தாராம்.....''

கோபமும் குழப்பமுமாக அவனைக் கூர்ந்து நோக்கிய நிர்மலா, ''ஓகோ! நல்லா கதை அளக்கிறீங்களே? ரொம்பச் சாமர்த்தியமா பேசறதா உங்க எண் ணமோ?'' என்று உள்ளடங்கிய சீற லுடன் கேட்டாள். ''என் அப்பா மெட்ராசுக்குப் பிளேன்லே போனு ராம்! அவர்கிட்ட கொடுக்கச் சொல்லி யாரோ லெக்சரர் கடிதம் எழுதித் தன் வகுப்பு மாணவன்கிட்ட கொடுத்தா ராம்! அதை அவன் இவர்கிட்ட கொடுத்து எங்க வீட்டிலே கொடுக்கச் சொன்னுனும்! இவரும் வேலே மெனக் கெட்டு அதை எடுத்து வந்து என் கிட்ட கொடுத்தாராம்!... தமிழ் சினிமாப் படங்கள் ரொம்பப் பார்க்கிற பழக்கம் போல இருக்கு; அதுதான் முன்னே பின்னே யோசிக்காமல் இந்த மாதிரி கதை அளக்கத் தைரியம் வந் திருக்குது!''

''நான் சும்மா சொல்லலீங்க! நிசமாத்தான்...''

''ஷட்—அப்! என் அப்பா அண் ணைக்கு மெட்ராசுக்குப் பிளேன்லே போகவும் இல்லே; இது எந்தக் காலேஜ் லெக்சரரும் தன் சொந்தக்காரருக்கு எழு தின கடிதமும் இல்லே!... யார் யாருக்கு என்ன விஷயமா எழுதின கடிதம்னு நீங்களே அதைப் படிச்சுப் பாரும்!''

தன் கையிலிருந்த கடித உறையை யும் அந்தப் பெண்ணையும் மாறி மாறித் திகிலுடன் பார்த்த அருணகிரி, கடி தத்தை மெல்லப் பிரித்து விளக்கு

பறக்கும் புலி ○ அப்போலோ ○ ரோஜாப்பூ ○ நீலப

பம்பாய்க்காரர் கார்

பம்பாயில் இப்போது பலர் தங்கள் கார்களுக்குச் செல்லப் பெயர் வைக்க ஆரம்பித்து விட் டார்கள். பறக்கும் புலி, அப் போலோ, ரோஜாப்பூ, நீலப்படகு போன்றவை சில. இவற்றைக் காரின் பின்னுல் பொறித்து வைக் கிறார்கள். கண்டவர்: 'ஜெயந்தி'



வெளிச்சத்தில் தாழ்த்திப் பிடித்தபடி தன் வாய்க்குள்ளாகவே படித்தான்.

ஆங்கிலத்தில் ஏழெட்டு வரிகளே எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் படித்ததும் அவன் முகம் பேயறைபட் டது போல் விகாரமாக வெளிறியது. பயத்தால் உடல் கிடுகிடுவென நடுங் கியது. அவளைத் திருதிருவெனப் பார்த் துக்கொண்டே மெல்லப் பின்னுல் நகர்ந்தான்.

காரணம், அது ஒரு காதல் கடிதம்! நிர்மலாவுக்கு எழுதப் பட்டிருந்தது! ஆனுல் அதை எழுதிய நபரின் கைச் சாத்தோ, விலாசமோ எதுவும் இல்லே!—

''என்ன மிஸ்டர்! கடிதத்தைப் படிச்சீங்களா? இப்ப நிஜத்தைச் சொல்லுங்க: இது நீங்க எழுதின கடிதம்தானே?'' என்று, கையும் களவு மாக அகப்பட்டுக் கொண்ட ஓர் அப்பாவித் திருடனைப் பார்ப்பது போல் பார்த்துக் குத்தலான குரலில் கேட் டாள் நிர்மலா.

ஜன்னி ஜுரம் கண்டவன் மாதிரி கிடுகிடுவென்று நடுங்கினுன் அருணகிரி. அவனுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. பேசும் சக்தியை இழந்து விட்ட ஊமை மாதிரி வாயைத் திறந்து திறந்து மூடினுன்.

''சொல்லுங்க, மிஸ்டர்! இது நீங்க எழுதினதான்னு உங்க வாயா லேயே சொல்லக் கேட்டுத் தெரிஞ்சுக் கிட்டுப் போறதுக்காகவே இப்ப இங்கே வந்தேன்; சீக்கிரம் சொல்லுங்க!'' என்று அவனைப் பயமுறுத்துவதுபோல் கண்களை உருட்டி முகத்தைச் சுளித்துக் கோபமாகப் பார்த்தாள் நிர்மலா.

''இல்லேம்மா! சத்தியமா சொல் றேன், இந்தக் கடிதத்தை நான்

எழுதலே!'' என்றான் அருணகிரி, நடுக்கக் குழறலுடன். ''முதல்லே சொன்னதுபோல் இது..இது..அந்த..''

தான் சொல்வதைக் கேட்டு நிர்மலா முன்னைவிட அதிகச் சீற்றமடைவாள் என்று எதிர்பார்த்தான் அருணகிரி. அதனாலேயே வாக்கியத்தை முடிக்காமல் 'அது... அந்த...' என்று இழுத்தான்.

ஆனால் அவளோ திடீரென்று நாணே தளர்ந்த வில்லைப் போல் ஒருவிதத் தொய்வுடன் அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''ஓகோ! அப்ப இது நீங்க எழுதின கடிதம் இல்லையா?'' என்றாள் மெல்லிய குரலில். அந்தக் குரலில் முன் இருந்த அதிகார மிடுக்கோ, அலட்சியமோ, கோபமோ, குத்தலோ, குறும்போ எதுவும் கலவையாகவில்லை. ஒரு விசித்திரமான ஏமாற்றத்தின் சாயலும், தோல்விக் கசப்புமே இலேசாக இழையோடின.

மறுகணமே அவள் விறைப்புடன் நிமிர்ந்து, ''சரி; இப்படிக் கொடுங்க அதை!'' என்றவாறு அவனுடைய கையிலிருந்த கடித உறையை வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டாள். ''முதல் தடவையானதால் மன்னிக்கிறேன்! இனிமேல் இந்த மாதிரிக் கடிதம் வந்தால்...?'' என்று எச்சரிப்பது போல் தலையை ஆட்டிக் கூறிக் கொண்டே அந்தக் கடிதத்தைச் 'சரக், சரக்' கெனக் கிழிந்தெறிந்துவிட்டு அங்கிருந்து ஒரு பத்தடி தூரம் போய்ச் சட்டென்று நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்! சற்றுமுன் வரை அவள் முகத்திலே தாண்டவமாடிய கோபம், வெறுப்பு, அலட்சியம், ஆத்திரம் ஆகிய உணர்ச்சிகள் எல்லாம் மறைந்து ஓர் அழகுப் புன்னகை மலர்ந்து ஒளி வீசியது. அடுத்தகணம் அங்கிருந்து விரைந்து சென்று மறைந்தாள்.

இவ்வளவு நேரம் கொதிநீர்க் கலனில் சறுக்கி விழுந்துவிட்ட சிறு குழந்தைபோல் திக்குமுக்காடித் திணறிப் பதறிக் கொண்டிருந்த அருணகிரி, அவளின் இந்த விசித்திரமான புன்முறுவலைக் கண்டு குளிர்ப் பதனப் பெட்டிக்குள் நெட்டித் தள்ளப்பட்டவன் போன்று அப்படிச் சில்லிட்டு விறைத்து நின்றுவிட்டான். சிறு பொழுது வரையில் அவனுக்குச் சுய உணர்வே மழுங்கிப்போயிற்று. பங்களாவின் மாடி அறை ஒன்றில் 'பட்'டென்ற சிறு ஒலியுடன் மின்விளக்கு ஒளிர்வதைப் பார்த்துச் சடாரென்று வீட்டினுள் போய் வராந்தா விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் விழுந்து படுத்துக் கொண்டான்.

இரவு மணி இரண்டுக்குமேல் ஆகியும், அவனுக்குத் தூக்கமே வரவில்லை. ஆனால் தூங்குவது போன்று கண்களை இறுக மூடிக் கொண்டு ஆடாமல் அசையாமல் ஒரே பக்கமாக ஒருக்கணித்துப் படுத்துக் கிடந்தான். தனக்குப் பின்னால் பலபேர் தன்னையே கோபாவேசமாக வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதுபோலவும், தான் சற்றே திரும்பி அசைந்தாலும் தன்னை அவர்கள் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டுபோய் விடத் தயாராய் இருப்பதுபோலவுமான ஒரு விசித்திரப் பயப்பிராந்தியாலேயே அவன் இப்படித் தூங்குவது போன்ற பாவனை புரிந்து தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருந்தான்.

எனினும் இத்தகைய விழிப்பு நிலையில் எவ்வளவு நேரம்தான் ஒருபக்கமாகப் படுத்துக் கிடக்க முடியும்? விலாத் தசையில் எலும்புகள் உறுத்தி வலி எடுக்க, கண்களும் அழற்சியுற்று நோவு காணவே அவன் திடுமெனப் புரண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

அவனுடைய பார்வை வாசற்படிக் கட்டை நோக்கிச் சென்றது. இருள் பூசிக் கிடந்த அப்படிக்கட்டின் மேல் வெள்ளிக் காசுகள் இறைக்கப்பட்டாற் போல் அந்தப் பெண் நிர்மலா கிழித்தெறிந்து போட்ட காகிதத் துண்டுகள் சிதறிக் கிடப்பது தெரிந்தன. அவன் மெல்ல எழுந்து போய் அந்தத் துணுக்குகளையெல்லாம் பொறுக்கி எடுத்து மதில் சுவருக்கு அப்பால் போட்டுவிட்டுப் பூனை போல் ஓசைப்படாமல் வந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டான்.

இதுகாறும் அவனைப் பேயாய்ப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்த பய உணர்ச்சி இப்போது சற்றே நீங்கிப் போக, குழம்பிக் கலங்கியிருந்த சிந்தனை ஆற்றலும் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடி வரலாயிற்று.

'எவ்வளவு மோசமான சங்கடத்தில் என்னைச் சிக்க வைத்துவிட்டான் அந்தப் பாவிப் பயல் செல்லத்துரை! இப்படி நடக்கும் என்றோ, இப்படியும் நடக்கலாம் என்றோ நான் கனவுகூடக் காணவில்லையே!'


முட்டிக் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அருணகிரி திகிலுடன் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தான்.

''அது சரி; அவள் என்னிடம் கொண்டு வந்து காட்டிய அந்தக் காதல் கடிதம் உண்மையில் நான் அன்று அவளிடம் கொடுத்ததுதானா?''

முட்டியில் மோவாய் இடிபட வேகமாய்த் தலையாட்டிக் கொண்டான்


CAMY
GENEVA
கேமி கடிகாரம்
நாளுக்கு 24 மணி
நேரமும், வருடம் 365
நாட்களும் கவர்ச்சி-
யையும், துல்லியமான
இயக்கத்தையும் வழங்குகிறது.
பல மாடல்களிலிருந்து தேர்ந்தெடுங்கள் –
எல்லாம் நியாயமான விலை கொண்டவை.
RATAN BATRA/CW/TAM/04

புதிய மர்பி முஸாபிர் 400



ரூ. 293*


எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது.
விற்பனை வரி தனி

மர்பி முஸாபிர் உன்னதத்தை என்ன சொல்வது 4பாண்டுகளில் இப்போது வருகிறது முஸாபிர் 400!

நுட்பமான உணர்ச்சியுள்ள புதிய மர்பி முஸாபிர் வலுவான மற்றும் பலவீனமான நிலையங்களை அதிகத் தெளிவோடும், சீரான ஒலிபரப்புடனும் எளிதில் இணைக்கிறது.

சிற்றலை நிலையங்களை விருப்பப்படி இணைக்க விரிவான அலைபரப்பு மற்றும் சுழல் வசதி. முந்திய இரு பாண்டுகளுக்குப் பதிலாக இப்போதுள்ள மூன்று சிற்றலை பாண்டுகள் வசதியான இயக்கத்திற்கு ஏற்றது.

மோர்ஸ் கோட் தடையை அகற்றி, தொல்லையற்ற செவியின்பத்தை உங்களுக்கு அளிக்கிறது புதிய மர்பி முஸாபிர் 400. ப்ளோரஸண்ட் டியூபுகள், டி.வி. எலக்ட்ரிக் மோட்டார் முதலிய வெளிப்புறத் தடைகளை வெகுவாகக் குறைக்கிறது. சிற்றலை ஒலிபரப்பிற்காக புதிய மர்பி முஸாபிரில் அமைக்கப்பட்டுள்ள மாக்னெடிக் லூப் ஏரியலே இதற்குக் காரணம்.



எளிதில் கிடைக்கும், நீடித்துழைக்கும் டிரைபாட்டரிகளில் புதிய மர்பி முஸாபிர் 400 இயங்குகிறது.



மர்பி இல்லத்தை மகிழ்விக்கிறது!

NAS 4?/

அவன். 'அதில் சந்தேகமில்லை. செல்லத்துரை என்னிடம் கொடுத்து அனுப்பிய அதே கடிதம்தான் அது. அப்படியானால் அக் கடிதத்தை எழுதியது யார்? செல்லத்துரையா? அல்லது அவனுடைய காலேஜ் லெக்சரரா?... சே, ஒரு கல்லூரி விரிவுரையாளர் அம்மாதிரியான காதல் கடிதம் எழுதுவாரா? — அதுவும் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் ஒரு மாணவிக்கு? அதையும் தம் வகுப்பு மாணவனிடமே கொடுத்து அவளின் வீட்டில் கொடுக்கச் சொல்வாரா? நிச்சயமாக இருக்காது! இது அந்தச் செல்லத்துரையின் விஷம வேலையே தான்!'


அன்றொரு நாள் மாலை செல்லத்துரை தன்னை வழியில் மடக்கி நிறுத்திக் கொண்டு வெகு நேசபாவத்துடன் பேசியது, ஹோட்டலுக்கு அழைத்துப் போய் ரொம்பத் தாராளமாகச் செலவு செய்து சுவையான பட்சணங்கள் வாங்கிக் கொடுத்தது, பிறகு அடுத்த நாள் முற்றிலும் வேறு மனிதனாக நடந்து கொண்டது — ஆகியவற்றையெல்லாம் ஒவ்வொன்றாய் எண்ணிப் பார்த்த அருணகிரிக்கு இந்த ஊகமே சரியெனப் பட்டது.

'அந்தப் பயலுக்குத்தான் என்ன தைரியம்!.... இந்தப் பெண்ணின் அந்தஸ்து என்ன, குடும்ப கௌரவம் என்ன? அவனுடைய நிலை என்ன? இவளுக்குப் போய் அவன் காதல் கடிதம் எழுதியிருக்கிறானே! இது பலிக்குமா, பலிக்காதா என்று சிந்தித்தே பார்த்திருக்கமாட்டானோ?... எதற்காகச் சிந்திக்க வேண்டும்? போகிற போக்கில் கல்லை விட்டெறிவது; பழம் விழுந்தால் விழட்டும், இல்லையானால் திரும்பிப் பார்க்காமல் நடந்து விடுவது! இவ்வளவுதானே? அதுசரி; இவளை அவன் எங்கே, எப்போது பார்த்திருப்பான்? இவளுக்குக் காதல் கடிதம் எழுத வேண்டும் என்ற துணிவை எதனால், எப்படிப் பெற்றிருப்பான்?... ஓ!... இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி?... இவளும் பள்ளிக்குப் போகிறாள்; அவனும் கல்லூரிக்குச் செல்கிறான். தினமும் எங்காவது ஓரிடத்தில் எதிர்ப்பட்டு இவளை அவன் கடந்து செல்ல வேண்டியிருந்திருக்கும். இரண்டு பேருமே சைக்கிளில் போகிறவர்கள் இல்லையா? இவன் ஏதாவது குறும்புத்தனம் பண்ணியிருப்பான்; அவள் இவனைத் திரும்பிப் பார்த்திருப்பாள். விளையாட்டுத்தனமாகச் சிரித்தும் இருப்பாள்! அதுதான் அவளுடைய சுபாவமாயிருக்கிறதே? உடனே அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்று அவன் தீர்மானித்து, அவளுடைய பெயர், அவளின் தந்தை பெயர், இருப்பிடம் முதலான விவரங்களைத் துப்பறிந்து தெரிந்து கொண்டு சமயம் பார்த்துக் காதல் கடிதம் எழுதிவிட்டிருக்கிறான்! கல்லூரியில் கால் வைத்ததுமே செய்யும் முதல் காரியம் இதுதானே?'

அருணகிரி அநுதாபத்துடன் பெருமூச்சு விட்டான்: 'பாவம், இவன்மேல் இவனுடைய அப்பன் ஏழுமலை எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறான்! என்னென்ன மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறான்! இவன் இன்னும் பி.யு.சி.கூட முடிக்கவில்லை; இதற்குள் ஐ. ஏ. எஸ். படித்துக் கலெக்டராகிவிட்டதுபோல் கற்பனை பண்ணிக் கொண்டு இவனிடம் அவன் எவ்வளவு மரியாதையாக நடந்து கொள்கிறான்! இவனுக்காக எவ்வளவு பணம் செலவழிக்கிறான்!... ஆனால் இவனோ?... அட, பரிதாபமே!' (தொடரும்)

நீலத்தாமரை

ஆர். சூடாமணி



மாலை நேரமாகியும் வெயில் தணியவில்லை. அவர் மேல் துண்டால் முகத்து வியர்வையை ஒற்றியவாறு வீதியில் நடந்து கொண்டிருந்தார். அருகில் அவர் மனைவி.

வீதியை அடுத்திருந்த சுவர்களில்தான் எத்தனை வகை சுவரொட்டிகள்! சினிமா போஸ்டர்கள், அரசியல் விளம்பரங்கள்.

அடையாற்றிலிருந்து கிளம்பிப் பாலத்தைத் தாண்டிக் கொண்டு இருவரும் நடந்தனர். எதிரும் புதிருமாகச் செல்லும் வாகனங்களுக்காக இரண்டாகத் தடுக்கப்பட்ட பாலத்தின் விளிம்பில் இருந்த பாதசாரிப் பாதையில் நடந்தபோது ஆறும் தொலைவில் அடையாறு மாளிகையும் அழகாகத் தெரிந்தன.

கவலை சூழ்ந்த நெஞ்சில் காவிய மணமும் கனக்க, சர்மா நடந்தார். காவியம், கவிதை, அறிவு.... வடமொழி இலக்கியத்தையே முக்கியமாக அறிவு இலக்கியம் என்று கருதுபவர் உண்டல்லவா? அறிவும் அழகுமான ஒன்றை வேண்டாம் என்று தள்ளுவதுதான் என்ன விந்தை! அறிவை ஒதுக்குவதுதான் பகுத்தறிவா?

"சம்ஸ்கிருதம் எத்தனை அழகுன்னு யாருமே ஒரு நிமிஷம்கூட நின்னு யோசிக்கலே, பாரு!" என்று திடீரென்று கூறினார் சர்மா. கற்பகம் பதில் சொல்லவில்லை.

"பாஷையில் என்னடி துவேஷம்?" என்றார் அவர் மீண்டும். கற்பகம் இப்போதும் அக்கறை காட்டவில்லை. இது அவளுக்கு அலுத்துப்போன விஷயம். எத்தனையோ நாட்களாய்ச் சர்மா பேசிப் பேசி அந்த விஷயம் உருத் தேய்ந்து போயாகி விட்டது. அவருடைய துடிதுடிப்பும், "சம்ஸ்கிருதத்தை எடுத்துடறதாவது!" என்ற ஆரம்பச் சீற்றமும், அது தாய்ப்பாசம் போல் சம்ஸ்கிருதத்தைக் குழந்தையாய் அணைத்துக் கொண்டு கதறிய வேகமும் இப்போது அவளுக்குப் பழைமையான தொலைப் பொருள்களாகி விட்டன. "தீர்ந்துபோன விஷயத்தைச் சொல்லிச் சொல்லி அழறதில் என்ன பிரயோஜனம்?" என்ற அவள் சமாதானங்களுக்கெல்லாம் அவர் மூடிய கதவாகிவிட்ட பிறகு அவளும் மேலே எதுவும் சொல்ல முடியவில்லை. அந்த இழப்பும் வேதனையும் தனக்கு முழுவதுமாகப் புரிய முடியாது என்பதையும் அவள் உணர்வாள். அந்த மொழி அவளைப் பொறுத்த மட்டில் அவள் கணவரின் வருவாய்க்கான ஒரு தொழில் மாத்திரமே. அவருக்கு அது அழகாய், அன்பாய், அறிவாய், உயிராய், நிலவிய பான்மைக்கு இப்போது அவள் என்ன சொல்ல முடியும்? வேலை இழந்த சம்ஸ்கிருத ஆசிரியர்களுக்கு நூலகராகவோ பிற பணிகளிலோ வயிற்றுப் பிழைப்புக்கு வழி செய்து கொடுக்கத் தயாராயிருந்த அரசாங்கத்தின் உதவியை ஏற்க அவருக்கு மனமில்லாததை அவள் வாய் திறவாமல் பார்த்துக் கொண்டிருந்த பொறுமையே அவள் அவரிடம் காட்டிய விசுவாசம்தான்.

"சம்ஸ்கிருதம் அவனுது இவனுது அப்படின்னு ஏதும் இல்லே, தெரியுமோல்லியோ கற்பகம்? அது இந்த நாட்டின் சொத்து. இந்த நாட்டின் பெருமை. அது இந்தியக் கலாசாரம். அது இந்தியத்துவம். என்னைக் கேட்டால், ஓரளவாவது சம்ஸ்கிருத ஞானம் இருக்கிறதுதான் ஓர் இந்தியனுடைய முத்திரைன்னு சொல்வேன்...."

"கால் வலிக்கிறது" என்றாள் கற்பகம்.

"வெளிநாட்டு சர்வகலாசாலைகளிலெல்லாம் சம்ஸ்கிருதம் கற்றுக் கொடுக்கிறாடீ! நாம் அதை வேணும்னு தள்ளிடறதா?"

"எவ்வளவு நேரமாய் நடக்கிறது? சித்த எங்கேயாவது உட்காருவோமா?"

"சம்ஸ்கிருதம் படிக்கிறதனால் தமிழில் இருக்கிற ஆசையும் மதிப்பும் போயிடுத்துன்னு எப்படி அர்த்தமாகும்?"

'' நடக்கவே முடியலே. பஸ்ஸிலே போயிடுவோம். வாங்களேன்.''

ராஜகோபால சர்மா நின்று திரும்பி மனைவியைப் பார்த்தார். எவ்வளவு களைத்திருந்தாள் அவள்! கேசம் கலைந்து மூச்சு இலேசாக இரைத்துக் கொண்டிருந்தது. வட்டமாய் வைத்திருந்த குங்குமப் பொட்டு வேர்வையினால் நெற்றியில் கால்வாய் வெட்டி ஓடியிருந்தது. அவருக்கு இரக்கம் எழுந்தது. பாவம், கற்பகம். அவரை மணந்து கொண்ட பாவத்துக்காக அவளுமல்லவோ சிறிது காலமாகப் பற்றாக்குறையோடு போராட நேர்ந்திருக்கிறது! ''லைப்ரேரியன் வேலையயா நான் போய் ஒத்துக்கறது?'' என்ற விம்பில் வறுமையிடையேகூட அவருக்கு வேண்டுமானால் ஏதோ ஆத்ம திருப்தி இருக்கலாம். வால்மீகியும் காளிதாஸனும் பாஸனும் பர்த்ருஹரியும் அவர் கனவில் வந்து இனிமை கூட்டலாம். அவளுக்கு?

''பஸ்ஸில் போகலாம்னு சொல்லறே கற்பகம்?''

அவருக்குத் தயக்கம்தான். சென்ற முறையின் அநுபவம் அச்சுறுத்தியது. அவருடைய பஞ்சகச்சம், குடுமி, நெற்றியின் நீறு, அவளுடைய பதினெட்டு முழச் சேலைக் கட்டு — ஓடி வந்து அருகில் நெருங்கி உள்ளே ஏறக் கால் வைக்கும் விநாடிக்குச் சரியாக வேண்டுமென்றே வண்டி விஸில் ஒலியோடு குலுங்கிக் கொண்டு கிளம்பிய நிகழ்ச்சி! அவர்களது வயதான தோற்றம் கண்டுகூடவா கனிவு இல்லை? பத்தடி சென்று தள்ளி நின்ற வண்டி— ''ஸாரி ஸார்! நீங்க ஏற இருந்ததைக் கவனிக்கலே. வாங்க. ஏறுங்கோஓ மாமிசா!'' என்ற குறும்பான நீட்டி முழக்கல் — அதற்குப் பாராட்டாகப் பயணிகளிடையிருந்து இரண்டு கிளுகிளுப்புகள்....

இருவரும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தார்கள். எவ்வித அசந்தர்ப்பமான பேச்சோ செயலோ நிகழவில்லை. வண்டியிலிருந்த யாவரும் இயல்பாகவே இருந்தனர்.

வண்டிக்குள் எழுதப்பட்டிருந்த குறட்பாவைச் சர்மா யோசனையோடு வெறித்தார். 'வள்ளுவர், வால்மீகி இருவருமே என் பிதுரார்ஜிதச் சொத்து! இதில் இனித்தல், விலக்கல் இரண்டுமே அநாவசியம்' என்று கத்த வேண்டும் போலிருந்தது. அவரும் தமிழர்தான். தமிழ்ப் பற்று உடையவர்தான். ஆனால் வடமொழியை விலக்கினால் தான் தமிழார்வம் இருப்பதாக அர்த்தமா? அரசாங்கக் கல்வி நிறுவனங்களில் வடமொழி போதித்தால் அதனால் தமிழ் மாய்ந்தா போய் விடும்?

அவர் தம் ஆட்சேபக் குரலை எழுப்பத்தான் செய்வார். சம்ஸ்கிருதத்தில் உள்ள ஈடுபாடு, காதல், உயிர்க் கலப்பு — அதை அவர் வேறு எதிலும் வழிப்படுத்த மாட்டார்.

இப்போது போவதும் அதற்குத்தானே! மயிலாப்பூரில் ஒரு நண்பர் வீட்டில் அம்மொழியில் பற்று உள்ள சில தேர்ந்தெடுத்த அன்பர்களின் முன் அவர் வால்மீகி ராமாயணத்திலிருந்து சில பாடல்களைக் கூறப் போகிறார், எல்லோருமாய்ச் சேர்ந்து சுவைக்கும் விருந்தாக. வாயும் மனமும் இனிக்க வடமொழி சொல்லப் போகிறார். அந்த இனிமைக்கு வேறு காரணமோ விளக்கமோ பெயரோ தேவையில்லை. வால்மீகக் குயிலைப் போலவே அவரும் ராமன் என்ற மதுரமான எழுத்துக்களை இன்புறக் கூவப் போகிறார், அவ்வளவுதான்.

கற்பகத்தின் முகம் சாம்பியிருந்தது. சில நாட்களாகவே வீட்டில் வயிறாரச் சோறு கிடையாது. அவர் செய்வது தவறல்லவா? அவரை அண்டி இன்னொரு ஜீவன் இருக்கும் போது மாற்று வேலையை ஏற்க விரும்பாமல் இருப்பது தவறின்றி வேறென்ன?

அந்த எண்ணத்திலிருந்து சிந்தனையை விலக்க அவர் தம்முள் ஒரு வடமொழிச் சுலோகத்தைச் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார். மணி மண்டபத்தில் ராஜாராமன் வீற்றிருக்கிறான். உடன்பிறந்த சகோதரர்கள் உடன் பிறவாச் சகோதரர்கள், சீதை, அநுமன், அங்கதன், ஜாம்பவான் ஆகியோர் புடைசூழ மத்தியில் ஒரு நீலத் தாமரையை நிகர்த்த பொலிவுடன் கரிய செம்மல் கொலுவிருக்கிறான்.... ஆதிசங்கரரின் மனம்தான் எத்தனை அழகியது! நீலத் தாமரை. அம்மொழியின் காவிய அழகையெல்லாம் எடுத்துக்காட்ட ஏற்றதொரு சாராம்சமாக அந்தத் தொடர் அவருக்குத் தோன்றியது. காவிய அழகுதான். வடமொழி என்றும் அவர் நெஞ்சில் அதுதான் அர்த்தம். அந்த மொழி வெறும் மந்திரமல்ல. ஜபமல்ல. தெய்வ கதை சொல்லும் புராணமல்ல. கடவுளை வர்ணிக்கும் வெறும் பக்தியல்ல. அந்த வர்ணனைகளிலும் அவர் கண்டது காவிய எழில்தான், கவி நயம்தான்.

சிறிது நேரம் அதிலேயே உருகிப் போய் உட்கார்ந்திருந்தார்.

மழைக்கு அறிகுறியாக வானில் கருமுகில்கள் சூழலாயின.

குளக்கரை நிறுத்தத்தில் இறங்கியாயிற்று. அவர் இதயத்தில் கவிதை அழகாக வடமொழி வீற்றிருந்த பூரிப்பு அப்போதும் கலையவில்லை. நாடி வந்த வீட்டில் நுழைகையில் வாசலுக்கு வந்து வரவேற்ற நண்பர், ''இன்னிக்கு நீல...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்கையில் அவர் இன்னும் அந்தப் பூரிப்பிலேயே ஆழ்ந்தவராக, ''ஆமாம், நீலகண்டம், நீலத் தாமரை, அப்படின்னெல்லாம் அழகே நீலமாய் வந்து நிற்கிறது. இல்லையா?'' என்றார்.

''என்ன சொல்லறேள்?''

சர்மாவுக்குச் சட்டென்று வெட்கத்தில் முகம் சிவந்து விட்டது.

''மனசில் ஏதோ நினைப்பாக்கும், பேச்சும் அப்படியே வரது!'' என்று நண்பர் புன்னகை செய்தார்.

''ஆமாம். நானும்கோபிகையாய்ட்டேன்''

''அதாவது?''

''இப்படி அழகாலே மனசை அள்ளறுரே இந்த லீலா சுகர், அவரை என்ன செஞ்சா என்ன? கோபிகை தயிர் முதலான பண்டங்கள் எல்லாம் சுமந்துண்டு போறுவிற்கிறதுக்கு. அப்போ 'தயிரோ தயிர்' என்கிற மாதிரிதானே ஏதாவது கூவணும்? ஆனு மனசை ஒட்டி வாய் என்ன கூவறதாம்

சந்தன ராணி

சோப்புகளுக்கெல்லாம்
ராணி

கேரளா ஸாண்டல்

அது உங்களை புதிய
நறுமணமுள்ள
வசீகரமான உலகுக்கு
அழைக்கிறது

கேரளா
சந்தன சோப்

ஒரு நறுமணமுள்ள
தயாரிப்பு



SISTA'S KSO 227 TA

கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,
சோப் டிவிஷன், கோழிக்கோடு-11
(கேரள அரசின் ஒரு நிறுவனம்)

தெரியுமோ ? 'கோவிந்தா, தாமோதரா, மாதவா' என்கிறதாம் !''

''ஆமாம். அதனும் பிழைப்பும் கோவிந்தா ஆகியிருக்கும்'' என்றுள் கற்பகம் அதற்கு மேலும் தாங்க முடியாமல்.

சர்மா அடக்கமுற்றுர். ''நீங்க சொல்ல வந்தது என்ன ?'' என்றுர் நண்பரிடம்.

''ஒண்ணுமில்லே. நம்ம நீலகண்டராவ் இருக்காரில்லேயா, 'ராதா டிரான்ஸ்போர்ட்' முதலாளி? அவர் பெண்ணுக்குச் சம்ஸ்கிருத சுலோகங்கன்னு ரொம்ப சடுபாடாம். அவள் ஆசையின் பேரிலே அவளை அழைச்சுண்டு அவரும் வரார் இன்னிக்கு.''

பொறுக்கி எடுத்த நண்பர்களாக ஏழெட்டுப் பேர்தான் ஹாலில் கூடினர்கள். வீட்டுக்கார அம்மாள் எல்லாருக்கும் சர்க்கரையிட்ட மாம்பழத் துண்டங்களும் நீர் மோரும் கொடுத்தாள். கற்பகத்துக்குச் சிறிது களைப்புத் தெளிந்தது.

நீலகண்ட ராவ் தம் மகளைச் சர்மா தம்பதிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''ராதாவுக்குச் சம்ஸ்கிருதம்னு உயிர். வீட்டில் அவளுக்கு வாத்தியார்கூட வைச்சிருக்கேன். ஆர்வமாய்ப் படிக்கிறுள்'' என்றுர் சர்மாவிடம்.

''ரொம்ப சந்தோஷம். இப்ப என்னம்மா படிச்சுண்டிருக்கே நீ? மாகமா? மேகமா? இல்லே வேறெதாவதா?''

ராதா புரியாமல் விழித்தாள்.

''ஓய் சர்மா, உங்க பரிபாஷையெல்லாம் அந்தக் குழந்தைக்குப் புரியுமா? ராதா, நீ மாகனுடையபடைப்பு ஏதானும் படிக்கிறயா? அல்லது மேகஸந்தேசம் படிக்கிறயா, இல்லே வேறேதாவதா அப்படின்னு அவர் கேக்கறுர்'' என்று ஒருவர் விளக்கினுர்.

''இன்னும் அவ்வளவு தூரமெல்லாம் வரலே மாமா. கொஞ்ச நாட்களாய்த்தான் கத்துக்கறேன்'' என்றுள் ராதா.

''அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்து. போகிற இடத்திலும் இந்த ஆசையெல்லாம் மதிச்சு வளர்க்கிறவர்களாய் இருக்கணும்'' என்று பாசமும் கவலையும் இழையக் கூறினுர் ராதாவின் தந்தை. ராதா நாணம் செறிந்த முகப்பாவத்துடன் தலை கவிழ்ந்து நின்றிருந்தாள்.

அதைக் கண்ட சர்மாவுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. ''கல்யாணம் என்றதும் பெண்ணுக்கு வெட்கத்தைப் பாருங்கோ ! இந்தப் பார்வதியும் அப்படித்தான்...''

''எந்தப் பார்வதி ?''

''அட, எத்தனை பார்வதி இருக்காளாம்? ஸப்த ரிஷிகள் வந்து அவள் தகப்பனுர் இமவான்கிட்ட அவளை ஈச்வரனுக்குப் பெண் கேட்கிரு. அவள் தன் அப்பாவின் பக்கமாய் நின்னுண்டு வெட்கத்தோடு தலை குனிஞ்சு கையில் இருந்த ஒரு தாமரையின் இதழ்களை எண்ணிண்டிருக்களாம். எப்படி அந்தச் சித்திரம்! உவமைக்கு ஒரு காளிதாசன்னுதான் சொல்லுவா. இந்த இடத்தில் அவனுடைய நயத்தின் இன்னேர் அம்சம்னு தெரியறது!'' என்று பேசிக்கொண்டே போனுர் சர்மா.

''அது என்ன நயமோ ! தயிர் சாதம் !'' என்று கற்பகம் மெல்லிய குரலில் நொடித்தது எல்லாருடைய காதிலும் விழுந்தது.

மற்றவர்களுக்குச் சங்கடமாகி விட்டது. ஆனல் ராஜகோபால சர்மாவின் உற்சாகம் அப்போதும் குன்ற வில்லை ! ''அப்படிச் சொல்லு!'' என்று உரக்கக் கூவியவாறே முகமும் குரலும் ஒளி சிந்த ஆள்காட்டி விரலால் காற்றைக் குத்தினுர். ''தயிர்சாதம் தான். எருமைத் தயிர் சாதம் போடுன்னு தான் பாட்டிலே அர்த்தம். ஆனு அந்தத் தயிரின் வெள்ளையை எப்படி வர்ணிக்கிறுன் ? சரத்கால சந்திரிகை அப்படின்னு உவமை காட்டறுன். போறுனுக்கு உடனே புரிஞ்சு போச்சே, அது யாருடைய கைவண்ணம்னு! காளிதாசனு கொக்கா !''


இந்தப் பரவசப் பிதற்றல்களில் நேரம் கடத்துவதை நிறுத்திவிட்டு அவர் எப்போது விஷயத்துக்கு வரப் போகிறுர் என்று வீட்டுக்கார நண்பருக்கே ஒரு விநாடி பொறுமை நலிந்தது.

''வால்மீகியை ஆரம்பிப்போமே !'' என்று யாரோ சொன்னதும், ''இதோ, இப்பவே'' என்று சர்மா உடனே தயாராகி விட்டார்.

மற்றவர்கள் சூழ நடுவில் உட்கார்ந்த அவர் ஒரு நிமிஷம் மௌனமாகக் கீழ்நோக்கிய பார்வையுள் ஆழ்ந்திருந்தார். வால்மீகி முனிவரைப் பார்த்து, 'இப்படி வந்து என் நாவில் சௌகரியமாய் அமரலாமே!' என்று கைலாகு கொடுத்து அழைத்து வருவதுபோல் ஒரு நிலை.

நாலைந்து பேர் புத்தகம் எடுத்து வந்திருந்தார்கள். சர்மாவுக்குப் புத்தகம் பார்க்கத்

அமெரிக்கத் தவளை



தென் அமெரிக்காவில் வாழும் ஒருவகைத் தவளை தனது குஞ்சுகளைத் தன் முதுகிலே உள்ள பைகளுக்குள் வைத்திருக்கிறது. குஞ்சு பொரிப்பதற்கு முன்பாகவே முட்டைகள் தாய்த் தவளையின் முதுகிலே உள்ள பைகளில் தான் இருக்கும். சவ்வு போன்ற தோல் இப்பைகளை மூடிவிடும். பின்னர் குஞ்சு பொரித்தும்கூடச் சிலகாலம் வரைக்கும் குஞ்சுகள் இப் பைகளுக்குள்ளேதான் இருக்கின்றன. குஞ்சுகளுக்கு இதுதான் பாது காப்பான இடமாகும்.

விந்தையான முறையில் குஞ்சுகளைப் பேணும் இத்தவளையின் உருவமும் விந்தையான முறையில் அமைந்ததே. முக்கோண வடிவமைந்த தலைப்பாகமும், சிறிய கண்களும் கொண்டிருக்கும். இதற்கு நாக்கும் கிடையாது. கால் விரல்கள் எல்லாம் நட்சத்திர வடிவில் அமைந்திருக்கும். இத்தவளையின் பெயர் ''பைப்பா அமெரிக்கானு''

- எஸ். சாரதாம்பாள்

தேவை இருக்கவில்லை. அவர் நெஞ்சம் மூச்சுமே வடமொழி இலக்கியமாக இருந்தது. அவர் ராமாயணத்தைத் தொடங்கினார். ராமகுணப் பெருங்கடலில் மூழ்கி முக்குளிக்கலானார். தம் லயிப்பில் அனைவரையும் இழுத்துக் கொண்டார். ஏதோ ஓர் அற்புதமான சென்ற யுகத்தின் லட்சியப் பொற் கனவுக்குள் யாவரையும் அழைத்துச் சென்று முழுமையான ஓர் ஆனந்தமரணத்தினுள் ஆழ்த்தினார்.

''..... சமுத்திரம் போல் கம்பீரமானவன், இமயம்போல் உறுதியானவன்.... கோபத்தில் காலாக்கினியை ஒப்பான், பொறுமையில் பூமியை நிகர்ப்பான்....''

கூடியாரமுள் 'ராம ராம' என்று அடித்துக் கொண்டே சென்றது. சொன்ன வாய்க்கும் கேட்ட செவிகளுக்கும் பேதமழிந்து சிரு பாலமாய் விரிந்து கொண்டே போயிற்று, அந்தக் கதையின் மலர்ச்சி.

சர்மாவின் மனம் உருகிக் கனிந்தது. அழகைச் சுவைத்த இன்பத் திளைப்பில் பரவசம் கொண்டிருந்த நிலை எளிதில் கலையவில்லை. ஒருவாறு காவிய அலைகள் கரை சேர்ந்து குரல் நின்ற போதுகூட அந்தப் பரவசம் உடனடியாய் மறையவில்லை. இசையின் ரீங்காரம் போன்று தயங்கி நிற்கும் இனிமை வடிந்து உணர்வு மீண்டு அவர் கடைசியில் கண்களில் பார்வையோடு எதிரே நோக்கினார்.

என்ன இது? இவ்வளவு கூட்டம் எப்படி வந்தது? ஏழெட்டுப் பேருக்கு மேல் அறையில் இல்லையே முதலில்? ஹால் நிறைந்து, வெளித் தாழ்வாரம் நிறைந்து....

ஒரு கணம் உவகை பொங்கி உள்ளம் குதித்து எழுந்தது. வடமொழியில் மக்களுக்கு இத்தனை ஆர்வமா! ஐயா வால்மீகி, என்ன மாயக்காரனய்யா நீங்கள்! இந்த மொழியை யாரால் சிதைக்க முடியும்!

கூட்டத்தில் சலசலப்புக்கிடையே மக்கள் எழுந்து நிற்கலானார்கள்.

''அருமையான உபன்யாசம்.''

''இங்கே உபன்யாசம் நடக்கிறதாக வெளியில் போர்டு ஏதும் இல்லையே? ஒரு பந்தல் கூடப் போடலையே?''

''பேப்பரில் 'டுடேஸ் எங்கேஜ்மெண்ட்ஸ்' பட்டியலில்கூட ஒண்ணும் குறிப்பிடலையே?''

''புண்ணிய பலன். சத் விஷயம் காதில் விழுந்தது.''

''தெய்வ கதையைக் கேட்கிறதுன்னு சும்மாவா? கொடுத்து வச்சிருக்கணுமே!''

''வீட்டுக்காரர் வியப்பும் மகிழ்ச்சியும் தாங்காமல் கூறினார்: ''இப்படிப் பல பேர் வந்து கதை கேட்டதுக்கு நாங்க பெருமைன்னு படணும்? சம்ஸ்கிருத சுலோகம் காதில் விழற புண்ணியம் உங்களுக்குக் கிடைச்சதுன்னு.... அதைக் கிடைக்கப் பண்ணின எங்களுக்கும் புண்ணியத்தில் பங்கு உண்டில்லையா!''

''ராமநாமம் காதில் பட்டது. இன்னிக்குப் பண்ணின பாவமெல்லாம் தொலைஞ்சுது. ஏதோ என்னுலானது....'' என்று கூறிக் கொண்டே முன்னால் வந்த ஒரு கரத்தைத் தொடர்ந்து பல கரங்கள் காணிக்கையுடன் நீண்டன. ''தட்டெடுப்பீர்கள்னு நினைச்சேன். மறந்துட்டாப்பிலே இருக்கு. பரவாயில்லை? இப்பத்தான் வாங்கிண்டாப் போச்சு''

என்றார் ஒரு முதியவர்.

அருகிலிருந்த தாம்பூலத் தட்டின் மீது கலகலவென்று ஒலி கொட்டியது.

நண்பர் தலை திருப்பிச் சர்மாவைப் பார்த்தார். ''இந்த ஐடியா நமக்குத் தோணமலே போயிடுத்தே! கல்வி நிலையங்களிலே போதிக்காட்டா என்ன? நம் ஊரில் சம்ஸ்கிருதத்துக்கு வரவேற்பு ஒரு நாளும் குறையாது. இப்படிப் பிரவசனம், காலட்சேபம்னு பண்ணினாலே கூட்டமாய் வருவார்களே! அதுவே ஒரு ப்ரொஃபெஷனாயிட்டால் வரும்படியும் உண்டு. இனி மேல் நீங்க கவலையே படவேணும், சர்மா! நம் ஊரில் கொஞ்ச காலமாய் உபன்யாசங்களுக்கு ஏற்பட்டிருக்கிற மவுசை மறந்துவிட்டோம் நாம். பக்தியின் மறுமலர்ச்சியாச்சே இப்போ!''

சர்மா பேசாமல், அசையாமல், கல்லாக உட்கார்ந்திருந்தார். அதிர்ச்சியிலிருந்து அவர் இன்னும் மீளவில்லை. கண்கள் நிலைகுத்தியே இருந்தன. அந்தக் கண்களின் முன் நீலத்தாமரை இதழ் கூம்பிப் பரிதாபமாய்க் கிடந்தது.

''நீங்க ஆசைப்பட்ட மாதிரி சம்ஸ்கிருதமே உங்கள் வாழ்வுக்கு வழியாய் அமைய முடியும் சர்மா! உங்க வித்வத்துக்கு நீங்க இப்ப இருக்கிற அத்தனை உபந்யாசகர்களையும் ஜெயிச்சுண்டு வந்துட முடியாதா!''

சர்மா தலை நிமிரவில்லை.

''உங்க மாதிரி பாகவதர்கள் கிடைக்கிறது அபூர்வம். அடேயப்பா, கடகடகடவென்று ஸான்ஸ்க்ரிட் எப்படி வந்து விழறது! ரிமார்க்கபிள்! எனக்குப் புரியாவிட்டாலும் அசந்து போயிட்டேன்'' என்றார் ஓர் அன்பர்.

''பக்தியை வளர்த்து நல்ல காரியம் செய்கிறீர்கள்'' என்று இன்னொருவர் பாராட்டினார்.

அப்போது சர்மா சிரிக்க ஆரம்பித்தார். தாம்பாளத்தில் நாணயங்களும் நோட்டுக்களுமாய் மேடு தட்டியிருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து அடக்கமாட்டாமல் சிரித்தார். ''கற்பகம், நான் சில சிநேகிதர்களோடு காவிய அழகைச் சேர்ந்து ரசிக்க வந்தேன், பிரவசனம் பண்ண வரல்லே. ஆனால் தட்டெடுத்திருக்கா பார்த்தியா? புண்ணிய பலனும்! எல்லாரும் ராமாயணம் கேட்டா, யாரும் கவிதை கேட்கலே.'' எப்படியோ பேசி முடித்துவிட்டு மறுபடியும் சிரித்தார் சர்மா. சிரித்துச் சிரித்துக் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அது சிரிப்பின் கண்ணீரா அல்லது அழுகையின் சிரிப்பா என்று தெரியவில்லை.

திகைப்படைந்த ஓர் அன்பர், ''உபன்யாசகர்வாள்....'' என்று ஏதோ சொல்லத் தொடங்கினார்.

சர்மாவின் கை சட்டென்று உயர்ந்து தடை செய்தது. சிரிப்பு, அழுகை இரண்டுமே நொடியில் வற்றிப் போயின.

''நான் உபன்யாசகர் இல்லை. நான் லெக்ச்சரர்.'' அவர் தம் மனைவியின் பக்கம் திரும்பினார். ''அந்த வேலைக்கே போயிடறேன் கற்பகம்!''

கற்பகம் பதில் சொல்லவில்லை. நிம்மதியின் பெயர் மௌனம்.



மனதை
கொள்ளை
கொள்ளும்
தாழம்பூ மணம்



மைசூர் சுனந்தா
அகர்பத்தி
பேக்டரியாரின்
PRAGATI
ப்ரகதி
பத்திகள்
மற்ற எல்லா
தாழம்பூ பத்திகளை விட
சிறந்தது
பூர்ண விநியோகஸ்தர்கள்:-
R. கோபாலகிருஷ்ணன் & சன்
24/90, தெலுங்கு பிராமணாள் வீதி,
கோயமுத்தூர்-1 போன்: 23691
VSK 86 233



704 tam
நிறுத்துங்கள்!
முரட்டுத்தனத்தால் பயனில்லை. தேவைப்படுவது நல்ல இங்க். கேமல் டீலக்ஸ் இங்க் நிரப்புங்கள். பிறகு பேனா தங்கு தடையற்று எப்படி எழுதுகிறது என்று பாருங்கள்.
deluxe ink
கேமல்
டீலக்ஸ் இங்க் வாங்குங்கள்

ஞானம்

தி.சா.ராஜு

பூனா நகரத்தை அடுத்துள்ள கிராமத்தில் அகன்ற தோப்பு. அதற்குள் ஆயிரக் கணக்கான கனி மரங்கள். மரங்களின் அடர்த்தி முடிவுறும் இடத்தில் மலர் வனங்கள் தொடங்கின. பல ஏக்கர் விஸ்தீரணத்துக்கு ஒரே பூக்காடு. மலர்த் தோட்டத்தின் இடையில் சதுரமான இரட்டை மாடிக் கட்டிடம். அதன் முகப்பில் ஓம் என்ற புனித அட்சரம் விளங்கிற்று.

கட்டிடத்தை அடுத்துப் பல தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை தூய்மையும் எளிமையும் கொண்டு விளங்கின. சூழ்நிலையில் ஒரு தெய்வீக அமைதி. அங்கு வந்த அன்பர்கள் ஒருவரை யொருவர் பார்த்தாலும் பேசினாலும் அவர்களுடைய நடத்தையில் வினயம் துலங்கிற்று.

மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது. அன்று சுவாமிஜி பொதுமக்களுக்குத் தரிசனம் தரும் நாள். கால் நடையாகவும் டாக்சியிலும் பக்தர்கள் வந்து குழுமிய வண்ணம் இருந்தார்கள். தொண்டர்கள் அவர்களை வரிசை யாக நிற்க வைத்துச் சுவாமிஜியிடம் அனுப்பிக் கொண்டிருந்தனர். காற்றில் இறைவனின் நாமம் நிரம்பி யிருந்தது.

பம்பாயிலிருந்து வந்திருந்த மனோஜ்குமார், அவரது மனைவி மீரா, அவர்களுடைய குழந்தைகள் அனைவரும் வரிசையில் நின்றார்கள். பணியாள் பெரிய பழக் கூடையையும் பூத் தட்டையும் ஆசிரமத்துக்குள் கொண்டு சென்றான். அதிகமாகப் போனால் பக்தர்கள் அரை நிமிஷமே சுவாமிஜியிடம் தங்க முடிந்தது. அதற்குப் பிறகு பிரசாதம் பெற்றுக் கொண்டு அவர்கள் அமைதியுடன் திரும்பினார்கள்.

கருவறையினுள் துர்க்கையின் சலவைக்கல் பதுமை. அன்னை செந்நிற மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தாள். பதுமைக்கு அருகில் சுவாமிகள் அமர்ந்திருந்தார். எவ்வளவு வயது என்று அநுமானிக்க இயலாத தோற்றம். ஆனால் உடலில் ஒரு குன்றாத இளமை குடிகொண்டிருந்தது. கண்களில் அருள் நேயம். கருவறைக்குள் வரும் பக்தர்களுக்கு மலர்ப் பிரசாதத்தை எடுத்துக் கொடுத்த வண்ணமே இருந்தார். அவருடைய வாய் ஒரே மந்திரத்தைத் திரும்பத் திரும்ப ஒலித்தது. 'ஓம் சக்தி'.

மனோஜ்குமார் அடிகளை வணங்கிப் பிரசாதம் பெற்றுக் கொண்டார். அவருக்குப் பின்னால் நின்ற மீராவை ஏறிட்டுப் பார்த்தார் சுவாமிஜி. அவரது கண்ணிமைகள் துடித்தன. உடல் பதறிற்று. 'மீரா—மீரா மாயி', அவருடைய நாவு குழறிற்று. 'என்னை ஆசிர்வதி தாயே', சுவாமிஜி எழுந்திருந்து நெடுஞ்சாண்கிடையாக மீராவின் கால்களில் விழுந்தார். மீரா சிறிதுகூடப் பதறவில்லை. நேராகப் பதுமையின் அருகில் சென்று அன்னையின் காலடியில் கிடந்த இரு பெரிய மலர்களை எடுத்துச் சுவாமிஜியின் கையில் கொடுத்தாள். பிறகு ஒன்றுமே நிகழாததைப் போல் தன் கணவர், குழந்தைகளுடன் கோயிலை விட்டு வெளியே வந்தாள்.

திரை இழுக்கப்பட்டது. சுவாமிஜி குப்புறப் படுத்த நிலையிலேயே கிடந்தார். பக்த கோடிகள் பதறியவாறு வெளியே நின்று கொண்டிருந்தனர். மனோஜ்குமாரின் செடான் பம்பாய் செல்லும் திசையை நோக்கித் திரும்பிற்று. விரைவாகச் செல்லத் தொடங்கிற்று.



'சுவாமிஜியை நான் கடைசி முறையாகச் சந்தித்தது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைக்கிறேன்' — மீரா பேசத் தொடங்கினாள். 'ஆனால் அவருக்கு அப்போது சத்யபால் தடானி என்று பெயர். நகரத்தின் மிகப் பெரிய வார்ப்படத் தொழிற்சாலையின் அதிபராக இருந்தார். சௌத் மான்ஷனில் பெரிய மாளிகை ஒன்று அவருடைய இருப்பிடமாக இருந்தது.' மனோஜ்குமார் பதில் ஏதும் கூறாமல் ஜாக்கிரதையாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றார்.

....'நாட்டுப் பிரிவினையைத் தொடர்ந்த ஆண்டுகள் அவை. சிந்து மேற்குப் பாகிஸ்தானம் ஆகிய பகுதிகளில் ஒரு ஹிந்துவைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. அப்போது சிந்து அகதிகளுக்காக ஜம்ஷேட்ஜி புனாவில் நாரி நிகேதனைத் திறந்து வைத்தார். பிரிவினைக்கு முன்னரே பம்பாய், பூனா, அகமதாபாத் போன்ற நகரங்களில் பல சிந்திகள் வந்து



குடியேறி யிருந்தனர். அவர்களில் பலரும் உயர்ந்த செல்வ நிலையில் இருந்தனர்.

நாரிநிகேதனுக்குத் தலைவராக மாதுரி தேவி நியமிக்கப்பட்டார். அவர் தெய்வ பக்தியும் தொண்டு உணர்ச்சியும் மிக்கவர். பாகிஸ்தானில் சீரழிந்து போன பெண்களுக்கெல்லாம் அவர் மிகுந்த சிரமத்துடன் புனர் வாழ்வளிக்கத் துணிவு கொண்டார். நாரி நிகேதன்மிகப்பெரிய நிறுவனமாக வளர்ந்தது.

அங்கு பயிற்சி பெற்ற பெண்கள் டெலிபோன் இயக்குனர்களாகவும், கடைப் பணிப் பெண்களாகவும், கௌரவமுள்ள குடும்பங்களில் உதவியாளர்களாகவும் அமர்ந்தார்கள். இந்த வகையில்தான் நான் சத்யபால் தடானியின் வீட்டில் வரவேற்புச் செயலாளராகப் பணி ஏற்றுக் கொண்டேன். தடானிக்கு அப்போது வயது இருபத்தைந்துதான் ஆகியிருந்தது. தகப்பனார் இல்லை. உடன் பிறந்தவர்களும் கிடையாது. பல லட்சங்களுக்கு அதிபதியாக இருந்தார். பல உயர் குடும்பங்களிலிருந்து அவருக்குப் பெண் கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் அவர் திருமணத்தைத் தட்டிக் கழித்தார். உயர் வட்டத்தைச் சேர்ந்த பல பெண்கள் அவரது தோழமையை நாடி வருவார்கள். இவரும் அவர்களுடன் உறவிருப்பார். என்றும் இவர்களின் திருமணம் மட்டும் நடைபெறாது. அந்தப் பெண்களுக்கு உயர் குடும்பங்களில் தாமே விவாகம் செய்து வைப்பார். நான் அவருடைய இல்லத்தில் மூன்றாண்டுகள் பணி புரிந்தேன். கணிசமான ஊதியமும் எனக்குக் கிடைத்து வந்தது.

நாரிநிகேதன் பெரிதும் வளர்ந்து வந்தது. அதன் தொழில் முறைகள் பலவாயின. அதன் தலைவி மாதுரி தேவி நோய்வாய்ப் பட்டார். அவருக்குத் தக்கதொரு துணையாள் தேவையாயிருந்தது. அதனால் அவர்கள் என்னை மீண்டும் நாரி நிகேதனுக்கே அழைத்தார்கள். நான் சத்யபால் தடானியிடம் விடைபெற்றுக் கொள்ளச் சென்றேன்.

அவரிடம் விடைபெறச் சென்ற அன்றுதான் அவர் என்னை ஏறிட்டுப் பார்த்தார். அதனுடைய பொருள் எனக்குப் புரிந்தது. என்னுடைய வனப்பும் எழிலும் அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அந்தச் சந்திப்புக்குப் பிறகு விரும்பினால் தொடர்ந்து நான் அங்கே தங்கியிருக்கலாம். ஆனால் நான் நாரி நிகேதனுக்குத் திரும்பினேன்.'

பெரிய பெரிய கள்ளிப்பெட்டிகளைச் சுமந்து வந்த லாரி ஒன்று மனோஜ்குமார் ஓட்டிய காரை மயிரிழையில் மோத வந்தது. அவர் வெகு லாகவமாக ஸ்டியரிங்கை ஒடித்துக் காரை ஒதுக்குப்புறமாக ஓட்டி அதில் உள்ளவர்களை மரணத்தின் கயிற்றிலிருந்து தப்ப வைத்தார். அந்த அதிர்ச்சியின் விளைவினால் மேலே தொடர்ந்து செலுத்த முடியாமல் காரைச் சாலை ஓரத்தில் நிறுத்தினார். நான்கு பேரும் காரை விட்டுக் கீழே இறங்கினார்கள்.

எதிர்ப்புறத்திலிருந்து வாரிகள் வந்தவண்ணம் இருந்தன. மீரா தொடர்ந்து பேசினார்.

'....பாகிஸ்தானத்திலிருந்து வந்த அகதிகளுக்காக நிறுவப்பட்ட நாரிநிகேதனத்தில் பலதரப்பட்ட பெண்களும் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

'...நாரிநிகேதனத்தில் நான் புரிந்த தொண்டின் மூலம் என்னுடைய சமுதாய மதிப்பு உயர்ந்தது. நான் மாதுரி தேவியின் வலது கரமாக விளங்கினேன். நிகேதனின் பிரதிநிதியாகப் பல இடங்களுக்குச் சென்று வரவேண்டியிருந்தது. உயர் மட்டத்தில் பல நண்பர்களையும் அறிமுகத்தையும் பெற்றேன். அப்போதுதான் சத்யபால் மறுபடியும் எதிர்ப்பட்டார்.

அந்த வேளையில் அவருடைய செல்வமும், அழகும் புகழும் வெகுவாக வளர்ந்திருந்தன. உயர்தட்டு வாசிகளிடையே அவர் தேவேந்திரனாக விளங்கினார். சத்யபால் நிகழ்த்தும் மாதாந்திர 'மூன்லைட்' விருந்துகள் நகரத்திலே புகழ் பெற்றவை. அவருடைய மாளிகையின் முன் இருக்கும் விசாலமான தோட்டத்தில் ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் நகரத்தின் பெருந் தலைகள் கூடும். இசையும் மதுவும் வழியும். புனாவின் சமுதாய சரித்திரத்தில் தடானியின் மூன்லைட் விருந்துகள் மிக மிகப் பிரசித்தி பெற்றவை.

ஒரு தடவை இந்த விருந்தொன்றுக்கு நானும் அழைக்கப்பட்டேன். சாதாரணமாக இத்தகைய நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்வதில்லை. தட்டிக் கழித்து விடுவேன். ஆனால் ஒரு நிறுவனத்தின் துணைத் தலைவி என்ற முறையில் இந்த அழைப்பை மறுதளிக்க முடியவில்லை. அதில் கலந்து கொண்ட பிறகுதான் செல்வம் எத்தகைய புலனின்பங்களைத் தர முடியும் என்பது பற்றி ஒருவாறு அறிந்துகொள்ள முடிந்தது.

உயர்ரக மது ஒரு சுற்று வரும். தொடர்ந்து உண்பதற்கு அற்புதமான சுவையுடைய பண்டங்கள். அடுத்து இசைக்கேற்ப நாட்டியமும் நிகழும். ஆண்களும் பெண்களும் ஒருவரை யொருவர் கட்டித் தழுவி முயக்க நிலையில் நடனமாடுவார்கள். விளக்குகள் அணைக்கப்படும். மெல்லிசை நிற்கும். பிறகு சிறிது சிறிதாக ஒலியின் பரிமாணம் பெருகும். ஒளியும் அதிகரிக்கும். இப்படியே பல ரவுண்டுகள்.

மேல்நாட்டு இசையின் செவித் துளைப்பைப் பொறுக்க இயலாமல் மகிழ மரத்தின் அடியில் உட்கார்ந்தேன். பெரிய தாமரை இலையின் வடிவத்தில் நுரை ரப்பர் ஆசனம். மலர்களின் மணம் மனத்தை ரமிக்கச் செய்தது. விளக்குகள் ஒளி குன்றி இருண்ட நேரம். இரண்டு பெண்கள் சற்று மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். 'அவர் என்ன மாயம் வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. அவர் தரும் போதையைச் சொல்லவே இயலாது போ!...' இது யாரைப் பற்றி என்று என்னால் அனுமானிக்க முடிந்தது. மதுவும் இசையும் எங்கெங்கும் நிறைந்தன. உறக்க மயக்கத்தில் தள்ளாடும் நிலையில் நான் ஒரு தனியறைக்குப் போய்ச் சேர்ந்தேன். கண் விழித்தபோது என்னுடன் சத்யபால் இருந்தார்.

வெளியில் தண்ணிலவு ஒளிர்ந்து கொண்டிருந்தது. நீல விதானத்தில் மலர்ச் சிதறல். குளிர்ந்த போதை தரும் சூழ்நிலை. ஆனால் சத்யபால் என்னவோ தம் சுய நினைவில்தான் இருந்தார். அவர் அப்போது என்னுடன் பேச முயன்றது தத்துவ விசாரம். 'மனிதனுக்குப் புலனின்பங்களைத் தரும் பொருட்டே இறைவன் எல்லாப் பொருள்களையும் படைத்திருக்கிறான்' என்று அவர் விவாதிக்கத் தொடங்கினார்.

'விண்ணையும், மதியையும், தாரகைகளையும், கடலையும் மனிதன் காட்சி இன்பம் பெறும் பொருட்டுப் படைத்தான். கூடவே அதற்கும் மேலான ஒரு தத்துவத்தை இவைகளின் மூலம் அடைய மனிதனுக்கு உணர்வையும் அருளினான்' என்று நான் விடையிறுத்தேன்.

பேச்சு வளரத் தொடங்கிற்று. மூன்று ஆண்டுகள் நான் அவரிடம் பணி புரிந்தும் அவர் என்னைக் கவனிக்காதது குறித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். என்னைத் தம் பார்வையினால் மெழுகு பதத்துக்கு உருக்கினார்.

'பெண்ணை இறைவன் படைத்ததே பேரின்பத்தின் ஏணிப் படியாகத்தான்' என்று வாமதேவரின் மேற்கோளுடன் மறுபடியும் அவர் பேச்சைத் தொடங்கினார். எனக்குப் பர்த்ருஹரியின் வைராக்கிய சதகம் ஒன்று நினைவுக்கு வந்தது. 'இன்பங்களுக்கு எல்லையே இல்லை. அது வற்றாத பெருங் கடல். அதில் ஆழ்ந்து யாரும் அனுபவ எல்லையைத் தொட முடியாது. அதற்குள் வாழ்க்கையே முடிந்து போகும். ஆகவே தான் இறைவன் இன்பத்தைச் சோர்வு தரும் முடிவோடு கலந்து வைத்தான்' என்று கூறிவிட்டு, 'மனிதனுக்கு இன்பம் தருவதுதான் பெண்ணின் பிறப்புக்கே நோக்கம் என்றால் அவளுடைய உருவத்தையே இறைவன் அதற்கேற்ப அமைத்திருப்பான்' என்றேன்.

தடானியின் பார்வை நிலைத்தது. 'அந்த சுலோகத்தை மறுபடியும் சொல்லு' என்று பணித்தார். அவருடைய ஆணையின் வேகம் என்னைத் திணற வைத்தது. அதைத் திரும்பக் கூறினேன். கூடவே 'கௌதமர் தேவேந்திரனுக்கு அளித்த சாபம் நினைவிருக்கிறதா?' என்றும் வினவினேன். அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. என்னைத் தனியே விட்டு விலகிவிட்டார்.

அடுத்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் நான் நாரிநிகேதனுக்குத் திரும்பி வந்தேன். மறு நாள் காலையில் உள்ளூர்ப் பத்திரிகையில் வெளிவந்த முக்கியமான செய்தி, சத்யபால் தடானி துறவறம் மேற்கொண்டு விட்டார் என்பதுதான். இதைக் கேட்டு ஊரே அதிசயித்தது. ஆனால் எனக்கு வியப்பேற்படவில்லை. ஒவ்வொரு துறையிலும் அவரால் மனத்தைத் தீவிரத்துடன் ஈடுபடுத்த முடியும் என்பதை நான் அறிவேன். துளசி, பில்வமங்களன் ஆகியோரை நாம் அறியோமா?

காரின் கதவைத் திறந்தார் மூனேஜ் குமார். குழந்தைகளும் மீராவும் மறுபடியும் அதனுள் ஏறிக் கொண்டார்கள். அந்த வளைந்த பாதையின் வழியே கார் மீண்டும் செல்லத் தொடங்கிற்று.



எதிர்பாராமல் விருந்தினர் வந்துவிட்டால்...

5 விநாடிகளில் உளக்களித்திடும் காப்பி— நெஸ்கஃபே வழங்கி அவர்களை மகிழ்வியுங்கள். அவ்வளவு குறைந்த நேரத்தில் ஒரு கப் தயார்!



தென்னிந்திய
காப்பி
விதைகளிலிருந்து
தயாரித்த முற்றிலும்
சுத்தமான
காப்பி

NCE 5743


**உணர்ச்சி ஊட்டும் நெஸ்கஃபே
உளக்களித்திடும் நெஸ்கஃபே!**

நெஸ்லே
தயாரிப்பு

அவள் கண்ணாடி முன் நின்று கொண்டாள். இளமை மங்கிப் போனவளைப் போல அந்தக் கண்ணாடி ரசமிழந்து பொலிவிழந்து இருக்கிறது. சிரித்துக் கொள்கிறாள். அவள் நினைவு தெரிந்தது முதல் இந்தக் கண்ணாடி அவள் வீட்டில் இருக்கிறது. கண்ணாடி மட்டும் என்ன, அவள் மட்டும் ரசமிழந்து போய்விடவில்லையா? எத்தனை வருஷங்கள் தான் அந்தக் கண்ணாடி இவள் முகத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும்? அவள் முகத்தைப் பார்த்தே அது மங்கி விட்டதா? அல்லது அதன் முகத்தைப் பார்த்தே இவள்....? தலையைப் பார்க்கிறாள். காலம் கறுப்பையெல்லாம் வெள்ளையாக்கிக் கொண்டிருந்தது. இவள் செயற்கையாக ஒவ்வொன்றுக்கும் 'டை' தடவி.... அவளுடைய தொழிலுக்குச் சாயம் வெளுத்துப் போகக்கூடாது. தலைக்குச் சாயம், உதட்டுக்குச் சாயம்....

கண்ணாடி என்ன செய்யும்? அவனவன் போட்டுக் கொண்ட வேஷத்தை அவனவனுக்குக் காண்பிக்கும். அவளுக்கும் அந்தக் கண்ணாடிக்கும்மட்டுமே தெரிந்த வேஷங்கள். எல்லாத் தொழிலுக்கும் ரகசியங்கள் தேவைப்படும் வரை வேஷங்களும் தேவைப்படுகின்றன.





ஜ.சாமிநாதன்

—நெற்றியில் இலேசாகச் சுருக்கங்கள் ஆரம்பித்து விட்டன. திமிர் பிடித்த வாழை மரம் நாராக ஆகாமல் போய் விடுமா!

அவள் உடம்பு முப்பத்தெட்டு ஆண்டுகளை உண்டிருந்தது. அல்லது முப்பத்தெட்டு ஆண்டுகளும் அவளை மெல்ல மெல்லச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன.

தூ !

தன்னை நினைத்து அவலத்தால் குறுகி, அவமானத்தால் உள்ளம் மறுகி, விழியில் நீர் பெருகிப் பொய்மையெல்லாம் கரைவது போல் கண் மையெல்லாம் கரைந்து வெலிடமிருந்து தான் ஓடியதையும், பலர் தன்னைத் துரத்தியதையும் நினைத்து நினைத்துத் திடீரென்று விசித்து விசித்து அழுதாள். மற்றவர்களுக்காகச் சாயமும், மற்றவர்க்காகக் கண் மையும் மற்றவர்க்காகப் புன்சிரிப்பும்—ஐயோ!

ஊமைச் சோகம் பெருங் குரலெடுத்துப் புரண்டது.

வாழ்க்கையில் எல்லோரையும், எல்லாவற்றையும் பறி கொடுத்தாகிவிட்டது — ஒன்றைத் தவிர !

அவளுக்கு உடம்பு சிலிர்க்கிறது. இந்தப் பாவிக்கும் சந்ததி என்று ஒரு பிள்ளையைக் கொடுத்த ஆண்டவனை நினைந்து. அவளும் ஒரு தாயே. அவளிடத்தில் உலகம் உண்மையில் பற்று வைக்காவிடினும், அவள் இந்தப் பிள்ளையிடம் உண்மையில் அன்பு கொள்ள வேண்டியிருக்கிறது. தயையும், அருளும், அன்பும் பரிவும் திரண்ட உருவமான தாயார். இவ்வுலகம் அவளுக்கு அளித்த சிறுமைகளையும், அவளாகத் தேடிக் கொண்ட சிறுமைகளையும், சிறியவையாக ஆக்கி அவளுக்குத் தாயார் ஸ்தானத்தை, பெருமையை அளித்தவன் அவன்.

இவனுக்கு இவ்வளவு அறிவைக் கொடுத்தவன் எவன் ? பால் வடியும் முகத்திலும் பக்குவத்தை அளித்தவன் எவன்? ஐந்து வயசிலேயே அவன் பள்ளியில் எல்லோரையும் கவர்ந்தான். வருஷம் தேயத் தேய அவன் வளர்ந்தான். வாழ்விழந்த இவளுக்கு வாழ்வாகவும், மூச்சாகவும் இருந்தான். இப்போது அவனுக்கு வயசு பதினைந்து ஆகி விட்டது. எல்லா வகுப்புகளிலும் முதலாவதாகத் தேறி இப்போது பள்ளி இறுதி ஆண்டுப் பரீட்சை எழுதப் போகிறான்.

நாளைக்குத்தான் கடைசி நாள். அவனுடைய பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும்; கட்டியாக வேண்டும் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். கையில் இருக்கின்ற பணத்தை யெல்லாம் எண்ணிப் பார்த்தாகி விட்டது. பத்து ரூபாய்தான் தேறுகிறது. இதையே பத்து தடவை எண்ணி விட்டாள். ஒன்றையே பத்து முறை எண்ணினால் எண்ணிக்கை பெருகவில்லை, கவலைதான் பெருகுகிறது. இன்னமும் ரூபாய் வேண்டும்.

பையன் வெளியே போயிருக்கிறான். அவன் நண்பன் வீட்டுக்குச் சென்று படித்து விட்டுப் பதினொன்றுக்குத்தான் வருவான். விளக்கு வைத்து விட்டது. மனத்திலிருந்த இருள் நீங்கவில்லை. எப்படியாவது அவளுக்கு இன்னமும் இருபது ரூபாய்கள் தேவை. அவள் பகலை நம்பி வாழ்ந்தவளல்ல. ஆனால் இருட்டும் இப்போதெல்லாம் அவளுக்கு அவ்வளவாகக் கைகொடுப்பதில்லை. வயசு ஏற ஏற மனசுக்குக் கூடுகிற பக்குவத்தை உடம்பு இழந்து கூடாகி வருகிறது. கஷ்டங்கள் அவள் மனசுக்கு மட்டும் பக்குவத்தை அளிக்கின்றன.

அவள் எப்படியாவது இந்தப் படிப்பை முடித்து விட்டால் அவளுக்கு விடிவு ஏற்பட்டு விடும். அந்த விடிவுக்கு இந்த இரவைத்தான் நம்பியிருக்கிறாள்.

மணி எட்டு.

யாரையும் காணோம். பரந்து கிடக்கும் இந்தச் சமூகத்திலே ஒருவர்கூட இன்று அவளைச் சீந்தக் காணோம். தெருவில் நடமாட்டம் குறைகிறது. வந்த வேகத்திலேயே வந்த சிலரும் வீட்டைத் தாண்டிப் போகிறார்கள்.

இருபது ரூபாய்களை ஒருவன் கொண்டு வந்து கொட்டினாலும் அவன்தான் இந்த வேளைக்குத் தேவன். தேவன் வருவானா? இவளுடைய வருகைக்குக்கூட வேளை வேண்டுமா!

நாழிகை கூடக் கூட அவளுக்கு நம்பிக்கை குறைகிறது. மற்றவர்களின் பலவீனத்தில் தான் அவள் நம்பிக்கையின் பலம் இருந்தது.

எங்கோ மணி ஒன்பது அடித்தது.

ஒவ்வோர் அடியும் அவளுடைய ஆசையிலும் நம்பிக்கையிலும், கனவிலும், விடிவிலும் விழுந்த அடியாக இருந்தது.

நாளை பணம் கட்டாமற் போனால்...?

அப்புறம் நாளை என்று இன்று கனவாக இருக்கும் நாள் என்றும் கனவாக இருந்து விடும்.

வெறுப்புடன் ஒருக்களித்திருந்த கதவை விட்டு உள்ளே வந்தாள். ஒரு மிடறு தண்ணீர் குடித்தாள். மனம் குளிர்ந்து விடுமா ? பாவம் செய்து பணம் சம்பாதித்துப் பிள்ளையைப் படிக்க வைக்கத்தான் வேண்டுமா ? அவள் குமுறினாள். வாயில் நீரைக் கொணர்ந்து லிங்கத்துக்கு அபிஷேகம் செய்தாலும் கண்ணப்பன். சமூகத்துக்கு எச்சிலாகப் போய் விட்ட அவள் தான் தெய்வமாக நினைக்கும் தன் பிள்ளைக்குச் செய்வது பாவமா? அவள் குழம்பினாள்.

மணி ஒன்பதரை.

பையன் படித்துக் கொண்டிருப்பான். தன் தாயார் கஷ்டப்படுகிறாள் என்பதை மாத்திரம் புரிந்துகொண்டு அவள் தன்னை நம்பியிருக்கிறாள் என்ற வைராக்கியத்துடன் படித்துக் கொண்டிருப்பான்.

வாசலில் ஏதோ ஒலி கேட்கிறது. கதவைத் தட்டும் ஓசை கேட்கிறது. அவளுக்கே, அவளைப் போன்றவர்களுக்கே உரித்தான கறுகறுப்பும் படபடப்பும், குறுகுறுப்புமாகத் தன்னை மறந்து தன் சோகத்தை மறந்து, தன்னையே மாற்றிக் கொண்டு ஒரு கணத்தில், ஒரே கணத்தில் அவள் தன்னைத் தயார் செய்து கொண்டு வாயிற் கதவைத் திறக்கிறாள்.

வந்தவன் மகன்தான் வேறு ஒருவருமில்லை.

இவன் ஏன் தயங்கித் தயங்கி உள்ளே நுழைகிறான்?

உள்ளே அவன் வந்தவுடன் அவளைப் பார்க்கிறாள்.

இவன் வேறு யாரோ....


பார்த்தால் இவனுக்குப் 'பக்'கென்கிறது. இவனுக்கு வயசு பதினாறு பதினேழுக்கு மேல்

உறுதியானது. லேசானது.
உபயோகிப்பதற்கும், சுத்தப்
படுத்துவதற்கும் எளிதானது.
சமையல் நேரமும், பணமும்,
எரிபொருள் செலவுகளும்
மிச்சம். சுத்தப்படுத்தும்
போது கோடுகளும், கீறல்களும்
படியாது. பலவித வடிவங்களிலும்,
வகைகளிலும் கிடைக்கின்றன.

ஹிண்டாலியம்

**நவீன சமையலறை
பாத்திரங்களுக்கான
உன்னத உலோகம்.**

விவரங்களுக்கு
காம்சேல்ஸ் இண்டஸ்டிரீஸ்
C/5 இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை-58.



மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

DOL-327/1 TAM

J. P. பில்டர்ஸ்
&
J. P. சிட் பண்ட்

சென்ட்ரல் ஆபீஸ் திறப்பு விழா

துவக்கம் : 5-7-1970

பூஜை நேரம் காலை 9 மணி முதல்
10-30 மணிக்குள்

இடம் :
22/1, எட்வர்ட் எலியட்ஸ் ரோடு
(ஹோட்டல் உட்லண்ட்ஸ் எதிரில்)
மயிலாப்பூர், சென்னை - 4

பல ஆண்டுகளாக இந்த ஸ்தாபனங்கள்
பொதுமக்களுக்கு லாபகரமான நற்பணி
ஆற்றிக் கொண்டு வருகின்றன.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :
39. கங்காதீசுவரர் கோயில் தெரு
புரசைவாக்கம் — சென்னை-7

MARS

இருக்காது. தன் பிள்ளையைப் போலவே சற்றுத் தூக்கிய மூக்கு. அகன்ற விழிகள். அவன் விழிகளில் தயக்கம் இருக்கிறது, நடையில் இருக்கிறது. பேச நா எழாமல் தடுமாறுகிறான் என்பது அவளுக்கு நன்றாகப் புரிகிறது.

'உனக்கு என்ன வேண்டும்?' என்று அவள் கேட்கிறாள்.

''நான்.... நான்..... இங்கேதான் வந்தேன். இங்கே வரலாம் என்று தெருக்கோடியில் யாரோ என்னிடம் சொன்னார்கள்.'' அவனுக்குப் பேசும்போதே வாய் குழறுகிறது.

வெளிச்சத்தில் அவனை இன்னமும் நன்றாகப் பார்க்கிறாள். குழந்தமை மாறாத முகம். ஐயோ, இவனுக்கு எப்படி இந்த எண்ணம் வந்தது ?

அவன் இலேசாக நடுங்குவது தெரிகிறது. போட்டுக் கொண்டிருக்கும் சட்டையையும், பாண்ட்'டையும் பார்த்தால் வசதியில் வாழ்பவன் என்று தெரிகிறது. அதற்கும் மேலே... அதற்கும் மேலே.... அவனைப் பார்த்ததும் அவளுக்கு மனமெல்லாம் சங்கடத்தால் வேதனையுறுகிறது.

'இங்கே உட்கார்' என்று அவனை நாற்காலியில் உட்கார்த்தி வைக்கிறாள். மருண்ட விழிகளும், திரண்ட திகிலுமாய் வெட வெடத்தபடி அவன் உட்காருகிறான்.

இருபது ரூபாய்களைக் கொடுக்கும் தேவன் வந்து விட்டான் என்ற குரல் அவள் இதயத்தில் கேட்கிறது.

மறுபடியும் அவனைக் கூர்ந்து கவனிக்கிறாள்.

இது ஓர் இளங்கன்று. துள்ளியபடி வழி தவறி வந்த கன்று என்று நினைக்கிறாள்.

''நீ எப்படி இங்கே வந்தாய் ?''

''நான்... நான் வந்திருக்க மாட்டேன். எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போய் விட்டது......''

''வாழ்க்கையில் அளவுக்கு மீறி ஆசை வைத்தவர்கள்தாம் இங்கே வருகிறார்கள். வெறுத்துப் போனவர்கள் வருவதில்லை.''

''எனக்கு அன்பு காண்பிக்க வேண்டியவர்கள் என்னை வெறுக்கும் போது நான் அன்பை நாடி ஓடி வந்தேன். என் அம்மா என்னை மிகவும் கோபித்துக் கொண்டாள்.'' இதைச் சொல்லும்போது அவனுக்கு உதடுகள் இழுத்துக் கொள்கின்றன. இலேசாக விசிக்கிறான்.

''அன்பை விலை கொடுத்து வாங்க வந்தாயா?'' என்று அவள் கண்ணீர் நிரம்பிய விழிகளுடன் தன் மகனையே உரித்து வைத்திருக்கும் இவனைக் கண்டு அடைக்கும் குரலில் கேட்கிறாள்.

''அது முடியுமோ, முடியாதோ, நான் ஓடி வந்து விட்டேன்.''

''உன்னைத் துரத்தினார்களா?''

''இல்லை. நானாக ஓடி வந்தேன்.''

''அதாவது உன் அம்மா உன்னைத் துரத்துவதாக நினைத்து ஓடி வந்தாய் !''

''அப்படித்தான். நேற்று நான் ஏதோ திருடி விட்டேன் என்று அடித்தாள்..... உன்னை... உங்களைப் பார்த்தால் என் அம்மா மாதிரியே இருக்கிறது. நீங்கள் சொல்லுங்கள்....'' அவன் ஹோவென அழுகிறான். திடீரென்று அவள் முன் மண்டியிட்டு அவள் மடியில முகத்தைப் புதைத்துக் கொண்டு மேலும் அழுகிறான்.

அவள் அவன் முகத்தை நிமிர்த்துகிறாள். பதினேழு வயசு தளிர். குழந்தை முகம். பிளேடு படாத முகம். சற்றுத் தூக்கிய மூக்கு. அகன்ற விழிகள்.... என் பிள்ளை... என் பிள்ளை இவன். 'பளார்' என்று அவன் முகத்தில் பலம் கொண்ட மட்டும் அறைகிறாள். பிறகு தேம்பித் தேம்பி அழுகிறாள்.

அவனும் அழுகிறான். கண்ணீர் கலக்கின்றன.

அவளுக்கு வெறி பிடித்து விட்டதா ?

''பாவி, திருடியதற்கு அம்மா அடித்தாள் என்பதற்காக ஓடி வந்திருக்கிறாயே, இப்படி உன்னையே திருட்டுப் போவதற்கு அவள் அனுமதிப்பாளா?'' என்று இன்னொரு முறை அவன் கன்னத்தில் அறை விழுந்தது.

''ஐயோ, என்னை மன்னித்து விடுங்கள்... அம்மா !'' என்று துயரில் புரளும் ஒரு மகனாகவே இந்தத் தாயாரிடம் தஞ்சம் புகுகிறான்.

''போ, இப்போதே போ. நீ பிறந்த போது நீ ராஜா போல் வாழ்வாய், தாய்க்குப் பெருமை தேடித் தருவாய் என்று உன்னை ராமனாகவும் கண்ணனாகவும் வளர்க்க எண்ணி ஆயிரமாயிரம் பொற்கனவுகளுடன் உன்னை வருடிய உன் தாயின் கரங்கள்தாம், அந்தப் பொற்கனவுகளை நீ ஒரே கணம் பொடிப் பொடியாக்க நினைத்த போது அறைந்தன என்று நினைத்துக் கொள். அன்று வருடியவளே இன்று உன்னை அறைந்தாள் என்பதை உணர்ந்து கொள். போ.... தாயிடம் ஓடிப் போ. ஓடிப் போவதில் பெருமையில்லை. எதை நோக்கி ஓடிப் போகிறாய் என்பதில்தான் பெருமை. உன்னைப் பிரிந்து இந்தக் கணம் உயிரே பிரிந்தது போல் துடிதுடித்துக் கொண்டிருப்பவளிடம் ஓடு.''

அவன் அவளை நமஸ்கரிக்கிறான்.

அவன் பையிலிருந்து இரண்டு பத்து ரூபாய்கள் விழுகின்றன.

அவற்றை எடுத்து அவன் பையில் வைக்கிறாள்.


''நீங்கள் எனக்குத் தாய். தெய்வம்'' என்று அவன் அழுகிறான்.

''உன் ஊர் எது ?'' என்று அவள் கேட்கிறாள். அவன் சொல்கிறான். அந்த ஊருக்குப் போக இருபது ரூபாய் போதாதென்று அவளுக்குத் தெரியும். சரியாக எண்ணி வைத்திருந்த சில்லறைகளை, தன்னுடைய பத்து ரூபாயை அவனுடைய சட்டைப் பையில் போடுகிறாள். ''நீ எனக்கு இன்னொரு பிள்ளை. என்னுடைய மனசு குளிரும்படி நடந்து கொள்'' என்று சொல்லிக் குழந்தை போல அழுது கொண்டிருக்கும் அவனைத் தேற்றி அனுப்புகிறாள்.

மணி பதினொன்று.

இவளுடைய பிள்ளை வருகிறான். கையிலிருந்த பத்துப் பைசாவைப் பெட்டியில் போடுகிறான். பெட்டியில் ஏற்கனவே இருந்த சில்லறைகளைக் காணாமல் அம்மாவிடம் கேட்கிறான்.

''உன் அண்ணா வழி தவறி இங்கே வந்தான். அவனிடம் கொடுத்து விட்டேன்'' என்று அவள் சொன்னது ஏனோ அவனுக்குப் புரியவில்லை.



முழுமை

மூலையில் இடம்தேடி அமர்ந்தவள் பெட்டி முழுதும் வெறித்துப் பார்க்கிறாள். முன் கழுத்து, பின் முதுகு வளைவுகளும் தோளோடு ஒட்டிய தலைப்புக்களும் வெண்மை கலந்த, பொன்னிறமாய், சாம்பல் பூத்த கருமையாய், பழுப்பாய், முதுகுகளும் வயிறுகளும் தான் கண்களை வந்து மூடுகின்றன. ஒவ்வொருத்தியையும் இழுத்து இரண்டு அறை கொடுத்து முதுகையும் முன்புறத்தையும் மூடச் சொல்லலாம்போலிருக்கிறது. ஆனால் ஒருவராய் இருவராய் இருந்தாலல்லவா சொல்லலாம்? தோல் போன்ற தோற்றம் கொடுக்கும் பைகள், பிளாஸ்டிக் நார்ப் பைகள், வண்ணப்பூப்போட்ட பைகள் என்று வண்ணக் கூட்டம், நிமிடத்துக்கு நிமிடமாய், நகர நெரிசலில் கொண்டு தள்ளும் வண்டியில் குழுமுகிறது; துளும்புகிறது. பெண்கள் பெட்டியின் வாசற்படியில் ஒரு கூட்டம், வெளியே யாரைப் பார்க்கிறோம் என்று புலனாகாமல் இருக்க ஒரு கறுப்புக் கண்ணாடி.. இது வெய்யிலை மட்டுமா மறைக்கிறது? குச்சிக் கால் உறைகள் ரவிக்கை, மேல் சட்டைகள், மணிமாலைகள், உதடுகள், மீசைகள், தம்பட்டமடிக்கும் விகாரங்களுக்கு அது திரை போடுகிறது. கருக்கமே விழாத ஒற்றை மார்புத் துகிலுக்கு மேல் உண்மைகள் நழுவுவதை அசட்டையாகக் கவனியாமல் நிற்கத் துணை செய்கிறது. வண்டியைக் கிளப்பித் தொலைக்க மாட்டானா? இப்படிச் சிரிக்கவும் பேசவும் படிக்க வந்த வயசில் என்ன இருக்கும்? அந்தக் காலத்தில் தலைநிமிராமல் கல்லூரிக்குச் சென்று வந்த சில துளிகளுள் அவள் ஒருத்தி. கல்லூரிக்குள் தெரிந்தவர்களாகவே காட்டிக் கொள்ள மாட்டார்கள். வெளியே பழகிய நண்பர்கள் என்று ஒருத்தர் இரண்டு பேர் இருந்தாலும் ஓர் அரைப் புன்னகைக்கு மேல் பரிமாறிக் கொண்டதில்லை. அப்படிப் பரிசயமான சிவலிங்கம், இப்போதும் தெருவிலோ, பஸ்ஸிலோ மின் வண்டியிலோ நான்கு குழந்தைகளுக்குத் தகப்பனாகச் சந்திக்க நேரும்போதும் அதே தெரிந்த பாவப் புன்னகை செய்யத் தவறுவதில்லை. இதற்கு மேல் என்ன இருக்க முடியும்?

அப்பாடி! கிளம்பியாயிற்று.

வேர்த்துப் புழுங்கும் கசகசப்பினிடையே சில்லென்ற காற்று ஒரு கதிராய் ஆறுதல் சொல்ல வந்து இழைகிறது.

''எங்கே காலே நேரத்திலே?''

—கல்யாணி டீச்சர்.

''...ஓ, இல்லே... மாம்பலத்திலே எங்க சொந்தக்காரங்க...உடம்பு சரியில்லே...''

''அடடா! உங்களைப் பார்த்தா ரொம்பக் களைச்சுப் போனாப்பல இருக்குதேன்னு



பார்த்தேன். இந்த நேரத்திலே ஃபிரெஸ்ஷா இல்லாம எங்கே போறீங்களோன்னு நினைச்சேன். வயசானவங்களா?''

''இல்லே, சின்ன வயசுதான்.''

புழுக்கம் தவிர்க்க வந்த காற்று. கயிறுயக் கழுத்தை வளைத்துக் கொள்வது போல் ஒரு சங்கடம் தோன்றுகிறது.

''அடடா...! என்ன உடம்பு?''

''என்ன உடம்பு? ஸ்கூட்டர்ல மோதி விழுந்து தலே தப்பிச்சது. இந்தக் காலத்திலே எதையும் நினைக்கவே பிடிக்கலே மச்சர்... என்ன சொல்றீங்க?''

''அதை ஏன் கேக்கறீங்க? என்ன வேகமா ஓட்டுறாங்க! நிதானமே இல்லே...''

அவள் சில விநாடிகள் அவள் சேலையையே வெறித்துப் பார்க்கிறாள். பெரிய பெரிய பூப் போட்ட நைலான் சேலே. புது மாதிரியான குட்டை முதுகு வெட்டு ரவிக்கைதான். மூன்று நான்கு பெற்ற தாயைப் போல் தழைந்து இருந்தாலும் இவள் குமாரி... குமாரிதானே?

''நிதானம் எப்படிங்க வரும்? இவங்க கண் முழிச்சது இந்தப் பறக்கிற உலகத்திலே. நிதானம்னு ஒண்ணு எப்படி இருக்கும்னே தெரியாது...''

''உண்மைதாங்க. இதோ பாருங்க. நான் மாம்பலத்திலே இறங்கிப் பஸ்ஸைப் பிடிக்கணும். இது அஞ்சு நிமிஷம் லேட்டானாலும் ஆபத்துதான். நிதம் ரேஸ் ஓடுறாப்போல ஓட வேண்டியிருக்கு...''

''ரேஸா? இவங்க, சின்னவங்க ஓடற ஓட்டம், நம்மாலே தொடர முடியல்லே. தொடாமலும் எக்கேடு கெட்டுப் போகட்டும்னு விடவும் முடியல்லே. மேல் நாட்டிலே மினி ஸ்கர்ட்டும் வெறித்தனமுமா விளையாடுறாங்க தான். அது அங்க சறுக்கிறது விளையாட்டு. விழுந்தாலும் விளையாட்டு, கை காலு, மூக்கு உடைஞ்சாலும் விளையாட்டு. ஒரு கையை விட்டு ஒரு கையைப் பிடிக்கிறதும் விளையாட்டு. இங்கே அப்படியா?''

கல்யாணி டீச்சர் ஆமோதிக்கிறாள்.

''அவங்க சொளைட்டி வேறங்க. இங்கே வேறே. அதெப்படிங்க ஒண்ணாகும்?''

''என்னமோ போங்க. மலேப்பா யிருக்குது. நான் நாலு நாட்கள் ஊரிலில்லே. எங்கம்மாவுக்கு உடம்பு சுகமில்லேன்னு போனேனு. வந்து பார்த்தால் வீட்டிலே பல நாட்களாய்ப் பூஜையிலே வைச்சிருந்த தந்தப் பெட்டியைக் காணோம். தெரியலே, எப்படிப் போச்சுன்னு.''

''அடாடா! வீட்டிலே அவங்க இருக்கிறாங்கல்ல? பிள்ளைங்க கதவைத் திறந்து வைச்சிட்டாங்களா?''

''எல்லாரும் இருந்திருக்காங்க. பையன்கள் இரண்டு பேர், அப்பா எல்லாரும்தான்.''

''அட, வேலைக்காரியைக் கேட்டுப் பார்த்தீங்களா?''

''டீச்சர், ஒரு பொருள் நழுவுதுன்னு சிலசமயம் நாமே தான் குத்தவாளின்னு எனக்குத் தோணுது. ஏன்னு, பாருங்க. பெட்டி திறக்கவே

ராஜம் கிருஷ்ணன்



முடியாத உசந்த பொருளை வைச்சுக் காப்பாத்தற ஒண்ணு. பரம்பரையா குடும்பச் சொத்து. அது தெரிஞ்சிருந்தும் முன்னாலே, ஷோ ரூமிலே விளம்பரம் போல வைக்கலாமா? எல்லோரும் கலையை ரசிக்கிறேன், அழகை ரசிக்கிறேங்கிறாங்க. எது அழகு, எது விகாரம்னு தெரியுதா? அதான் கறுப்புக் கண்ணாடி மறைக்குதே!''

''அதை ஏன் கேக்குறீங்க, போங்க! முக்கால்வாசிக் கலைப்பேர்வழிங்க ஃப்ராடு.''

''அதுதான் தெரிஞ்சிருந்தும் கவனமாப் பாதுகாக்காம நழுவ விட்ட நாம்தான் குற்றவாளிகள்.''

''நீங்க யார் மேலே சந்தேகப்படறீங்க?''

''யார் மேலே சந்தேகப்படறது? சிநேகிதிகள், சிநேகிதர்கள் எத்தனையோ பேர். எங்க வீட்டுக்காரரோ உலகப் போக்குத் தெரியாத, சூது வாது பிடிபடாத ஆண். நம்ம பொண்ணு கண்ணுக்கு லட்சணமா இருக்கிறான்னே பெருமை பிடிபடாது. 'டாட்டர்' என்று சொல்லிப்பாரு எல்லாரிடமும்...''

''பின்னே இல்லீங்களா? தமயந்தி பி.யு.சி முடிச்சுட்டு என்ன செய்யப் போறா?''

''எஸ். எஸ். எல். சி.தான் ரெண்டு மார்க்கிலே போயிட்டதே. ட்யூட்டோரியல்லே படிக்கறா. ஆறரை மணிக்கே காலையிலே போயிட்டு, சாயங்காலம்தான் வரா.''

''இங்கே, 'அவந்தி'லதானே படிக்கிறா?''

''அதானே இல்லே. உள்ளூரிலே வெட்கமாயிருக்குதுன்னு கோடம்பாக்கம் போறா. அங்கே அவ பேர் கொண்ட ட்யூட்டோரியலே ஒண்ணு இருக்குது. எனக்கென்னமோ டீச்சர் அவ படிக்கிறதிலே இஷ்டமில்லே. கல்யாணம் செஞ்சு கொடுத்திடலாம்னு எண்ணம்.''

''வயசே ஆகிருக்காதே, அப்படி என்னங்க அவசரம்? கல்யாணத்துக்கு?''

''அப்படீன்னு சொல்றோம். உடம்புக்கு வயசாயிடுதுன்னு, தடுக்க முடியலியே?''

சிரிப்பு சோகையாய் இழைகிறது.

வண்டி மாம்பலத்திலே நிற்கிறது போலும்! ஒரு கூட்டம் இறங்கப் பிதுங்குகிறது: ஒரு கூட்டம் ஏறப் பிதுங்குகிறது.

கனகாம்பரம், மலர்ந்த மஞ்சள் படர்ந்த மல்லிகை, வியர்வை, பவுடர்கள், பரிமளங்கள் எல்லாம் புழுங்கி, மூச்சுக்கள் திணறுகின்றன. ஏறும் கூட்டத்தில் அவள் கண்கள் பதிகின்றன. சல்வார் கமீஸும், வளையங்களும், கட்டுப் புத்தகச் சுமைகளுமாக ஒரு கூட்டம் ஏறியிருக்கிறது. மூவைந்து பிராயம் நிறையும்போது மடலவிழும் மலர்ச்சியின் பல வடிவங்கள். விசி உயரும் புருவங்கள், செழுமையான கைத்தண்டுகள், கன்னங்கள், கண்கள், முடி நேர்த்திகள்.

பட்டாய், மென்மையான பளபளப்பாய், மெத்தென்ற கூந்தல். அவளுடைய தமாவுக்குக் கூந்தல் அலை அலையாய்ச் சரியும். ஒரு கறுப்பு நாடாவினால் கட்டிக் கொண்டு பாவாடையும், வயிறு தெரியச் சோளி, தாவணியுமாய்க் கால் பாவாமல் ஓடி வரும் தோற்றம் கண்ணில் தோன்றுகிறது.

அவளை இரண்டு நாட்களாய்ப் பார்க்கவில்லை. உயர்ந்த மரத்திலிருந்து ஒரு வெண்மலர் காற்றின் உல்லாசத்தில் கிளம்பிக் கீழே சேற்றில் விழுந்து விட்டது போல் ஒரு தோற்றம். நெஞ்சுக்குள் குத்திக் கொண்டிருக்கும் முள்ளை அந்தத் தோற்றம் தீண்டி அசைத்து விட்டாற் போல் நோகிறது. எச்சிலை விழுங்கிக் கொள்கிறாள்.

இரண்டு நாட்கள் காவல் காக்கவில்லை என்றால் பரம்பரையாய்க் கட்டிக் காக்கும் ஒன்று நழுவி விடுமா?

தமா, தோழி நளினியுடன்தானே சுற்றிக் கொண்டிருப்பாள்? இத்தனை திறந்த முதுகுகளும் சோரம் போனவையா? சே! மார்புக் கச்சு நாகரிகம் வந்த நாளில் அவளுக்குத் தையற் கடைப்பக்கம் திரும்பிப் பார்க்கக் கூச்சமாக இருந்திருக்கிறது. இப்போது அந்தக் கூச்சம் இருக்கிறதா? அதற்காக...

அவளுக்கு உலகம் தெரியவில்லை. கொடி பூத்ததும் தலை தாழ வேண்டும் என்ற பிரக்ஞை வரவில்லை. அதை எப்படி வரச் செய்வது?

இயற்கையில் வராததைச் செயற்கையில் எப்படி வரவழைக்க இயலும்? கொடி குனியவில்லை என்று தலையில் அடிக்கலாமா? ஆனால் குனியாமல் போகும் போக்கில், முள் வேலி என்றும், விஷ ஓட்டம் ஓடும் கம்பி என்றும் தெரியாமல் மாட்டிக் கொண்டால்? கொடியைக் கயிற்றால் இழுத்துக் கட்டலாம். இவளை எந்தக் கயிற்றால் கட்டலாம்!

''தமா! நீ இப்படித் தலை பரக்க, தாவணி நழுவத் தெருவில் ஓடக் கூடாது!''

''போம்மா!''

''உன் ஃபிரண்ட் வீட்டில் அவ அண்ணன் இருக்கையிலே ராப் பகலாப் பழி கிடக்கப் போகக் கூடாது.''

அந்தரங்க வளையத்துள் இழுக்க முயன்றால் வந்தால்தானே?

''போம்மா! நீ எப்பப் பார்த்தாலும் என்னையே சொல்லறே! எப்பவானும் நான் சந்தோஷமா இருக்கணும்னு உனக்குத் தோணுறதே இல்லே!''

''உனக்கு எது சந்தோஷம், எது சங்கடம்னு இப்பத் தெரியாது தமா!''

''போம்மா! என் ஃபிரண்ட்ஸ் அம்மால்லாம் எப்படி இருக்காங்க? லல்லுவோடம்மா அவ தனியே சினிமாவுக்குப் போயிட்டு வந்தாலும் தடை சொல்ல மாட்டாங்க. நளினி அன்னிக்கு நம்ம வீட்டிலேந்து ராத்திரி எட்டரை மணிக்குப் போனாளே, ஒண்ணுமே அவம்மா கேட்க மாட்டாங்க. அவங்கல்லாம் 'தமாவோடம்மா ரொம்ப மோசம்டி, கொஞ்சங்கூடச் சுதந்திரமா இருக்க விடறதில்லே'ன்னு கேலி செய்யறப்போ எனக்கு நாக்கைப் பிடுங்கிட்டுச் சாகலாம் போலிருக்கு!''

''அவ ஃபிரண்ட் வீடுதானே கமலம்? விடு. இந்தக் காலம் சுதந்திரமாக இருக்கும் காலம். நாமும் காலத்தோட நகரணும்.'' — இது தந்தையின் பரிந்துரை.

காலத்தோடு எப்படி நகர்வதாம்? அது காட்டாற்று வெள்ளமாய், கல்லையும் மண்ணையும், செடிகளையும் மரங்களையும், ஆடு மாடுகளையும், மிதக்கும் படகையும் எல்லாம் அடித்துக் கொண்டு போகிறது. மலை சரியும் போது மலையில் உள்ள மரங்களெல்லாம் வேர் பறிக்க விழுந்து சாவது போல, ஒரு கொடி தறிகெட்டு வெள்ளத்தோடு போக நேர்ந்தால் அதற்கு இடம் கொடுத்த பெரு மரமும் வேர்

எங்கள் அங்கீகாரம் பெற்ற சந்தா வசூலிப்பவரிடம் உள்ளூர் அன்பர்கள் நேரிடையாக சந்தா செலுத்தலாம். வெளியூர் வாசிப்பவர்கள் M. O. மூலம் சேர்த்துக் கொள்ளவும்.



ஊங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
காம்ப்ளான் 23சத்துக்களும் கொண்டது
Complan
காம்ப்ளான் — முழுமையான உணவு
சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

பறிக்க விழுவது போல... மனசில் என்னென்னவோ உவமைகள் தோன்றுகின்றன.

வேரைப் பறித்துக் கொண்டு ஓட்டத்தோடு ஓடும் மரத்துக்கு என்ன எதிர்காலம்? எங்கோ மரக் கட்டைத் துண்டாய் ஒதுங்கும். அடுப்பு எரிப்பார்கள். இல்லையேல் நல்ல மரமாக இருந்தால் வெட்டி அறுத்து அலமாரி, நாற்காலி செய்வார்கள். ஆனால் அதற்குப் பழமையில்லை; தொடர்ச்சியான பரம்பரை இல்லை.

கதைகளில் இடறி விழுந்த பெண் ஆஸ்பத்திரியில் வெள்ளைச் சீருடை அணிந்து கொள்வாள்; ஆபீசரானாள். பழைய கேடு செய்தவனைச் சந்திப்பாள். மங்களமாகும். வாழ்க்கையில் எப்படி?

''குழந்தைவேலு வீட்டிலே - வீட்டைக் காலி செஞ்சிட்டு வேரோடு போயிட்டாங்களாமே? சொல்லிக்காமலே போயிட்டாங்க!''

''அதுதெரியாதா? அவருடைக்கே மாற்றல் வாங்கிக்கிட்டுப் போயி மூணு மாசமாச்சே? பிரபாகரும் உமேஷும் ஹாஸ்டல்லே சேர்ந்து படிக்கிறாங்க.''

''அட, மககூடக் கல்லூரியிலே படிக்கக் கிட்டிருந்தது? இங்கேயே வீடு கட்டிட்டு செட்டிலாறதா மனை வாங்கிப் போட்டிருந்தாங்க? மூவாயிரம் மைல்தான் ஓடியிருக்குதுன்னு, பழைய விலைக்குக் கார் வேறு வாங்கினாங்க. திடீர்னு மாற்றல் வந்திட்டதா?''

பெண் மக்களுக்கு ரகசியம் தங்காது என்று சாபம் கொடுத்தவன், அதை அவர்கள் அனுபவித்துக் கொஞ்சம் கொஞ்சமாக அவிழ்த்து இழைய விடும் கலையாக வளர்த்திருப்பதைக் கண்டால் ஏன் சாபம் கொடுத்தோம் என்று நினைத்திருப்பான். மெள்ள உள்ளாடையை மாற்றும் நளினத்துக்கு இறங்கி மெருகு கொடுப்பார்கள்.

''என்ன பண்றதும்மா? பாவந்தான். நல்ல குடும்பம். மானிங்க. தலை குனிவு வந்தாச்சே? நஷ்டத்துக்குக் காரை வித்து, வீட்டை ஒழிச்சிட்டு மாற்றல் கேட்டுட்டோ, லீவிலேயோ போயிட்டாங்க...''

''பாவம். அவங்களுக்கா இப்படிக் கஷ்டம்? நல்ல பொண்ணுங்களைக் கலியாணம் கட்டுறதே குதிரைக் கொம்பா யிருக்கு. இதுக்குத் தெரிஞ்சு....''

''கவனியாம விட்டுட்டாங்க. விஷப் பாம்பு போலத் தீண்டிடிச்சி. எதுக்குப் பொண்ணுங்களை அடக்கி வளன்னு சொல்லியிருக்காங்க? அது கண்டமாவிக்கும் டிரஸ் பண்ணணிக்கும்.''

உடம்பெல்லாம் எரிகிறது.

குழந்தைவேலு குடும்பம் மாற்றல் வாங்கிக் கொண்டு சென்றபோது இப்படி யெல்லாம் செய்தியின் விருவிருப்பைக் கிளர்ச்சியுடன் சொல்லி அநுதாபங்களை உதிர்த்தவர்களில் அவளும் ஒருத்தி. இப்போது கையில் பை கனமாக இருக்கிறது. நடை தொய்கிறது. வெயில் கண்களைக் குத்துகிறது.

உள்ளே ஓர் அனல்; வெளியே ஓர் அனல். உள் அனலை விழுங்க வேண்டும்; வெளி அனலை விசித் தள்ளிக் கொண்டு நடக்க வேண்டும்.

சிவப்பு முக்கோணம் பளீரென்று பார்வையைக் கபளீகரம் செய்து கொள்வது போல் முன்னே வாயைப் பிளந்து கொண்டு நிற்கிறது. டாக்டரின் பெயர், பட்டங்கள், இரண்டு மாடிக் கட்டிடத்தின் வெண்மையும் பகுமையுமான தோற்றம் எதுவும் கண்களில் படியவில்லை.

மாடிப் படிகளில் ஏறுகையில் வராந்தாவில் செவிகளில் வளையங்களும் நெற்றியில் பளிச் சென்ற குங்குமமும், வெள்ளைக் கோட்டுமாக டாக்டர் எதிர்ப்படுகிறான். சிரிப்பு.

''குட் மார்னிங் டாக்டர்!...'' என்று சொல்ல எழும் நா மடிந்து விழுவது போலிருக்கிறது.

டாக்டர் சிரிக்கிறான். அவன் முதுகைத் தட்டுகிறான்.

''டோன்ட் வொரி. ஷி இஸ் ஓ. கே. எவ்ரிதிங் இஸ் ஆல்ரைட்...''

''டாக்டர்...?''

அவனுக்கு அவசரம். சிரித்து விட்டுப் போகிறான்.

சில்லென்ற காற்று பிடரியில் வந்து படிகிறது. இலேசான நச்சுக் கொல்லி வாசனை மூச்சில் மென்மையாகக் கலக்கிறது. ஒரே துப்புரவு.

மொஸைக் தரையில் நிழல் தெரிகிறது பளபளக்கும் வெள்ளி மெருகுக் கைப்பிடிகள்; கழலும் விசிறிகள்; கண்களுக்குக் குளிர்ச்சியான பூந்தொட்டிகள்...



ஒரு மாணவன் முதல்வரிடம் சொன்னான்: ''நீங்கள் உங்கள் கல்லூரியில் எனக்கு ஒரு இடம் தராவிட்டால் நான் எங்கேயாவது ஓடிப் போய்விடுவேன்!''

முதல்வர் உடனே சொன்னார்: ''கொஞ்சம் இரு. நானும் உன்னுடன் வந்து விடுகிறேன்.''



அம்மா: ஏன் அவனை இப்படித் திட்டுகிறீர்கள்?

அப்பா: அறிவு கெட்ட கழுதை. 300 மார்க் வாங்கியிருந்தால் எப்படியாவது சிபாரிசு பிடித்து ''ஸீட்'' வாங்கியிருப்பேன். 400 வாங்கியிருக்கான். எவன் சிபாரிசு பண்ணுவான்? நிச்சயமாய் இவனுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கப் போவதில்லை.

—கே. வி. யெம்.



'கங்காரு' என்றால் ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் மொழியில், ''நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?'' என்று அர்த்தம். காப்டன் குக் ஆஸ்திரேலியாவுக்கு வந்த போது ஒரு மிருகத்தைச் சுட்டிக்காட்டி, ''அதன் பெயர் என்ன?'' என்று கேட்டார். ''கங்காரு'' என்றான் ஒரு பழங்குடி மனிதன். அந்தப் பெயர் நிலைத்து விட்டது. ''காரெனெட்'' — ''மூத்து''

கந்தையாக இப்போது முந்நூறு ரூபாய் அவளே கொடுப்பாள். எதிரே நர்ஸ் ஒருத்தி வருகிறாள். வெள்ளைச் சேலை. அடுக்கடுக்கான கொசுவங்கள் அடிவயிற்றில்தான் தொடங்குகின்றன. நர்ஸானால் என்ன? பெண்:.. இங்கே ஆண் நோயாளிகள் இல்லாவிட்டால், பெண்களைக் கொண்டு விடுபவர்கள் வர மாட்டார்களா?

நெற்றி, முகமெல்லாம் வியர்வை பூத்துக் குளமாகிறது. கைக்குட்டையால் துடைத்துக்கொள்கிறாள்.

உள்ளே குழந்தை எப்படி இருக்கிறானோ? அவனும் மணியாய் வளர்ந்து வேறான குழந்தை.

'''ஷி இஸ் ஜஸ்ட் எ சைல்ட்' அவளைக் கோபித்துக் கொள்ளக் கூடாது. மலர் நெஞ்சு துவண்டுவிடும்.''

கண் ஓரங்களைத் துடைத்துக் கொண்டு திரையை நீக்கி, உள்ளே அடி வைக்கிறாள். இளநீலச் சேலை தெரிகிறது.

''தமா...? கண்ணு...!''

தமா சட்டென்று எழுந்து உட்காருகிறாள். கூந்தல் மடியில் துவண்ட பின்னலாக விழுந்திருக்கிறது. முகத்தில் சோபை இழந்த வாட்டம் இருந்தாலும் கண்களில் ஒளி குறையவில்லை. சுற்று முற்றும் பார்க்கிறாள். 'கேஸ் ஷீட், கட்டக்காகிதம் ஒன்றுமில்லை. கட்டிக் கொண்டு கதற வேண்டும் போலிருக்கிறது.

''என்னம்மா கொண்டு வந்திருக்கே? காலமே ரொட்டி கொடுத்தாங்க. அது பிடிக்கலேயில்லே. ஒரு தோசை ஏதாலும் வாங்கித் தரச் சொல்லலான்னு யாருமில்லே. ஓரேயடியாய்ப் பசிக்குது...''

இவ்வளவு சகஜமாக அவள் பேசுவது தெம்பாக இருக்கிறது.

''நான் சாப்பாடு கொண்டாந்திருக்கேன். காலையிலே அப்பா வரலே?''

''அப்பா வாசல்லயே நின்னிட்டு எட்டிப் பார்த்திட்டுப் போயிட்டாரு. ஒரு தோசை வாங்கிக் குடுங்கன்னேன். காதிலே விழலே. டாக்டர் இனிமே ஒண்ணுமில்லே, நல்லாச் சாப்பிட்டு உடம்பைத் தேத்திக்கிடலான்னு சொன்னாங்க...''

அவள் பையைத் திறந்து சாப்பாட்டு அடுக்குகளைப் பிரித்து வைக்கிறாள். மிளகு ரசமும் சோறும் கலந்து கரைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். நெய்யும் கறிவேப்பிலையும் மிதக்கின்றன. கத்திரிப் பிஞ்சு கருகப் பொரியல்.

தலைநகரிலோ வேறு பெரு நகரிலோ நாகரிக உடுப்பணிந்து மருமகன் என்ற இளைஞன் காரில் அலுவலகம் செல்கிறான். தமாவின் கை நிறைய வளையல்கள் குலுங்குகின்றன. தொட்டிலில் ஒரு பூரண நிலவின் மாத்திரை கண் துயிலுகிறது. புதிய நிறைவும் ஒளியுமாக ஒரு தாய் பத்தியச் சோற்றைச் சுமந்து வந்து பார்க்கிறாள்...

நீர்த் திரையில் எல்லாச் சித்திரங்களும் கரைந்து போகின்றன. ஆண்டவனே! இதெல்லாம் நடக்குமா? நடக்கப் போகிறதா? இனி முழுமை எப்படி வரப் போகிறது? அடித்துக் கொண்டு போகும் வெள்ளத்தில் முழுமை மிஞ்சப் போகிறதா?

''கண்ணு, நளினி அண்ணன் என்ன படிச்சிட்டிருக்கிறான்?''

அவள் முகத்தில் விருவிரென்று சுரம் ஏறுகிறது.

''போம்மா, இதெல்லாம் கேட்டுக்கிட்டு!''

''பின்ன கேக்காம என்னம்மா பண்ணுறது? படிப்புப் போதும்; இனி கல்யாணம் கட்டிடலாம்னு அப்பாவே சொல்லிட்டாரு!''

''நீங்க ஒண்ணும் நளினி வீட்டிலே போய்க் கேக்க வேணும்! நானொண்ணும் கலியாணம் கட்டிக்கத் தயாராயில்லே!''

உடலில் ரத்தம் அனைத்தும் கண்டிப் பொடிப் பொடியாய் உதிர்ந்து விட்டாற் போலிருக்கிறது. செவிகளில் ஙொய்யென்று ஒரு பிரமை.

''அப்படீன்னு, அவன்... அவன்... நளினி அண்ணனில்லையா?''

''போம்மா! நான் மறக்க நினைக்கிறதையே நினைப்பு மூட்டறதிலே உனக்கு ஒரு சந்தோஷம். என்னை எப்பவும் விரோதிபோல நினைக்கிறது உன் வழக்கம். குத்துப் பட்டு விழுந்த எதிரியைக் குத்தும் கொடுமை உனக்கு.''

''கண்ணு, நீ... நீயா இப்படிச் சொல்றேம்மா? என் மனசு நொந்து கிடக்கும்மா.''


''அப்படீன்னு இப்ப ஏன் அழுது ஸீஸ் பண்ணுறீங்க? எந்த மலை உச்சிலேந்தும் நான் இப்ப விழுந்திடல்லே. கொஞ்சம் சகஜமா 'பிஹேவ்' பண்ணுங்க. அது போதும்.''

தமா கையைத் தட்டிலேயே கழுவிவிட்டுத் தலைப்பக்கக் கட்டிலில் இருக்கும் துண்டை எடுத்துத் துடைத்துக் கொள்கிறாள்.

முன்பு இடையில் விட்ட பத்திரிகைத் தொடர்கதையைப் புரட்டிக் கொண்டு படுக்கையில் சாய்கிறாள்.

அதன் அட்டையில் சாண் அகலமில்லாத துணியுடன் ஒரு கோலம் கண்களைக் குத்துகிறது: குருதியைத் தோற்றுவிக்கிறது.

ஐந்தே
காசு
போதும்
உங்கள்
குடும்பம்
பெருகாமல்
தடுக்க!



நிரோத்

உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

15 காசுக்கு 3

அரசாங்க ஆதரவினால் குறைந்த விலை

வேண்டுமென்றபோது மட்டுமே பேறு...

வேண்டுமென்றபோது மட்டுமே இன்று மக்கட்பேற்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிரோத் உதவும்.

தாய் சேய் இருவரின் தேகநலம்...

குழந்தைகள் சரியான வளர்ச்சி பெற, முதல் மூன்று நான்கு வருடங்கள் அவர்களுக்கு விசேஷமான பராமரிப்பு தேவை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். பேற்றில் இழந்த தேக வலுவை மீண்டும் பெற தாய்க்கும் சிறிது காலம் பிடிக்கும். நிரோத் உபயோகிப்ப தனால், அடுத்த பேற்றைச் சுலபமாகத் தள்ளிப் போடலாம்.

நிரோத் (காண்டோம்) உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம் ஆண்களுக்கானது. எளிமையான, தீமையற்ற நிரோத் உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது. இதை உபயோகிப்போரின் தேகநலம் பாதிக்கப்படுவ தில்லை. நிரோத் எங்கும் கிடைக்கும்

நிரோத், வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, மருந்துக் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை ஆகியவற்றில் கிடைக்கும்.

dvp 70/67



பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூபாய் 15/- பரிசு பெறுகிறது.

என் தங்கையின் 10ம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்துக்கு மேல் உறை போட எடுத்தேன். போடுவதற்கு முன்பு படித்துப் பார்த்தேன். அது அரசு வெளியிட்ட புத்தகம். அதில் பக்கங்கள் சரியாக இல்லை. மாறி மாறி இருந்தன. புத்தகம் வாங்கிய கடையில் திருப்பிக் கொடுத்து வேறு புத்தகம் ஒன்று வாங்கினேன். அதிலும் எழுத்துக்கள் சரியாகத் தெரியவில்லை. அச்சு மேல் அச்சு. அத்துடன் பின்பக்கம் உள்ள எழுத்து முன் பக்கமும், முன் பக்கம் உள்ள எழுத்து பின் பக்கமும் தெரிந்தன. அந்தப் புத்தகத்தை மறுபடியும் கொடுத்து வேறு வாங்கினேன். தனியார் துறையாக இருந்தால் இம்மாதிரி இருக்காது.

குடியாத்தம்,
19–6–70 ஏ. என். சுப்பிரமணியன்

பாட்டில் பாலில் கண்ணாடித் துண்டை இரு முறை கண்டெடுத்தேன். பாலைக் காய்ச்சும் பொழுது கரண்டியால் கலக்குகையில் ஏதோ சத்தம் வந்தது. வடிகட்டிப் பார்த்ததில் கண்ணாடித் துண்டு கிடைத்தது. பாட்டில்களில் பாலை ஊற்றும் மிஷின்களின் அருகில் நிற்கும் மேற்பார்வையாளர்களின் பிசகாலும் பாட்டில்களை அலட்சியமாக உபயோகப் படுத்துவதினாலும் இவ்வித தவறு ஏற்படுகிறது. கவனம் தேவை. பாட்டில் பாலை அருந்தும் ஆயிரக்கணக்கான மக்களின் நலனுக்காக இனி இவ்வித சம்பவம் நடக்காமல் பாதுகாப்பது மாதவரத்தின் பொறுப்பு!

சென்னை–4
9–6–70 எஸ். கமலா

எல்லாப் பள்ளிகளிலும் இன்ஸ்பெக்ஷன் நடைபெறுவது நல்லதே. ஆனால் கண்காணிப்பு அதிகாரி வருகிறார் என்பது ஒரு வாரம் முன்னதாகவே பள்ளிகளுக்கு அறிவிக்கப்படுகிறது. இதனால் எல்லாப் பள்ளிகளிலும் அதிகாரி வரும்பொழுது இரண்டு மூன்று நாட்கள் பள்ளியைச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் சீருடையில் காணப்படுகிறார்கள். மாணவர்களுக்கு நடத்தாத பாடங்களையும் மிக வற்புறுத்தி அவசரம் அவசரமாய் நடத்துகிறார்கள். இந்நிலை ஏன்? கண்காணிக்க வரும் நாட்களைக் கூறாமல் திடீரென இன்ஸ்பெக்டர் வந்தால் ஒவ்வொரு பள்ளியின் உண்மை நிலவரம் அதிகாரிகளுக்கு விளங்கும். மேலும் அதிகாரி இன்று வருவார், நாளை வருவார் என்று எதிர்பார்த்துக் கடைசிவரை சிறப்பாக ஒவ்வொரு பள்ளியும் நடைபெறும்.

தம்மம்பட்டி
17–6–70 வி. ஜீவா

சென்ற 14–6–70 கல்கி இதழில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாருடைய 'முன்னேற்றத்துக்கு வழி' என்ற கட்டுரையை மீண்டும் வெளியிட்டமைக்கு மிக்க நன்றி.

கம்யூனிஸ்ட் தத்துவம் மலர்ந்து வரும் இன்றைய மாணவ சமுதாயத்துக்கு முழுதும் பயன்தரத் தக்கதொரு கருத்துக் கருவூலம். ''கடவுள்'' என்ற சொல்லுக்கு அவர் தரும் விளக்கம் ஒன்றே இருளை அகற்றி ஒளி தர வல்லது.

பொரையார்
25–6–70 சித. இராமநாதன்

கல்கி ஜூன் 7ம் இதழில் 'பயிற்சிமொழி' என்ற தலையங்கத்தைக் கண்ணுற்றேன்.

திரு இராஜாஜி அவர்கள் 'பயிற்சிமொழி' என்பதற்குப் புதிய விளக்கத்தை வெளியிட்டுள்ளார். அதில் திரு இராஜாஜி அவர்கள் விஞ்ஞானம், சரித்திரம், பொருளாதாரம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும்போது ஆங்கிலம் மற்றும் தாய்மொழி ஆகிய இரண்டையும் பயன்படுத்தலாம் என்று யோசனை கூறியுள்ளார். மொழிப் பிரச்னை என்ற ஒன்று கிளம்புவதற்கு முன்பு அன்றாடது கருத்து உயர்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வந்தது. தாற்காலிகமாக நின்றுள்ள இதனைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வரலாம். திரு இராஜாஜி அவர்கள் கூறியிருப்பது முற்றிலும் வரவேற்கத்தக்க ஒன்று. இப்படி செய்வதால் மாணவர்களுக்கு இருமொழிப் பயிற்சி ஏற்படுகிறது என்றும் கூறியுள்ளார். இது எவ்வளவு உண்மை என்பதை ஆசிரியர் குழாம் அறியும். ஏன் இவ்வளவு திண்மையான உண்மையைச் செயல்படுத்துவதில் முனையக் கூடாது?

சென்னை–49
19–6–70 ரா. ஸ்ரீநிவாசன்

தம்பொழில் இலக்கியத் திருவிழாவை யொட்டி 1969ன் மிகச் சிறந்த இலக்கியப் பணியாற்றிய பத்திரிகைகளுக்குப் பாராட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டன. நூறு பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் அளித்த கருத்தறிக்கைகளின் அடிப்படையில் இவ்விருதுகள் அறிவிக்கப்பட்டன.


1969ன் சிறந்த புதினங்களை வெளியிட்ட பத்திரிகைக்கான விருதை கல்கி பெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

கல்கியில் எழுதிய புதினத்துக்காகவும் பிறவற்றுக்காகவும் திரு இந்திரா பார்த்தசாரதி 1969ன் சிறந்த புதின எழுத்தாளராகப் பாராட்டு விருது பெறுகிறார் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

கோவை-15 ரா. கிருட்டிணசாமி
15–6–70 (செயலாளர்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

‘அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரே போல் கெட்டிக்காரி!’





ஆனால், சில நாட்களுக்கு முன் அவளுக்கு ஒரே மந்தம். நான் டாக்டரை விசாரித்தேன்.

டாக்டர் சொன்னார்: “அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்.”

ஹார்லிக்ஸ் சாப்பிட்ட பின் அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரேபோல் கெட்டிக்காரியாக மாறிவிட்டாள்!



ஹார்லிக்ஸ் அவளைக் கெட்டிக்காரியாக மாற்றிற்று

வளரும் குழந்தைகளுக்கு தெம்புடன் திகழத் தேவையான அதிக சக்தியை அளிக்க ஹார்லிக்ஸ் உதவுகிறது. டாக்டர்கள் குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். உங்கள் மகளுக்கும் ஹார்லிக்ஸ் தேவை!

ஆடைச் சத்து நிறைந்த பாலுடன் கோதுமை மாவு மற்றும் மால்டெட் பார்லியின் போஷாக்குச் சத்துக்கள் சேர்ந்தது

ஹார்லிக்ஸ் அதிக சக்தியை அளிக்கிறது!

HL 7573 A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon